Registered as a News Paper in Sri-lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU


முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 04 சனிக்கிழமை (20.10.2012) பக்கங்கள் 20 ஓசை – 020




















# இராஜதந்திரப் பொறிமுறைகளில் புலிகளுக்கு நம்பிக்கை இருக்கவில்லை



## அம்பலமாக்கியது விக்கிலீக்ஸ்

(ஒஸ்லோ)

அரசுடனான சமாதான நடவடிக்கைகளின் போது விடுதலைப் புலிகள் இராஜதந்திர நடவடிக்கைகளில் எதுவித அக்கறையும் செலுத்தவில்லை என்பதுடன் அவ்வாறான இராஜதந்திர பொறிமுறைகளில் அவர்கள் நம்பிக்கை வைத்தவர்களாகவும் தோன்றவில்லை என்று இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்ததாக விக்கி லீக்ஸ் தகவல் வெளியிட்டிருக்கிறது.

எரிக்சொல்ஹெயிமிடமிருந்து பெற்றுக்கொண்ட மேற்படி தகவல்கள் இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் அமெரிக்க இராஜாங்கத் திணைகளத்திற்கு அனுப்பிவைத்த அறிக்கையில் காணப்பட்டதாக விக்கிலீக்ஸ் மேலும் தகவல் வெளியிட்டிருக்கிறது.

தேர்தலின் வெற்றியை நோக்காகக் கொண்டு இலங்கை அரசாங்கம் செயற்பட்ட அதேநேரம், விடுதலைப் புலிகளின் முன்னாள் அரசியல்துறை ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் மரணமானதை அடுத்து, அந்த அமைப்புடன் தொடர்புகளை பேணுவதற்கான உரிய மார்க்கங்கள் இல்லாது போனதாகவும் எரிக்சொல்ஹெய்ம் குறிப்பிட்டதாக விக்கிலீக்ஸ் மேலும் குறிப்பிட்டுள்ளது.

## யாழில் கனமழை பொழிவு மாதகலில் வெள்ளப் பாதிப்பு

### உடனடி உதவியாக உணவுப் பொதி விநியோகம்

(மாதகல்)

கனமழை காரணமாக மாதகலில் அண்மையில் மீள்குடியேறிய மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் இம்மக்களுக்கு உடனடி உதவியாக நேற்று உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்பின் பேரில் மாதகல் மக்களுக்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினர் இந்த உணவுப் பொதிகளை வழங்கியுள்ளனர்.

யுத்தத்திற்கு பின்னரான மீள்குடியேற்றத்தின் பின்னர் மக்கள் அங்கு மீளக்குடியமர்ந்துள்ள நிலையில் தற்போது பெய்துவரும் பருவ மழைகாரணமாக அப்பகுதி மக்கள் பல்வேறு இடர்பாடுகளை எதிர்கொண்டுள்ளனர். இந்த நிலையில் அந்த மக்களுக்கான அடிப்படைத் தேவைகளில் ஒன்றான உணவுப் பொதியினை அமைச்சரின் பணிப்புரைக்கமைய ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) ஆகியோர்

19 ஆம் பக்கம் பார்க்க

## குறிகாட்டுவான் – நயினாதீவு விரைவில் "பாதை" சேவை

(நயினாதீவு)

குறிகாட்டுவானிலிருந்து நயினாதீவுக்கு பாதைச் சேவையொன்று விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

பாதை அமைக்கும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக இரும்புகள் தருவிக்கப்படுகிறது. கடல்மார்க்கமாக குறுந்தூரத்திற்குப் பொருட்களையோ வாகனங்களையோ ஏற்றிக் கொண்டு செல்வதற்குப் பயனபடுத்தப்படும் இப்பாதைச் சேவையில் குறிகாட்டுவானிலிருந்து நயினாதீவுக்கான இச்சேவை விரைவில் இடம்பெறவுள்ளதாகத்

19 ஆம் பக்கம் பார்க்க

## கண்ணி அகற்ற நிதியில்லை; வெளியேறுகிறது இந்திய நிறுவனம்

இந்திய கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்திற்கு போதிய நிதி ஒதுக்கீடு இன்மையால் வடக்கில் இருந்து வெளியேறவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. யுத்தம் காரணமாக வட பகுதியில் புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு பல அமைப்புக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இதற்கமைய கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு இந்திய நிறுவனமும் பணிகளில் ஈடுபட்டு வந்தது. எனினும் இந்த வருடம் நவம்பர் மாதத்துடன் இந் நிறுவனத்திற்கான நிதி ஒதுக்கீடு முடிவடைவதால் இப்பணிகளை முடித்துக்கொண்டு இந்நிறுவனம் வெளியேறவுள்ளது. இந்திய நிறுவனம் மன்னார் மாவட்டத்தில் வெள்ளாம்குளம் பகுதியில் தற்போது கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## ஜெனிவாவில் இலங்கைக்கு நெருக்கடியில்லை

ஜெனிவாவிலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நவம்பர் முதலாம் திகதி முதல் இலங்கை தொடர்பில் ஆரம்பிக்கப்படவுள்ள கூட்டத்தொடர் அரசாங்கத்திற்கு எந்தவொரு வகையிலும் பாதகமாக அமையாது என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகம தெரிவித்துள்ளார்.

யு.பி.ஆர். எனப்படும் சர்வதேச தவணைமுறை மீளாய்வுக் கூட்டத்தொடரில் நவம்பர் முதலாம் திகதி முதல் 5 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் இலங்கையினால் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை தொடர்பிலான கலந்துரையாடல்கள் இடம்பெறும்.

இந்தக் கூட்டத்தொடரில் அமைச்சர் மகிந்த சமரசிங்க கலந்து கொள்வதுடன் இவருக்கு மேலதிகமாக விசேட குழுவொன்று ஜெனிவா செல்லத் தயாராக உள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் கூறியுள்ளார். ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்புரிமை பெற்றுள்ள நாடுகள் நான்கு வருடங்களுக்கு ஒரு தடவை மேற்படி யு.பி.ஆர். கூட்டத்தொடருக்கு சமுகமளிப்பது வழக்கமாகும். அந்த வகையிலேயே எமது அரசாங்கம் சார்பிலான பிரதிநிதிகளும் நவம்பர் முதலாம் ,திகதி ஆரம்பிக்கப்படவுள்ள கூட்டத்தொடரில் கலந்து கொள்ளும் வகையில் ஜெனிவா செல்லவுள்ளனர். இக்கூட்டத் தொடர் குறித்த சரியான

19 ஆம் பக்கம் பார்க்க

## பொது விடுமுறை திகதி மாற்றம்

புனித ஹஜ் பெருநாளை முன்னிட்டு எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை பொது விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஹஜ் பெருநாளை முன்னிட்டு எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பொது விடுமுறை நாளாக முதலில் அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், புனித ஹஜ் பெருநாள் 27 ஆம் திகதி கொண்டாடப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டதனைத் தொடர்ந்து, பொது விடுமுறை 27 ஆம் திகதிக்கு மாற்றம் செய்யப்படுவதாக பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது. பிறை காண்பதன் அடிப்படையில் புனித ஹஜ் பெருநாள் 27 ஆம் திகதி சனிக்கிழமை கொண்டாடப்பட உள்ளதாக கொழும்பு பெரிய பள்ளி வாசல் அறிவித்துள்ளது.

இணையத்தில் தினமுரசு
www.thinamurasu.net

## யாழ் – சென்னை விமானசேவை வர்த்தகர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணத்திற்கும் தமிழகத்திற்கும் இடையில் கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்துகளை ஆரம்பிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேணடும் என்று யாழ்ப்பாணத்தில் உள்ள இலங்கைக்கான இந்திய தூதரகத்தின் துணை அதிகாரி மகாலிங்கத்திடம் யாழ். நகர வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்திருக்கின்றார்கள்.

யுத்தச் சூழல் தோன்றுவதற்கு முன்னர் தமிழகத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் பலாலி ஊடாக விமானப் போக்குவரத்தக்கள் நடைபெற்றிருந்தன. எனினும் யுத்த மோதல்கள் ஆரம்பிக்கப்பட்டதையடுத்து பல வருடங்களாக இந்த

19 ஆம் பக்கம் பார்க்க

# கள்ள மரம் கடத்தல் விவகாரம் மாங்குளத்தில் 8 பேர் சிக்கினர்

(யாழ்ப்பாணம்)

மாங்குளம் கனகராயன்குளம் மற்றும் ஓமந்தைப் பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் காட்டு மரங்களை வெட்டி அவற்றை எடுத்துச் செல்ல முற்பட்ட எட்டுச் சந்தேக நபர்கள் பொலிஸாரினால் கடந்த வாரம் கைது செய்யப்பட்டிருப்பதாக யாழ்பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

கடந்த 12 ஆம் திகதி மாங்குளம் காட்டுப் பகுதியில் சட்ட விரோதமாக முதிரை மரங்களை வெட்டி அவற்றை உழவு இயந்திரத்தில் ஏற்றிச் சென்ற நான்கு பேர் மாங்குளம் பொலிஸாரினால் பிடிக்கப்பட்டு உழவு இயந்திரமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதேவேளை, இதே காட்டுப் பகுதியில் பிறிதொரு இடத்தில் உழவு இயந்திரம் ஒன்றில் பாலை மரக்குற்றிகளை ஏற்றிச் சென்ற இருவர் ஓமந்தைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு மரக்குற்றிகளும், உழவு இயந்திரமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

மேலும் கடந்த 12 ஆம் திகதி கனகராயன்குளம் பொலிஸாரினால் அதே பகுதியில் முதிரை மரக்குற்றிகளும், முதிரைப் பலகைகளால் செய்யப்பட்ட 22 கதவுகளும், 27 ஜன்னல்களும் மீட்கப்பட்டுள்ளதுடன், ஒரு சந்தேக நபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா பாவற்குளம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மரக்காலை ஒன்று பொலிஸாரினால் சீல் வைக்கப்பட்டு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக பொலிஸார் நீதிமன்ற நடவடிக்கைகளின் நிமித்தம் அவர்களை நீதிமன்றில் பாரப்படுத்தியதாகவும் தெரியவருகின்றது.

நேற்று யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே பிரதிப் பொலிஸ் மா அதிபர் இதனைத் தெரிவித்தார். (பா)

## கட்டுமீறிச் செல்கிறது கஞ்சா வியாபாரம்

(வவுனியா)

வவுனியா மாவட்டம் கோவில்குளம் பகுதியில் 4 கிலோ 600 கிராம் கஞ்சா வவுனியா பொலிஸாரினால் மீட்கப்பட்டிருப்பதாக யாழ்.பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே பிரதிப் பொலிஸ் மா அதிபர் இதனைத் தெரிவித்தார்.

குறித்த பகுதியில் கடந்த 14 ஆம் திகதி ஒரு சந்தேக நபர் தனது உடைமையில் இந்த நிறையுடைய கஞ்சாவை வைத்திருந்த போது வவுனியாப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்தே இந்தக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதனை வைத்திருந்த சந்தேக நபர் ஏக்கலையைச் சேர்ந்தவர் எனவும், இவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு வவுனியா நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டதாகவும் யாழ்.பிரதிப் பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டார்.

## நூலகங்களுக்கு கிடைக்கிறது விருது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபையின் சரசாலை, மிருசுவில், கைதடி, நாவற்குழி பொது நூலகங்களுக்கு தேசிய ஆவணமாக்கல் சபையினால் விருது வழங்கப்படவுள்ளது.

கடந்த வருடம் தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளை ஒழுங்காக திறம்பட நடத்தியமைக்காகவே இச்சபையினால் இவ்விருது வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் 31 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள நிகழ்வில் வைத்து இவ்விருது வழங்கப்படவுள்ளதுடன், இவ்விருதினைக் குறித்த நூலகங்களைச் சேர்ந்த நூலகர்கள் பெற்றுக்கொள்ளவுள்ளனர். (11)

## வேட்டையாடியவர் கைது

(நெடுங்கேணி)

நெடுங்கேணிக் காட்டுப் பகுதியில் மான் வேட்டையாடிய ஒருவர் நெடுங்கேணிப் பகுதியில் வைத்து பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருப்பதாக யாழ்.பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

மேற்படி கைதாகிய நபர் வவுனியா நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (பா)

## பூர்த்தி செய்யப்படாத வீதிப் புனரமைப்பு

மணியம்தோட்டம், உதயபுரம் கடற்கரை வீதிப் புனரமைப்பு வேலைகள் பூர்த்தி செய்யப்படாமல் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளதால் போக்குவரத்துச் செய்வோர் படாதபாடுகள் படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கற்கள் போட்டு நெரிக்கப்பட்டுள்ளதுடன் தார் போடாமல் கைவிடப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. மணியம் தோட்டம் சந்தியில் இருந்து ஒரு கிலோ மீற்றர் கடற்கரை ஓரமாக மேற்படி வீதி அமைந்துள்ளது.

வீதியை விட்டு ஓரங்களில் செல்ல முடியாமல் மழை நீர் தேங்கி நின்று சகதியாக மாறியுள்ளது. சமீபத்தில் உதயபுரம் பகுதிக்குச் சென்று குடியமர்ந்த குடும்பங்களில் இருந்து நோயாளர் மற்றும் மாணவர்கள் மிகுந்த சிரமங்களுக்கு மத்தியிலே ஏனைய பகுதிகளுடனான தொடர்புகளைப் பேணி வருவதாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது. (68)

## பரிசு வாய்ப்புக்களுடன் புத்தகக் கண்காட்சி

(குருநகர்)

யாழ்.மத்திய கல்லூரியில் நேற்று முதல் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை தினமும் காலை 9.00 மணி முதல் மாலை 6.30 வரை புத்தகக் கண்காட்சியும், விற்பனையும் நடைபெற்று வருகின்றது.

'நாம் வாசிப்பை தேசத்திற்கு காண்பிப்போம்' என்னும் மகுட வாசகத்துடன் இலங்கையின் முன்னணிப் புத்தக நிலையமான எம்.டீ.குணசேன நிறுவனத்தின் ஏற்பாட்டில் மேற்படி நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இருபது சதவீத தள்ளுபடி மற்றும் ஆயிரத்து 500 ரூபாவுக்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு லப்ரொப், டப்லட் மற்றும் எலெக்ரோனிக் டிக்ஷனரி ஆகியவற்றையும் வெல்லும் வாய்ப்புகளும் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (68)

# சின்னஞ்சிறு செய்திகள்

## பட்டப்பகலில் திருட்டு

நெல்லியடி நகரப் பகுதியில் அமைந்துள்ள ஆசிரியர் வீடொன்றில் நேற்று முன்தினம் பிற்பகல் 3.00 மணியளவில் இரண்டு பவுண் தங்கச் சங்கிலி, தொலைக்காட்சிப் பெட்டி, பணம் என்பன திருடப்பட்டுள்ளது.

ஆசிரியர் கோவிலுக்குச் சென்ற சமயம் இந்த திருட்டு நடைபெற்றுள்ளது. இந்த வீட்டில் இரு பக்கமும் கடைகள் அமைந்துள்ளது. பெருமளவான மக்கள் நடமாடும் இந்தப் பகுதியில் இத்திருட்டுச் சம்பவம் நடைபெற்றுள்ளதால் பொது மக்கள் மத்தியில் ஆச்சரியமும், பீதியும் எழுந்துள்ளது. (18)

## மின்சார சபையில் இரத்ததான நிகழ்வு

இலங்கை மின்சார சபையின் 43 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு இலங்கை மின்சார சபையின் வடமாகாண ஊழியர் நலன்புரி மற்றும் விளையாட்டுச் சங்கத்தினால் இரத்தான நிகழ்வு நடத்தப்படவுள்ளது.

பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகம், இலங்கை மின்சாரசபை, 500, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 2.00 மணி வரை நடைபெறும் இந்த இரத்ததான நிகழ்வில், இலங்கை மின்சார சபையின் வடமாகாண உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் பங்கு பற்றவுள்ளனர்.

## நெற்செய்கைக்கு கடனுதவி

பெரும்போக நெற்செய்கைக்கென கல்வயல் விவசாய சம்மேளனத்தின் ஊடாக கடனுதவி பெற விண்ணப்பித்தவர்களுக்கு திங்கள் முதல் சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளையின் ஊடாக இக்கடனுதவி வழங்கப்படவுள்ளது.

பெரும்பாக உத்தியோகத்தர் சத்தியேந்திராவின் அனுசரணையுடன் ஏற்பாடு செய்யப்பட்டு பிணையுறுதிகள் வழங்கப்பட்ட 175 பயனாளிகளுக்குமான கடனுதவிகள் வங்கி முகாமையாளா சேதுகாவலரினால் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் இக்கடனுதவிகள் வழங்கப்படும் என்று கல்வயல் விவசாய சம்மேளனத்தின் செயலாளர் கா்.வேதநாயம் தெரிவித்தார்.

விண்ணப்பித்தவர்களில் 10 பேர் கொண்ட குழுக்களின் அடிப்படையில் இக்கொடுப்பனவுகள் வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## அபராதம் விதிப்பு

நெல்லியடிப் பகுதியில் அனுமதியின்றி இறைச்சிக்காக மாடு வெட்டிய ஒருவருக்கு பருத்தித்துறை நீதிமன்றம் 20 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துள்ளது.

கடந்த வாரம் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே பிரதிப் பொலிஸ் மா அதிபர் இதனைத் தெரிவித்தார். (பா)

## லயன்ஸ் கழக கூட்டம்

வடமராட்சி லயன்ஸ் கழக அங்கத்தவர்களுக்கான கூட்டம் இன்று மாலை 4.30 மணிக்கு வதிரி செவிப்புலனற்றோர் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

லயன்ஸ் கழகத்தின் தலைவர் எஸ்.பத்மநாதன் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் நெல்லியடி புதிய லயன்ஸ் கழகம் ஆரம்பிக்கப்படுவதற்கு எடுக்கப்படும் முயற்சிகள் தொடர்பாகவும், எதிர்கால வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடவிருப்பதால் சகல அங்கத்தவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு வடமராட்சி லயன்ஸ் கழகச் செயலாளர் த.ம[illegible]திரன் தெரிவித்துள்ளார். ([illegible])

## வளவாளர்களுக்கான கலந்துரையாடல் இன்று

வடமராட்சி கல்வி வலயத்தினால் தரம் 11 இற்கு வரலாறு பாடத்தைக் கற்பிக்கும் வளவாளர்களுக்கான கலந்துரையாடல் இன்று காலை 10.00 மணிக்கு யாழ்.வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடல் எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறவிருந்த நிலையில் க.பொ.த. உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் நடவடிக்கையை அடுத்தே இன்று இடம்பெறவுள்ளதாக வடமராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. புஸ்பலிங்கம் அறிவித்துள்ளார். ([illegible])

## பத்திரிகையாளர் சந்திப்பு

நல்லூரான் பிக்சர்ஸ் தயாரிப்பில் கலைஞர்களின் முயற்சியால் உருவான 'என்னுள் என்ன மாற்றமோ' திரைப்பட வெளியீட்டு நிகழ்வு சார்ந்த பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றினை நடத்துவதற்கு நல்லூரான் பிக்சர்ஸ் நிறுவனத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

இன்று மாலை 3.00 மணியளவில் Cambridge Management College, No-28, கச்சேரி நல்லூர் வீதி, (கச்சேரி முன்பாக) யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இச்சந்திப்பு இடம்பெறவுள்ளது.



கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரியின் அதிபர் திருமதி ஜெயந்தி தனபாலசிங்கம் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட 250 இற்கும் மேற்பட்டோர் நேற்று சிவதீட்சை பெற்றுக்கொள்வதையும், கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ ச.ஜெகதீஸ்வரக் குருக்கள் சிவதீட்சையை வழங்கி வைப்பதைக் காணலாம். (142)

# பெற்றோர்களின் அர்ப்பணிப்பே பிள்ளைகளின் உயர்வுக்கு காரணமாகிறது

## முன்பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளர் எஸ்.தில்லைநாதன்

(வடமராட்சி)

அர்ப்பணிப்புடனான செயற்பாடுகள் மூலமே பெற்றோர்கள் தமது பிள்ளைகளை நல்ல ஆளுமையுள்ள சிறுவர்களாக வளர்த்தெடுக்க முடியும் என வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளர் எஸ். தில்லைநாதன் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை இலங்கை வங்கிச் சிறுவர் தின நிகழ்வு அண்மையில் வங்கி முகாமையாளர் ஏ.தர்மராசா தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தம் உரையில் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு குழந்தையைப் பெற்றுவிட்டு பெற்றோர்கள் அகமகிழ்வதுடன் நின்றுவிடாது அவர்களை முழுமையாக சமூகத்தில் முழு மனிதர்களாக்க வேண்டிய பாரிய பொறுப்புண்டு. ஒரு றோசா மொட்டு எவ்வாறு மலராக வாசனை வீசுகிறதோ அவ்வாறே சிறார்களை உருவாக்க வேண்டும். தமது பிள்ளைகளுக்கு நல்ல போசனையுள்ள உணவைத் தாமே தயாரித்து வழங்கி உடலாரோக்கியத்தை வளர்க்க வேண்டும். இதனூடாக உள ஆரோக்கியம் பேணப்படும். பெற்றோர்களின் நல்ல முன்மாதிரியான செயற்பாடுகள் உள ஆரோக்கியத்தை மேலும் மேம்படுத்த உதவுகின்றது.

சிறுவர்களைப் பாதுகாக்க ஐக்கிய நாடுகள் சபை சிறுவர் உரிமை சாசனத்தை உருவாக்கி நடைமுறைப்படுத்தி வருகிறது.

இதற்குதவியாக யுனிசெவ் அமைப்பு தனித்து இயங்கி வழிகாட்டி வருகிறது. மக்களிடையே விழிப்புணர்வையும், சிறுவர்களைப் பாதுகாக்கவும், நலன் பேணவும், ஒக்ரோபர் முதலாம் திகதி சிறுவர் தினமாகப் பிரகடனப்படுத்தி கொண்டாடி வருகின்றோம்.

தற்காலத்தில் விஞ்ஞான ரீதியிலான நவீன தொலைத் தொடர்பு சாதனங்களை தமது கைக்குள் பிள்ளைகள் வைத்திருக்கின்றனர். இவற்றை சரியாகப் பயன்படுத்தி சாதனைகள் படைக்க வேண்டும்.

ஆனால் இன்று தவறான வழியில் இவை பயன்படுத்தப்பட்டு சமூக கலாசார சீர்கேட்டை உருவாக்கியுள்ளது.

இதனால் சிறுவர் துஷ்பிரயோகம் மலிந்து வருகிறது. எனவே பெற்றோர்கள் இதனைக் கட்டுப்படுத்த முன்வருவதுடன் ஆன்மிக சிரத்தையுடைய பிள்ளைகளாகவும் வளர்த்தெடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

(116)

# தமோதரம்பிள்ளையின் 180 ஆவது ஜனனதினவிழா

(வலிகாமம்)

சிறுப்பிட்டியின் தமிழ்ப் பேரறிஞர் இராவ்பகதூர் சி.வை. தமோதரம்பிள்ளையின் 180 ஆவது ஜனன தினவிழா நடைபெறவுள்ளதாக தாமோதரம்பிள்ளை ஒன்றியம் அறிவித்துள்ளது.

இவ்விழா சிறுப்பிட்டி கலைவாணி சனசமூக நிலையத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் வி.கே.கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தி னராக முன்னாள் தமிழ்த்துறைப் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா கலந்து கொள்ளவுள்ளார். வாழ்த்துரையினை வலி.கிழக்கு பிரதேச செயலர் ம.பிரதீபன், அறிமுகவுரை யினை உலகத்தமிழர் பண்பாட்டுக்கழகத் தலைவர் வேல் வேலுப் பிள்ளை ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

இவ்விழாவில் சைவத்தமிழ் பணியாற்றிய சைவப்புலவர் இ.செல்லத்துரை கௌரவிக்கப்படவுள்ளார். இவ்விழாவில் நடனம், நாடகம், பட்டிமன்றம் முதலான கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. இவ்விழாவையொட்டி நடத்தப்பட்ட பேச்சு, கட்டுரை, கவிதைப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களிற்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

(06)

# நீர்த் தடாகங்களில் மீன்குஞ்சுகள்

(யாழ்ப்பாணம்)

டெங்கு நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் செயற்றிட்டமாக நீர்த்தடாகங்களில் மீன்குஞ்சுகள் விடப்பட்டுள்ளன.

யாழ்.மாநகர சபையின் சுகாதாரப் பிரிவினரால் நேற்று முன்தினம் மாநகரசபை எல்லைக்குட்பட்ட சில நீர்த்தடாகங்களில் இம் மீன்குஞ்சுகள் விடப்பட்டுள்ளன.

யாழ்.பொது நூலகம், சுப்பிரமணியம் பூங்கா, கோயில் வீதியில உள்ள ஆசிரமம், வண்ணைப்பகுதியில் உள்ள நீர்த்தடாகம், குருநகர் தொடர்மாடி வீட்டுத் தொகுதி மற்றும் பொதுக்கிணறுகளிலும் இம்மீன் குஞ்சுகள் சுகாதாரப்பிரிவினரால் விடப்பட்டுள்ளன. நுளம்பு பெருக்கத்துக்கு ஏதுவான குடமிகளை இம்மீன்கள் உணவாக்கிக் கொளவதனால் நுளம்புகளின் பெருக்கம் கட்டுப்படுத்தப்படும் என்று யாழ்.மாநகர பிரதம பொது சுகாதாரப்பரிசோதகர் க.ஆ.ஜீவானந்தன் தெரிவித்துள்ளார். (இ)

# ஆங்கில வகுப்பு

(பருத்தித்துறை)

மேலைப்புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கத்தினால் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் நவராத்திரி விழாவன்று ஆங்கில வகுப்புக்களை ஆரம்பிக்கவுள்ளது.

இவ்வகுப்புக்கள் அடுத்து வருடம் தரம் 1, 2, 3, 4 இல் கல்வி பயிலவுள்ள மாணவர்களுக்கு பயிற்சிபெற்ற ஆசிரியர்களைக் கொண்டு நடத்தப்படவுள்ளது.

இவ்வகுப்பில் சேர்ந்து கல்வி பயிலும் மாணவர்கள் வலயமட்டத்தில் நடைபெறும் ELRC பரீட்சைக்கு உள்வாங்கப்பட்டு சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இவ்வகுப்புக்கு பிரவேசக் கட்டணமாக 50 ரூபாவும், மாதாந்தக் கட்டணமாக 150 ரூபாவும் அறவிடப்படும் விண்ணப்பப் படிவத்தை மாலை நேரங்களில் சங்கப்பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம் என அறிக்கப்பட் டுள்ளது.

(109)

# அங்குரார்ப்பண நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு காங்கேசன் துறை மேற்கு ஜே/233, காங்கேசன் துறை மத்தி ஜே/234, காங்கேசன்துறை தெற்கு ஜே/235 ஆகிய கிராம அலுவலர் பிரிவுக்கான கிராமிய அபிவிருத்திச் சங்கங்களுக்கான அங்குரார்ப்பண நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் முற்பகல் 11.00 மணிக்கு நடைபெறவுள்ளது. எனவே அக்கிராம அலுவலர் பிரிவுகளைச்சேர்ந்த மக்களை (18 வயதிற்கு மேற்பட்டோர்) குறித்த தினம் தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் ஒன்று கூடுமாறு காங்கேசன்துறை உதயசூரியன் சனசமூக நிலைய செயலாளர் இ.விஜய் அறிவித்துள்ளார்.

# சாதாரண தர மாணவர்களுக்கு வழிகாட்டல் கருத்தரங்கு

(பருத்தித்துறை)

மாகாணக்கல்வித்திணைக்களத்தினால் 2012 இல் க.பொ.த சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளது.

இக்கருத்தரங்கில் கணிதம் இன்று சனிக்கிழமையும், நாளை மறுதினம் திங்கட்கிழமை தமிழ், 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆங்கிலம், 24 ஆம் திகதி புதன் வரலாறும், 25 ஆம் திகதி வியாழக்கிழமை வர்த்தகமும் இடம்பெறவுள்ளன.

இக்கருத்தரங்கில் வழமைபோல் இம்முறையும் மத்திய கல்வி அமைச்சினால் தயாரிக்கப்பட்ட வினாத்தாள்கள் அனைத்துப் பாடசாலைகளுக்கும் வழங்கப்படவுள்ளது.

கருத்தரங்கு நடைபெறவுள்ள திகதிக்கு முதல் நாள் குறித்த பாடத்திற்குரிய வினாத்தாள்கள் மாணவர்களுக்குப் பாடசாலையில் விநியோகிக்கப்படும். 100 மாணவர்களுக்கு குறையாத குழுக்களாகப் பிரித்து கருத்தரங்குகள் பொருத்தமான இடங்களில் ஒழுங்கு செய்யப்படும். இக்கருத்தரங்குக்குரிய வளவாளர்களாக பாடசாலை ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், உதவிக் கல்விப்பணிப்பாளர்கள் பங்கு கொள்ளவுள்ளனர்.

கருத்தரங்குகள் ஒவ்வொன்றும் 3 மணி நேரத்திற்கு மேற்பட்டதாக முழு வினாப்பத்திரங்களும் கலந்துரையாடப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(109)

# இராணுவ முகாமில் டெங்கு; படைவீரர் மருத்துவமனையில்

(யாழ்ப்பாணம்)


தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மாவிட்டபுரம் பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமில் கடமையாற்றும் இராணுவ வீரர் ஒருவர் டெங்கு நோய்த் தொற்றுக்கு இலக்காகிய நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் நேற்று சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

28 வயதுடைய பிகிரிடும்பன என்ற இராணுவ வீரரே இவ்வாறு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை தொற்று நோய் தடுப்புப் பிரிவு அதிகாரி தெரிவித்தார்.

இந்த நோய்த் தொற்றுக்குள்ளாகிய மேலும் ஐந்து பேர் நேற்றைய தினம் வைத்திய சாலையில் அனுமதிக் கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இவர்களில் நல்லூர் சுகாதாரசேவைப் பிரிவில் திருநெல்வேலிப் பிரதேசத்தில் இருந்து மூன்று பேரும், சண்டிலிப்பாய் சுகாதார சேவைப் பிரிவில் இருந்து சாவல்கட்டுப் பகுதியில் ஒருவரும் மற்றும் யாழ். பிறவுன் றோட் பகுதியில் இருந்து ஒருவரும் இவ்வாறு டெங்கு நோய்த் தொற்றுக்கு இலக்காகிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவாகளுடன் இந்த மாதத்தில் டெங்கு நோய்த் தொற்றுக்கு இலக்காகி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டவர்களின் எண்ணிக்கை 83 ஆக அதிகரித்துள்ள அதே வேளை, இந்த வருடத்தில் 350 பேர் இந்த நோய்த் தொற்றுக்கு இலக்காகியும், இருவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்திருப்பதாகவும் யாழ்.போதனா வைத்திய சாலையின் தொற்று நோய்த் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

(பா)



யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட வறிய குடும்பங்களுக்கு நுளம்பு வலைகள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன. நாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் மாநகர சுகாதார குழுத்தலைவர் கா.விஜயகாந்த் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதனையும், உள்ளூராட்சி சபைகளின் யாழ்.பிராந்திய பிரதம பொது சுகாதார பரிசோதகர் ஜீவநாதன் பயனாளி ஒருவருக்கு நுளம்பு வலைகள் வழங்குவதையும் பயனாளிகள் அமர்ந்திருப்பதையும் காணலாம். (படங்கள்: ஆர்.ராஜ்குமார் )

மற்றவர்களுடைய துன்பத்தைக் கண்டு இரக்கப்படு; ஆனால் உன்னுடைய சொந்த துன்பங்களை உன்னிடமே வைத்திரு! -அகிடன்பிரபு

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## பள்ளத்தில் இறக்கிய சரித்திரம்!

பதின்மூன்றாம் அரசியல் திருத்தத்தை அகற்ற நினைத்தால் இலங்கை இந்திய உறவு உடையும் என்று எச்சரித்திருக்கிறார் தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சுரேஷ் பிரேமச்சந்திரன். அதேபோல தமிழரசுக் கட்சியின் நியமனப் பட்டியல் உறுப்பினரான சுமந்திரனும், 13–வது திருத்தத்தின் மூலம் மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை அரசாங்கம் குறைப்பதற்கு முயலக் கூடாது என்று கேட்டிருக்கிறார்.

கொஞ்ச நாட்களுக்கு முன்னர் பதின்மூன்றாவது திருத்தத்தைப் புறங்கையால் தள்ளிவிட்டுக் கதைபேசிக் கொண்டிருந்தவர்கள், இப்போது இதையாவது காப்பாற்ற முடியுமா என்ற சந்தேகத்திற்கு வந்துவிட்டதையே வெளிக்காட்டுகிறார்கள். ஏனென்றால், இப்போதிருக்கும் நிலைமையில், இலங்கை அரசாங்கம் 13–வது திருத்தத்திற்குக் குறைவான ஒரு திருத்தத்திற்கு இந்தியாவைச் சம்மதிக்கச் செய்துவிட்டால், பிறகு இவர்கள் அந்தத் திருத்தத்தையேனும் காப்பாற்ற முடியுமா என்று அழுதுகொண்டு நிற்கப் போகிறார்கள்.

வடக்கு கிழக்கு இணைந்த மாகாண சபை பின்னர் சந்திரிகாவின் தீர்வுப்பொதி எல்லாவற்றையும் இவர்கள் வீரவசனம் பேசிப் பேசியே நிராகரித்தவர்கள். இப்போது 13–வது திருத்தத்திற்கும் வீரவசனத்தையே பேசிக்கொண்டு நிற்கிறார்களே தவிர, அதையும் தக்கவைத்துக் கொள்ளும் திட்டங்கள் எதுவும் இவர்களிடமில்லை.

இதோ ஒரு மாதத்திற்கு முன்னர் நடந்த தேர்தலில்தான் வடக்கு கிழக்கு இணைப்பைக் கைவிட்டு கிழக்கு மாகாண ஆட்சியைப் பிடிக்க ஓடித்திரிந்தது போல, 13–வது திருத்தத்தையும் பாழாக்கிவிட்டு, வடக்கு மாகாண ஆட்சியைப் பிடிக்க இவர்கள் ஆலாய்ப் பறக்கப் போவதை அடுத்த வருடமே நாம் பார்க்கப் போகிறோம்!

எல்லாக் காலகட்டத்திலும் பேச்சில் மட்டும் வீரமும் ரோசமும் குறைவுபட்டுவிடாமல் முழங்கிவந்திருக்கிறார்களே தவிர, கிடைக்கவிருந்ததையெல்லாம் பேட்டுடைத்துக் குழப்பிக் குழப்பி, தீர்வுப்பொதியின் அதிகாரங்களைக் குறைத்துக் குறைத்தே வருகிறார்கள். பட்டுவேட்டி தராமல் எதையும் உடுத்தவே மாட்டோம் என்று எல்லாவற்றையும் நிராகரித்து நிராகரித்து வந்து, கோவணத்திற்குக் கூப்பாடு போடும் நிலைக்குத் தமிழ்மக்களைக் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறார்கள்.

இன்று 13–வது திருத்த அதிகாரங்களும் மேலும் குறைக்கப்பட்டால் அதைத் தடுக்கவும் எந்த வக்குமில்லாமல் வெறுமனே கூச்சலை மட்டும் போடும் இவர்கள், வடக்கு கிழக்கு இணைந்திருந்த 13–வது திருத்தத்தை ஏற்றுக்கொள்ளாதது பற்றியோ, ஏறத்தாழ சமஷ்டிக்கு இணையான சந்திரிகாவின் தீர்வுப் பொதியை ஐ.தே.க.வுடன் சேர்ந்து எரித்துக் கும்மாளமிட்டது பற்றியோ எந்த சுயவிமர்சனமும் செய்வதில்லை.

இப்போது 13–வது திருத்தத்திற்காக கூப்பாடு போடும் இவர்கள், இதையும் விட்டுவிட்டு நாளைக்கு இன்னும் கீழான அதிகாரங்களுக்காக இறங்கிநின்று அழுகுரல் வைப்பார்கள் என்பதே இவர்கள் செய்துகொண்டிருக்கும் உணர்ச்சிகரப் பம்மாத்து அரசியலின் தேறிய விளைவு.

இவ்வாறே தமிழ்மக்களுக்குக் கிடைக்க வேண்டியவற்றைக் குறைத்துக் குறைத்து வந்திருக்கிறார்கள். ஒருவேளை நாளைக்கே யூ.என்.பி. அரசாங்கம் வந்துவிட்டால், இவர்கள் சமஷ்டி, இணைப்பு, பதின்மூன்று எல்லாவற்றையும் தொபுக்கடீர் என்று போட்டுவிட்டு, மாவட்ட சபைகளுக்கான் தேர்தலுக்கும் இறங்கிவிடுவார்கள் என்பது இவர்களது சரித்திரத்தை அறிந்தவர்களுக்கு வியப்பாக இராது. - ஆசிரியர்

# விடைத்தாள் மதிப்பீட்டு கலந்துரையாடல் பல்கலை விரிவுரையாளரும் பங்கேற்பு

(கொழும்பு)

இம்முறை உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் தொடர்பான கலந்துரையாட்லில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் முதற்தடவையாக பங்கேற்றுள்ளனர்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சம்மேளனம் மேற்கொண்டிருந்த தொழிற்சங்க நடவடிக்கை முடிவுக்கு வந்ததை அடுத்து நேற்றுமுன்தினம் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளை மேற்கொள்ளவுள்ள சுமார் 400 விரிவுரையாளர்கள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சம்மேளனத்தின் செயலாளர் கலாநிதி டெரன்ஸ் மதுஜித் தெரிவித்தார். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் எதிர்வரும் 25ஆம் திகதி தொடக்கம் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளில் பங்குபற்றுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் தொடர்பான அடுத்த கலந்துரையாடல் நடைபெற்றதன் பின்னர் பரீட்சைகள் திணைக்களத்துடன் இணைந்து விரிவுரையாளர்கள் இந்த நடவடிக்கையை முன்னெடுப்பார்கள் என கலாநிதி டெரன்ஸ் மதுஜித் தெரிவித்தார். எதிர்வரும் நவம்பர் மாதம் ஏழாம் திகதிக்கு முன்னதாக அனைத்து நடவடிக்கைகளையும் பூர்த்தி செய்வதற்கு பரீட்சைகள் திணைக்களம் உத்தேசித்துள்ளது. பரீட்சைகள் திணைக்களத்திற்கு ஒத்துழைப்பை வழங்க விரிவுரையாளர்கள் சம்மேளனம் தயாராக இருப்பதாகவும் கலாநிதி டெரன்ஸ் மதுஜித் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# நகரசபை அமர்வுகளில் பொதுமக்களுக்கு அனுமதி

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை நகர சபையின் உறுப்பினர்களுக்கான மாதாந்த மற்றும் விசேட கூட்டங்களில் பார்வையாளர்களாகக் கலந்து கொள்வதற்கு பொதும்க்களுக்கும் எதிர்வரும் கூட்ட அமர்வுகளில் இருந்து அனுமதிக்கப்படவுள்ளதாக நகர சபைத்தலைவர் நடராஜா அனந்தராஜ் தெரிவித்துள்ளார்.

பொதுமக்களுக்கான ஜனநாயகப் பண்பு நிறைந்த அரசியல் ரீதியாக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், கூட்ட அமர்வுகளில் உறுப்பினர்களால் மக்கள் நலன் சார்ந்த தீர்மானங்களை எடுக்கும் பொழுது அவை தொடர்பான விவாதங்களினூடாக மக்களின் நியாயப்படுத்துகையை வளர்ப்பதற்கும் இளைய தலைமுறை உறுப்பினர்களிடையேயும் சிறந்த ஜனநாயகப் பண்புகளையும் கூட்டநடைமுறைகளையும் அறிந்து சிறந்த அரசியல் தலைமைத்துவத்தை உருவாக்குவதற்கும் ஏற்ப சட்ட நடைமுறைகள் உள்ளதால் இந்த ஒழுங்குமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதில் பார்வையாளர்களாகக் கலந்து கொள்ள விரும்பும் பொதுமக்கள் முன்கூட்டியே செயலாளரிடம் விண்ணப்பிக்க வேண்டும் என்றும் அவ்வாறு விண்ணப்பிப்பவர்களில் இருந்து முன்னுரிமை அடிப்படையில் ஒவ்வொரு அமர்வுக்கும் 20 பேர் என்ற அடிப்படையில் பார்வையாளர்களாகக் கலந்து கொள்வதற்கான அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்படவுள்ளன.

சபையின் கூட்டங்களுக்கு பார்வையாளர்களாகக் கலந்து கொள்ளமுடியுமே தவிர, எவ்வித கருத்துக்களையும் தெரிவிப்பதற்கு சட்டத்தில் அனுமதி இல்லை.

மேற்படி கூட்டங்களில் பார்வையாளர்களாகக் கலந்து கொள்ள விரும்பும் பொதுமக்கள், தமது முழுப்பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம், தொடர்பு கொள்ளக் கூடிய தொலைபேசி இலக்கம் ஆகியவற்றைக் குறித்து அலுவலகத்தில் இருந்து அதற்கான படிவத்தில் நிரப்பி பொது சன தொடர்பு அதிகாரியிடம் கையளிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

இந்த நடைமுறையானது உள்ளூராட்சி மறுசீரமைப்பின் கொள்கைகளுக்கு ஏற்ப மக்கள் பங்களிப்பை அதிகரித்தல் என்ற விதிமுறைக்கு அமைவாக மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் ந.அனந்தராஜ் தெரிவித்துள்ளார்.

# லலித், குகன் வழக்கு டிசம்பர் மாதத்திற்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த டிசம்பர் மாதம் 10 ஆம திகதி யாழ்ப்பாணத்தில் கடத்தப்பட்டு காணமற்போன லலித், குகன் ஆகியோர் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று முன்தினம் முற்பகல் யாழ். நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு மீண்டும் எதிர்வரும் டிசம்பர் மாதம் 13 ஆம் திகதிக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இவ் வழக்கு விசாரணைகளின் போது லலித் குகன் சார்பில் நிரான் அங்காபடே, றுவான் கோபகே ஆகிய சட்டத்தரணிகள் ஆஜராயிருந்தனர். எதிர்த்தரப்பில் ஜெகான்டிசில்வா ஆஜராகியிருந்தார். அத்துடன் குகனின் மனைவி, நாம் இலங்கையர் அமைப்பின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் உதுல் பிரேமரட்ண, அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் இராணுவ அதிகாரி ஒருவரும் இவ்வழக்கு விசாரணைகளின் போது சமுகமளித்திருந்தார்.

இந்த வழக்கு விசாரணையில நாம் இலங்கையர் அமைப்பின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் சட்டத்தரணி உதுல் பிரேமரட்ண சாட்சியமளித்தார்.

இவர் தனது சாட்சியத்தின் போது, நாம் இலங்கையர் அமைப்பின் உறுப்பினரான லலித் வடக்குக் கிழக்கில் மனித உரிமைகள் சம்பந்தமான நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக இருந்தார். கடந்த வருடம் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி சர்வதேச மனித உரிமைகள் தினத்தன்று யாழ். நகரில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துவதற்கான வேலைகளில் ஈடுபட்டிருந்தார். அந்தச் சமயம் அங்கு காணாமல் போனவர்களது உறவினர்கள் மற்றும் அரசியல் கைதிகளின் உறவினர்களையும் சந்தித்தார். குகன் என்பவர் அமைப்பின் உறுப்பினர் அல்ல. அவர் லலித்தின் நெருங்கிய நண்பர். லலித்தின் நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருந்தவர். குகனின் வீட்டிலேயே லலித் தங்கிச் செல்வது வழமை. இந் நிலையிலேயே அவர்கள் கடந்த வருடம் டிசம்பர் 10 ஆம் திகதி அமைப்பின் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது யாழ்ப்பாணத்தில் கடத்தப்பட்டு காணாமல் போயுள்ளார் எனச் சாட்சியமளித்துள்ளார்.

மேலும் அன்றைய தினம் இது குறித்து யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டதுடன் பாதுகாப்பு அமைச்சின் செயலாருக்கும் தெரியப்படுத்தப்பட்டதாகவும் தெரிவித்தார்.

அதுதவிர கடத்தப்பட்டுக் காணாமல் போயிருந்த சில்சிருலதையும் விடுவிக்கக்கோரி யாழ் நகரில் ஆர்ப்பாட்டம் ஒன்றும் தமது அமைப்பினால் நடாத்தப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். இவரது வாக்குமூலத்தை அடுத்து இந்த வழக்கு விசாரணை மீண்டும் 13 ஆம் திகதி நீதவானால் ஒத்திவைக்கப்பட்டது.(பா)

## மாணவ தலைவி தாக்குதல்; சக மாணவி காயம்

(கொழும்பு)

பாணந்துறை பாடசாலையொன்றைச் சேர்ந்த மாணவத் தலைவியொருவர் சக மாணவியொருவரைத் தாக்கியதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. தாக்குதலுக்கு உள்ளானதாகத் தெரிவிக்கப்படும் சக மாணவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பாணநதுறை பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி மாணவத் தலைவி, மேல் மாடியில் இருந்தவாறு சக மாணவி மீது கடலையை வீசித் தாக்கியுள்ளார். இதற்கு அவர் கோபப்பட்டு தனது எதிர்ப்பை தெரிவித்ததை அடுத்து தன் மீது அம்மாணவத் தலைவி கடுமையாகத் தாக்கியதாகப் பொலிஸில் அவர் தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பாணந்துறை பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**மற்றவர்கள் முந்துவதற்கு முன்னர் சிறிதரன் முந்திக்கொண்டு போராட்டத்திற்கு அழைப்பு விட்டதுடன் மட்டும் நிற்காமல், முடிவில் விடுதலைப் புலிகளின் தளபதிகள் யுத்தகாலத்தில் ஆற்றியது போன்று ஆற்றிய உரையில், அரசாங்கத்தின் மீது சர மாரியான குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ள சிறி தரன், தனியாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ மற்றும் கிளிநொச்சியில் உள்ள இராணுவ உயர் அதிகாரிகளையும் தனியாகச் சந்தித்து அவர்களுடன் கதைக்கின்ற விடயங்கள் எவையும் வெளியில் வருவதுமில்லை, சிறிதரன் அரச பிரதிநிதி-களை சந்திப்பதாக ஊடகங்களுக்கு ஒரு போதுமே அறிக்கைகளை விடுவதுமில்லை.**




# கூட்டமைப்பின் வீதிப் போராட்டங்கள் தொடர்ந்து எடுபடுமா?

■ **வே.அர்ச்சுணன்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் குத்து வெட்டுக்கள், குழிபறிப்புக்கள் என்பனவற்றின் மத்தியில் இடையிடையே மக்களுக்காக வீதிகளில் இறங்குகிறோம் நில அபகரிப்புக்கு எதிராக போராடுகிறோம் என்ற தோரணையிலான போராட்டங்கள் வவுனியா தொடக்கம் யாழ்ப்பாணம் வரை அடிக்கடி அரங்கேறி வருகிறது. இத்தகைய போராட்டங்களை யார் முன்னின்று நடத்துவது என்பதிலும் கூட்டமைப்பிற்குள் பலத்த போட்டி நிலவிவருகிறது.

வவுனியாவில் சிவசக்தி ஆனந்தனும் கிளிநொச்சியிலும் யாழ்ப்பாணத்திலும் சிறிதரனும் இத்தகைய போராட்டங்களை ஒழுங்குபடுத்தி வருகின்றனர். குறித்த இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் மக்களுக்காக தாங்கள் போராடுகின்றோம்? என்று கூறியவாறு மக்களிற்கென பெருமளவான பணத்தினை வெளிநாடுகளில் சேகரித்து ஏப்பம் விட்டு வருகின்றனர். சிவசக்தி ஆனந்தன் வெளிநாடுகளில் உள்ள பொது அமைப்புக்களிடமும் தனிநபர்களிடமும், தான் சிறுவர் இல்லங்களையும், வயோதிபர் இல்லங்களையும் நடத்துவதாகக் கூறி பெருமளவான பணத்தை ஒவ்வொரு மாதமும் தானே நேரடியாகவும், தனது "கோளை்யா"வாக செயற்பட்டு வரும் சண்ணுக்கு ஊடாகவும் பெற்று வருகின்றார்.

வெளிநாடுகளில் உள்ள புலிகள் இயக்க பிரமுகர்களிடமும் இவர்கள் இருவரும் நிதி சேகரித்து வருகின்றனர். இவ்வாறு சேகரிக்கப்படும் நிதி இவர்களது தனிப்பட்ட தேவைகளுக்கு பயன்படுத்தப்படுகின்றதே தவிர பொதுமக்களின் நலன்கருதி இப்பணங்கள் பயன்படுத்தப் படுவதில்லை என வவுனியா மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். இதேவேளை வெளிநாட்டில் உள்ளவர்களை ஏமாற்றுவதற்காக சிவசக்தி ஆனந்தன் இடையிடையே வயோதிபர் இல்லங்களுக்குச் சென்று அவர்களுக்கு உணவுப் பொதிகளைக் கொடுத்துவிட்டு படம் எடுத்து வருவதும் ஊடகங்கள் ஊடாக நாம் காணுகின்ற செய்திகளாக உள்ளபோதிலும் இதன் மறுபக்கம் பெரும் மாயாஜாலங்கள் நிறைந்தது.

இவ்வாறு, பாடசாலை மாணவர்களை யுத்தகளத்திற்கு அனுப்பிவிட்டுத் தான் தப்பிப் "புகழ்"பெற்ற சிறிதரனும், வெளிநாடுகளில் உள்ள புலம்பெயர் தமிழர்களிடமும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்திடமும் இருந்து பெருமளவான நிதியினைக் கட்சிக்குத் தெரியாமல் பெற்றுவருவதாகச் சொல்லப்படுகிறது. தனது சகாக்களான பொன்காந்தன், வேளன் போன்றோரின், வங்கிக் கணக்கின் ஊடாக நிதியினைப் பெற்று விதவைகளுக்கு உதவுவதாகக் கூறி குறித்த நாடாளுமன்ற உறுப்பினரும் இவரின் கூட்டாளிகளும் பல்வேறு மாயா ஜாலங்கள் காட்டிவருவது ஒன்றும் மக்களுக்குப் புதிய விடயமல்ல.

இத்தகைய சூழ்நிலையில் வெளிநாட்டில் உள்ளவர்களை ஏமாற்றுவதற்கும் உள்நாட்டில் அரசியல் செய்வதற்கும் எப்பொழுது வாய்ப்பு வரும் என்ற காத்திருக்கும் சிறிதரனுக்கு நல்லூர் பிரதேச சபை தவிசாளர் மீதான தாக்குதல் ஒரு சாட்டாக அமைந்து விட்டது. இச்சாட்டை வைத்துக் கொண்டு தன்னை ஒரு ஹீரோவாக மாற்றிக்கொண்டு மற்றவர்கள் முந்துவதற்கு முன்னர் சிறிதரன் முந்திக் கொண்டு போராட்டத்திற்கு அழைப்பு விட்டதுடன் மட்டும் நிற்காமல் இப்போராட்ட முடிவில் விடுதலைப் புலிகளின் தளபதிகள் யுத்தகாலத்தில் ஆற்றிய உரை போன்று படை முகாம்களை அகற்றவேண்டும் என்ற தோரணையில் உரையாற்றி தமிழ் மக்களிடம் தன்னை ஒரு தளபதி போல முன்னிறுத்த முற்பட்டுள்ளார். யாழ் நகரில் இடம்பெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் கடும் போக்குடைய தமிழ்த்தேசியவாதி தான் மட்டுமே என நியாயப்படுத்த முற்பட்டுள்ளார்.

இவரின் உரையில் எங்கள் தமிழினம் காலம் காலமாக வாழ்ந்து வந்த இடத்தில் இராணுவ படை முகாம்களையும் பௌத்த விகாரைகளையும் அமைத்து இந்த நாட்டை சிங்கள பௌத்த நாடாக மாற்றும் நடவடிக்கையில் இந்த அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. எமது பிரதேசத்தில் உள்ள எத்தனையோ பாடசாலைகள் கூட இன்னும் இராணுவத்தினரால் விடுவிக்கப்படவில்லை.

அதுமட்டுமல்லாது யுத்த காலத்தில் காணாமல் போனவர்கள் தொடர்பில் நீதியான விசாரணைகள் எதுவும் நடத்தப்படவில்லை. சுமார் 20 ஆயிரம் பேர்வரை காணாமல் போயுள்ளனர். மேலும் ஜனநாயக ரீதியில் செயற்படும் மக்கள் பிரதிநிதிகளை அச்சுறுத்தி அவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டு வருகின்றது இந்த அரசாங்கம் என்று அரசாங்கத்தின் மீது சரா மாரியான .குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ள சிறிதரன், தனியாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ மற்றும் கிளிநொச்சியில் உள்ள இராணுவ உயர் அதிகாரிகளையும் தனியாகச் சந்தித்து அவர்களுடன் கதைக்கின்ற விடயங்கள் எவையும் வெளியில் வருவதுமில்லை, சிறிதரன் அரச பிரதிநிதிகளை சந்திப்பதாக ஊடகங்களுக்கு ஒருபோதுமே அறிக்கைகளை விடுவதுமில்லை.

தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் சிறிதரனால் நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்ட போராட்டத்தில் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான சரவணபவன் கலந்து கொண்டபோதிலும் வித்தியாதரனுக்கே குறிப்பாக சில ஊடகங்கள் முன்னுரிமை கொடுத்து இருந்ததை அவதானிக்க முடிந்தது. வரப்போகும் வடமாகாண சபைத் தேர்தலில் வித்தியாதரனை களம் இறக்க வேண்டும் என்பதே சிலரின் ஆசையாகவுள்ளது. இருந்தபோதிலும் கூட்டமைப்பிலுள்ள பெரும்பாலானவர்கள் வித்தியாதரனை எதிர்ப்பதுடன் வித்தியாதரன் கூட்டமைப்பில் போட்டியிட்டால் கூட்டமைப்புகிழக்கு மாகாணத்தைப் போன்று மண் கவ்வுவது நிச்சயமென வாதிட்டும் வருகின்றனர்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் வேளன் மற்றும் பொன்காந்தன் போன்றோரை மாகாண சபைத் தேர்தலில் கட்டாயம் களம் இறக்க வேண்டுமென சிறிதரன் சம்பந்தனிடம் கேட்டபோது நீர் இப்பொழுது ஏன் அவசரப்படுகிறீர் காலம் வரும் பொழுது பார்ப்போம் இப்பொழுது வாயை மூடிக் கொண்டிரும் என சம்பந்தன் எரிந்து விழுந்துள்ளார். முயற்சியைக் கைவிடாத சிறிதரன் மாவையிடம் மண்டியிட்டு தனது "கோளையா"க்களிற்கு எப்படியாவது இடம் தரவேண்டுமென தொல்லை கொடுத்து வருவதாக கூறப்படுகிறது. இதனையடுத்து சிறிதரன் தான் போகும் இடமெல்லாம் இவர்களை தற்பொழுது அழைத்துச் செல்வதைக் காணமுடிகிறது.

இம்முறை தமிழரசுக் கட்சியால் நடத்தப்பட்ட இந்தப் போராட்டத்தில் கஜேந்திரன் அணியினர் கலந்து கொண்டபோதிலும் மனோகணேசன் போன்றவர்கள் கலந்துகொள்ளாமல் தவிர்த்து வருகின்றமை இங்கு முக்கியமானது. ஏனெனில் கூட்டமைப்பிற்குள் தற்போது உட்கட்சிப் பூசல்கள் அதிகரித்துள்ள சூழ்நிலையில் மனோகணேசன் இப்போராட்டத்தில் கலந்துகொள்வதை தவிர்த்திருக்கலாம் அல்லது சுரேஸ் பிரேமச்சந்திரன் போன்றவர்கள் தடுத்திருக்கலாம் எனக் கூறப்படுகிறது. இப்போராட்டத்தில் சுரேஸ் அணியினர் மற்றும் ஆனந்தசங்கரி, சித்தார்த்தன் அணியினர் கலந்து கொள்ளாமல் தவிர்த்தமையானது, தமிழரசுக் கட்சி அவர்களுக்கு அழைப்பு அனுப்பாத காரணமாக இருக்கலாம் அல்லது இந்த வீதிப்போராட்டங்கள் ஊடாக எதையும் சாதிக்கமுடியாது என்ற முடிவுக்கு அவர்கள் வந்தமையினால் கூட இருக்கலாம்.

இருந்தபோதிலும், இடையிடையே இடம்பெறும் அசம்பாவிதங்களை வைத்துக்கொண்டு மக்களை வீதிக்கு இழுத்து பலிக்கடாவாக ஆக்க முனையும் இவ் அரசியல் சதுரங்கப் போராட்டம் தொடர்ச்சியாக எடுபடுவதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே காணப்படுகின்றது. ஏனெனில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளின் அரசியல் தொடக்கம் கூட்டமைப்பின் அரசியல் வரை நன்றாக கற்று முடித்துவிட்டார்கள். எனவே தொடர்ந்து தமிழ் மக்களை இவர்கள் ஏமாற்றமுடியாத சூழ்நிலைதான் களத்தில் காணப்படுகிறது. எனவே கூட்டமைப்பின் வீதிப் போராட்டங்கள் தொடர்ந்து எடுபடப்போவதில்லை. ●

**இப்போராட்டத்தில் சுரேஸ் அணியினர் மற்றும் ஆனந்தசங்கரி சித்தார்த்தன் அணியினர் கலந்து கொள்ளாமல் தவிர்த்தமையானது, தமிழரசுக் கட்சி அவர்களுக்கு அழைப்பு அனுப்பாத காரணமாக இருக்கலாம் அல்லது இந்த வீதிப்போராட்டங்கள் ஊடாக எதையும் சாதிக்கமுடியாது என்ற முடிவுக்கு அவர்கள் வந்தமையினால் கூட இருக்கலாம். இடையிடையே இடம்பெறும் அசம்பாவிதங்களை வைத்துக்கொண்டு மக்களை வீதிக்கு இழுத்து பலிக்கடாவாக்க முனையும் இவ் அரசியல் சதுரங்கப் போராட்டம் தொடர்ச்சியாக எடுபடுவதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே காணப்படுகின்றது. ஏனெனில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளின் அரசியல் தொடக்கம் கூட்டமைப்பின் அரசியல் வரை நன்றாக கற்று முடித்துவிட்டார்கள். தொடர்ந்து தமிழ் மக்களை இவர்கள் ஏமாற்றமுடியாத சூழ்நிலைதான் களத்தில் காணப்படுகிறது.**

# ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக அமுல்படுத்த வேண்டும்

## ஐ.நா. பேச்சாளர் தெரிவிப்பு



(ஜெனிவா)

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் முழுமையாக அமுல்படுத்த வேண்டுமென ஐ.நா. செயலர் வலியுறுத்திக் கூறியுள்ளதாக ஐ.நாவின் பேச்சாளர் மார்ட்டின் நெசர்கி தெரிவித்துள்ளார்.

இலங்கை விடயம் தொடர்பாக நேற்று முன்தினம் ஜெனிவாவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை அமைச்சர் மகிந்தசமரசிங்கவுக்கும், ஐக்கிய நாடுகளின் பொது செயலாளர் பான் கி மூனுக்கும் இடையில் சந்திப்பு ஒன்று இடம் பெற்றது.

இதன்போது இலங்கையின் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பில் இலங்கை பொறுப்புடன் நடந்துக் கொள்ள வேண்டும் என்று பான் கி மூனினால் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் ஐக்கிய நாடுகளின் பேச்சாளர் மார்டின் நெசர்கியிடம் நேற்றுமுன் தினம் கேள்வி எழுப்பப்பட்டது.

அரசாங்கம் பொறுப்புடன் நடந்துக் கொள்ள வேண்டும் என்ற கூற்றின் கருத்து என்ன என்று இன்னர் சிட்டி பிரஸ் செய்தியாளர்கள் இதன்போது கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதில் வழங்கிய பேச்சாளர், கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முறையாக அமுலாக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே இதன் பொருள் என்று குறிப்பிட்டார்.

எனினும் இதில், பொறுப்புடன் நடந்து கொள்ளல் என்பதன் பொருள் இறுதி யுத்தத்தின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல் சம்பவங்களுக்கு பொறுப்பானவர்களை தண்டிப்பது அல்லது பதவி விலக்குவது போன்ற விடயங்களை வலியுறத்துகிறதா என்று கேள்வி எழுப்பப்பட்டது.

இந்த விடயம் இலங்கையில் உள்ள சட்டத்திட்டங்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படும் என்று பேச்சாளர் குறிப்பிட்டார்.

# பணமோசடியில் ஈடுபட்ட மொசாம்பிக் பிரஜை கைது

(கொழும்பு)

வர்த்தகர்களை ஏமாற்றி 12 மில்லியன் ரூபாவை மோசடி செய்ததாக கூறப்படும் மொசாம்பிக் நாட்டவர் ஒருவரை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் கைது செய்துள்ளனர்.

இதுதொடர்பாக கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம் சந்தேக நபரை கொழும்பில் கைதுசெய்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரிஷாந்த ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள வெளிநாட்டவரான சந்தேகநபரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்த நபர் தன்னிடமிருந்த பாதுகாப்பான பெட்டியொன்றில் வைக்கப்பட்டிருந்த பச்சை நிறத்திலான ஒரு தொகை தாள்களை வெளிநாடொன்றின் டொலர் அச்சிடும் இயந்திரமொன்றிலிருந்து கிடைத்ததாகவும் அதில் ஒருவித இரசாயனம் கலப்பதன் மூலம் டொலராக மாற்றிக்கொள்ள முடியுமெனவும் வர்ததகரை ஏமாற்ற முற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன் பிரகாரம் குறித்த மொசாம்பிக் நாட்டவர் வர்த்தகரிடமிருந்து 12 மில்லியன் ரூபாவை மோசடி செய்துள்ளதாக கிடைத்த முறைப்பாட்டிற்கு அமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஒருசில வெளிநாட்டவர்களின் இதுபோன்ற மோசடிகளில் சிக்கிக்கொள்ள வேண்டாம் என வர்த்தகர்களிடமும் மக்களிடமும் பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# எரிபொருள் விநியோகத்தில் எவ்வித தடங்கலும் இல்லை

## - பெற்றோலியத்துறை அமைச்சு தெரிவிப்பு -

(கொழும்பு)

ஈரானில் இருந்து மசகு எண்ணெய் கொள்வனவு செய்வதற்கு முழுமையாகத் தடை விதிக்கப்பட்டுள்ள போதும் பற்றாக்குறையின்றி எரிபொருள் விநியோகிக்க சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பெற்றோலியத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

ஈரான்மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டுள்ள, நிலையிலும் அங்கிருந்து வருடாந்தம் 10 கப்பல்களில் எரிபொருள் கொள்வனவு செய்ய இலங்கைக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. ஆனால், ஈரானில் பதிவு செய்யப்பட்ட கப்பல்களினூடாக எரிபொருள் கொள்வனவு செய்யவும் ஈரான் வங்கிகளினூடாகக் கொடுக்கல் வாங்கல் செய்யவும் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

முன்பு விதிக்கப்பட்டிருந்த தடைகளைவிட கூடுதல் தடைகள் விதிக்கப்பட்டுள்ள நிலையில், மசகு எண்ணெய் கொள்வனவு தொடர்பில் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தினுடாக ஈரான் மசகு எண்ணெயையே சுத்திகரிக்க முடியும். ஈரான் தவிர சவூதியில் இருந்தும் மசகு எண்ணெய் கொள்வனவு செய்யப்படும் நிலையில் இதனை அதிகரிக்கவும் ஓமானில் இருந்து எரிபொருள் கொள்வனவு செய்யவும் பெற்றோலியத் துறை அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. இதுதவிர அவசர உடனடி கொள்வனவுகள் மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஈரான் மீதான அமெரிக்கத் தடை காணப்படுகிற போதும் ஏனைய நாடுகளினூடாக மசகு எண்ணெய் கொள்வனவு செய்வது தொடர்ந்து முன்னெடுக்கப்படும் எனவும் பற்றாக்குறையின்றி மக்களுக்கு எரிபொருள் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# கோப்குழு விசாரணை நாடாளுமன்றில்

(கொழும்பு)

பொது வர்த்தகம் தொடர்பான நாடாளுமன்ற செயற்குழுவான கோப் குழுவினால் இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் இடைக்கால அறிக்கை அடுத்த வாரம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

கடந்த சில மாதங்களாக 150 அரச நிறுவனங்கள் தொடர்பில் விசாரணை நடத்தியதாக கோப் குழு தலைவர் சிரேஸ்ட அமைச்சர் டி.யு.குணசேகர தெரிவித்துள்ளார். 150 அரச நிறுவனங்களில் 40 நிறுவனங்கள் தொடர்பான விசாரணை அறிக்கை அடுத்த வாரம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

கோப் குழுவால் 235 அரச நிறுவனங்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்படவுள்ள நிலையில் இவை அனைத்தும் டிசம்பர் மாதத்திற்குள் நிறைவுறும் என கோப் குழு தலைவர் கூறியுள்ளார்.

# குறுகிய அரசியல் இலாபத்திற்காக மோதலை ஏற்படுத்த முயற்சி



(கொழும்பு)

குறுகிய அரசியல் இலாபத்தை எதிர்பார்த்து சில பிரிவினர் நிறைவேற்று அதிகாரம் கொண்டவருக்கும் நீதிமன்றத்துக்கும் இடையில் மோதலை ஏற்படுத்த முயற்சிப்பதாக நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி - பொல்பிட்டி பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நாட்டை சீர்குலைக்கும் வகையில் தவறான கருத்துக்களைப் பரப்பும் நபர்கள் குறித்து நாட்டு மக்கள் சிந்தித்து செயற்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

நீதிமன்ற அதிகாரத்திலோ, சுயாதீனத்திலோ நிறைவேற்று அதிகாரம் கொண்டவர் ஒருபோதும் தலையிடவில்லை என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# றிசானா தொடர்பாகப் பேச சட்டமா அதிபர் வரவேண்டும்

## என்கிறது சவுதி

மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள இலங்கைப் பணிப்பெண் பாத்திமா றிசானா ரபீக் தொடர்பில் பேச்சுவார்த்தை நடாத்தத் தயார் என சவுதி அரேபிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

றிசானா விடுதலை தொடர்பில் பேச்சுவார்த்தை நடாத்த இலங்கை சட்ட மா அதிபர் நேரில் விஜயம் செய்ய வேண்டுமென அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது. அண்மையில் குவைத்தில் நடைபெற்று முடிந்த ஆசிய ஒத்துழைப்பு பேச்சுவார்த்தை அமர்வுகளின் போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, சவுதி அரேபியாவின் முடிக்குரிய இளவரசர் சல்மன் பின் அப்துல்அசீஸ் அல் சவூட்டை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

றிசானாவின் விடுதலை தொடர்பில் பேச்சுவார்த்தை நடாத்த சட்ட மா அதிபரை அனுப்பி வைக்குமாறு சவுதி அரேபிய பிரதிநிதிகள் இதன்போது தெரிவித்துள்ளனர்.

# சிறுவர் போராளிகள் அனைவரும் விடுதலை

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் சகல சிறுவர் போராளிகளும் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. யுத்தம் இடம்பெற்ற காலத்தில் கைது செய்யப்பட்ட மற்றும் சரணடைந்த சகல சிறுவர் போராளிகளுக்குப் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் 67 ஆம் பொதுச் சபைக் கூட்ட மூன்றாம் கமிட்டி அமர்வுகளில் கலந்து கொண்ட மனித உரிமை விவகார அமைச்சர் மகிந்த சமரசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார். 594 சிறுவர் போராளிகள் இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

12000 முன்னாள் போராளிகளில் 10985 பேர் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகத்துடன் மீள இணைக்கப்பட்டுள்ளனர். புனர்வாழ்வு முகாமில் எந்தவொரு சிறுவர் போராளியும் இல்லை என அவர் தெரிவித்துள்ளார்.

சிறுவர் போராளிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை என்ற கோட்பாட்டை இலங்கை அரசாங்கம் பின்பற்றி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். 212 முன்னாள் போராளிகள் பல்கலைக்கழக கல்வியைத் தொடர்வதாக அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

# உண்மையான நண்பர்களை அடையாளம் காணவேண்டும்

## அரசுக்கு கூறுகிறது ஹெல உறுமய

(கொழும்பு)

உண்மையான நண்பர்களை அறிந்துக் கொள்ளுமாறு ஜாதிக ஹெல உறுமய அரசாங்கத்துக்கு அறிவுறுத்தியுள்ளது. அக்கட்சியின் ஓமல்பே சோபித தேரர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பு ஒன்றில் உரையாற்றிய அவர், தவறுகளைச் சுட்டிக்காட்டுகின்றவர்களே அரசாங்கத்தின் உண்மையான நண்பர்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

அவர்கள் சரியான குறைகளை சுட்டிக்காட்டுவதால், அரசாங்கம் தமது குறைநிறைகளை சீர்செய்துகொள்ள முடியும். அத்துடன் வரவு செலவுத்திட்டத்தில் காணப்படும் யோசனைகளை பரிசீலித்து, அதற்கு வாக்களிப்பதா? இல்லையா? என்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

# வழக்குத் தாக்கல்

இரண்டு முக்கிய புலி உறுப்பினர்களுக்கு எதிராக சட்ட மா அதிபர திணைக்களம் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

வில்பத்து வனவிலங்கு சரணாலயத்தின் கொட்டகச்சி பிரதேசத்தில் வைத்து நான்கு இராணுவ வீரர்களைக் கொலை செய்ததாக இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

லெப்டினன்ட் கேணல் ஜயந்த சுரவீர உள்ளிட்ட நான்கு இராணுவ அதிகாரிகள் மீது கைக்குண்டுத் தாக்குதல் மற்றும் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

வடமத்திய மாகாண உயர் நீதிமன்றில் இந்த வழக்குத் தொடரப்பட்டுள்ளது. உதயன் எனப்படும் ஐயன் மற்றும் சிவலிங்கம் எனப்படும் சிவப்பிரகாஸ் ஆகியோருக்கு எதிராகவே வழக்குத் தொடரப்பட்டுள்ளது. பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் இவ் வழக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது.

# நிறுவனர்களுக்கு மதிப்பளிப்பது வரலாற்றுக்கு அளிக்கும் மதிப்பாகும்

## – சந்திரகுமார் எம்.பி புகழாரம் –

(கிளிநொச்சி)


எங்களுடைய கலை கலாசார பண்பாடுகள் எப்படி மறக்கப்பட்டதோ அல்லது புறக்கணிக்கப்பட்டதோ அல்லது அழிக்கப்பட்டதோ அவ்வாறே கிளிநொச்சியில் பல்வேறு சிறந்த சமூக பணிகளைச் செய்தவர்களின் பெயர்களும் ஏதோ ஒரு வகையில் மறைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த வேளையில் குருகுலம் கதிரவேலு அப்புச்சியை நினைவுகூர்ந்து இந்தக் கலாசார விழாவை முன்னெடுத்தது வரவேற்கத்தக்க விடயமே. என ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெற்ற கரைச்சிப் பிரதேச கலாசார விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

வருடத்திற்கு ஒரு முறை கலாசார விழாக்களின் போது தெரிவுசெய்யப்பட்ட சில கலைஞர்களை மேடையில் வைத்து பொன்னாடை போர்த்தி கௌரவிப்பது மட்டும் கலைகளை வளர்ப்பதாக அமையாது. ஒவ்வொரு வருடமும் சம்பிராதாய பூர்வமாக இவ்வாறு செய்வதன் மூலம் எமது கலைகள் வளர்க்கப்பட்டுள்ளதா என்றால் அது கேள்விக்குறியே.

எனவே இதற்கு அப்பால் எமது கலை கலாசாரங்களை வளர்ப்பதற்கு எல்லோரும் சேர்ந்து உழைக்க வேண்டும். அதற்கமைய நல்ல திட்டங்களைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். எம்மிடம் நிறுவன ரீதியாக ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பு உள்ளது. மாகாணம் மற்றும் மத்திய அரசின் கலாசார உத்தியோகத்தர்கள் எங்களிடம் உள்ளனர். ஆகவே நாம் உள்ளூர் கலை கலாசார மன்றங்களை இனம் கண்டு அவர்களை ஊக்கப்படுத்தி வளர்ப்பதன் மூலமும் மற்றும் நன்கு திட்டமிட்டு கலைகளை வளர்க்கும் நோக்கிலான செயற்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டும் என்றார்.



## பரமர் சங்கமம்

“எழுத்தறிவித்தவன் இறைவனாவான்” என்றால் அந்த எழுத்தையே நூலகத் தொகுத்து வழங்குபவனை எப்படி அழைக்கலாம்? தெய்வத்துள் வாழ்பவன் என்று தானே கூற வேண்டும்.

உங்களில் கனபேருக்கு இரசிகமணி கனகசெந்தி நாதனை தெரிந்திருக்காது அவரது சிறுகதை, கட்டுரை கவிதைத் தொகுதிகளைப் பார்த்திருக்கலாம்.

ஒரு தமிழ்ச் சட்டம்பியாக வாழ்ந்த அவர் பரந்த வாசகன், இலக்கியக்காரன் அவர் சட்டம்பியாரகப் படிப்பித்த காலங்களில் மாதாந்தச் சம்பளம் ஆயிரம் ரூபாவாகக் கூட இருக்காது.

அவர் அந்தக் காலத்தில் சொல்வார் ‘ஒரு ஏழை எழுத்தாளன் அவனது எழுத்தாக்கங்களைப் புத்தக உருவில் கொண்டு வாறேண்டா பெண் சாதியின் தாலிக்கொடியை அடைவு வைத்தோ அல்லே சீதனக்காணியை ஈடு வைச்சோதான் சாதிக்க முடியும்.

அதுவும் பணத்தை சிதைய விடாமல் திரட்டி தாலிக்கொடியையோ, காணியையோ மீண்டால் தான் உண்டு. இல்லையேல் அதுவும் போக வேண்டியே தான்.

எழுத்தாளனின் நிலையை அவரது இந்தக் கூற்று அழகாகப் படம் போட்டுக் காட்டுகிறதல்லவா?

அந்தக் காலத்தில் இப்ப இருப்பது போன்ற “மல்லிகைப்பந்தல்” கொடகே மாதிரி வெளியீட்டகங்கள் செயல்படவில்லை. வசதி படைத்த ஒரு சிலரே தமது படைப்புகளை நூலுருவில் கொண்டு வந்தார்கள்.

அதுவும் விற்பனைக்காகப் போடப்படுகின்ற புத்தகக் கடைக்காரர்கள் வித்துப் போட்டுப் பணத்தைக் கொடுத்தாலல்லவா? தங்களின் மூலதனத்துடன் சேர்த்து விடுவது தான் நடந்தது.

இந்நிலையில் தொண்டைமானாறு, வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம் ஒரு முன்மாதிரியைத் தொட்டிருப்பது பலராலும் வரவேற்கப்படவேண்டிய ஒன்றாக உள்ளது.

இவ்வருடம் நூற்றாண்டைக் கொண்டாடிய வித்தியாலயத்தினர் சிறுகதைப் போட்டி ஒன்றையும் தேசிய மட்டத்தில் நடத்தி பத்துப் பேர்களைத் தெரிவு செய்து பரிசில்கள் வழங்கிக் கௌரவித்ததுடன் அந்தப் பத்துக் கதைகளையும் இவ்வருடம் முடிவதற்கு முன்னதா தொகுத்து நூலொன்றையும் வெளியிட்ட இருப்பதாகவும் அறிவித்துள்ளனர்.

இதுவரை அகில இலங்கை அளவில் நூற்றுக்கணக்கான சிறுகதை, கவிதைப் போட்டிகளை பல்வேறு மட்டத்தினரும் நடத்தியுள்ளனர். ஆயினும் அவற்றை நூலுருவில் வெளியிட்டு வைக்கும் முயற்சியில் ஈடுபட்டதாக அறிய முடியவில்லை.

தேசியப் பத்திரிகைகளான ‘தினகரன்’, ‘வீரகேசரி’, குடாநாட்டு தினசரிகள் ‘ஈழநாடு’, ‘உதயன்’ மற்றும் சிற்றிதழ்களில் ‘ஞானம்’ வருடந்தோறும் ‘செம்பியன் செல்வன்’ ‘புலோலியூர் சதாசிவம்’ ஆகியோரது நினைவுச் சிறுகதைப் போட்டிகளையும் நடத்தி வந்துள்ளன.

அந்தந்தப் போட்டிக்கதைகளே ஒவ்வொரு சிறுகதைத் தொகுதிகளைப் போடுவதற்கான கதைகளைக் கொண்டிருந்தும் அத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை.

தொண்டைமானாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலயம் போன்று ஒவ்வொன்றும் தொகுதிகளை வெளியிட்டிருந்தால் எழுத்தறிவும், நூல்களின் வாசிப்பும் வளர்ந்திருக்குமெல்லே என்ன நான் சொல்லுறே.

## பால்காய்ச்சும் வைபவம்

மானிப்பாய் வலி.தென் மேற்கு பிரதேச சபையின் புதிய கட்டடத்திற்கான பால் காய்ச்சும் வைபவம் எதிர்வரும் 28 ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய கட்டடத்தில் பிரதேச சபையின் செயற்பாடுகள் எதிர்வரும் 30 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் பிரதேச சபைத் தலைவர் தெரிவித்துள்ளார். (104)

## ஏடு விநியோகம்

(இருபாலை)

நவராத்திரி தினத்தை முன்னிட்டு இருபாலையில் ‘மதுரம் கிற்’ முன்பள்ளி நிர்வாகத்தில் ஏடு இலவசமாக விநியோகிக்கப்பட்டு வருகிறது.

தேவைப்படும் பாடசாலைகள், கல்வி நிலையங்கள், முன்பள்ளிகள், கோப்பாய் டச்சு வீதியில் அமைந்துள்ள முன்பள்ளியில் பெற்றுக் கொள்ளலாம் என முன்பள்ளி நிர்வாகி கிருபாகரன் அறிவித்துள்ளார். (135)

## கலைமகள் விழா

(பருத்தித்துறை)

மேலைப்புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கமும், சதாவதானி அறநெறிப் பாடசாலையும் இணைந்து நடாத்தும் கலைமகள் விழா நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

சங்க மண்டபத்தில் தலைவர் பா.இரகுநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பூசை வழிபாடுகள், சிறுவர் கலை நிகழ்வுகள் என்பன இடம் பெறவுள்ளது.



கரணவாய் - செல்வபுரம் முன்பள்ளியின் ஆசிரியர் தின விழா அண்மையில் நடைபெற்ற போது கௌரவிக்கப்பட்ட முன்பள்ளி ஆசிரியருடன் மாணவர்களையும் காணலாம். (18)

## பொதுக்கூட்டம்

யாழ்.மாநகர சபையின் 2012 ஆம் ஆண்டுக்கான பத்தாவது பொதுக்கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் திருமதி.யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்திற்கு உரியவர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.மாநகரசபை செயலாளர் தா.தர்மரட்ணம் தெரிவித்துள்ளார்.

## முரசின் இன்றைய பலன்

(20.10.2012 – சனிக்கிழமை)

நந்தன வருஷம் ஐப்பசி மாதம் 04 ஆம் திகதி. நட்சத்திரம் மூலம் பின்னிரவு 1.12 வரை. சித்தயோகம். பஞ்சமி காலை 7.11 வரை. பின்னர் சஷ்டி பின்னிரவு 5.10 வரை. இராகுகாலம் 9.02 - 10.32 வரை. சுபநேரம் 03.02 - 04.32 வரை. எமகண்டம் 1.32 - 03.02 வரை. குளிகன் காலம் 06.02 - 7.32 வரை.

சஷ்டி விரதம்

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | அன்பு, கருணை எண்ணம். சமூகத்தில் நல்அந்தஸ்து. தொழிலில் போட்டி குறையும். சராசரி பணவரவு. விருந்து விசேஷங்கள். கணவன்–மனைவி நெருக்கம். |
| ரிஷபம் | பிறருக்கு உதவுதல். மதிப்பு உயரும். தொழில் வளர்ச்சி. உபரி வருமானம். வெளியூரிலிருந்து சுபசெய்தி. இல்லறத்துணை ஆதரவு. நட்பு விருத்தி. |
| மிதுனம் | குடும்பத்தில் கூடுதல் பாசம். அதிக உழைப்பு. தாராள பணவரவு. பொன், பொருள் சேர்க்கை. தெய்வ வழிபாடு. உதவுவோர் அறிமுகம். தைரிய முடிவுகள். |
| கடகம் | மதிநுட்பம் காரியங்களை முடிக்கும். தொழிலில் திட்டமிட்ட இலக்கு. அதிக ஆதாயம். அரசு சார்ந்த உதவி. உத்தியோகத்தில் நன்மதிப்பு. |
| சிம்மம் | எண்ணிய செயல் தாமதம். நண்பருடன் கருத்து வேறுபாடு. வேலைப்பளு. பணவரவு குறைவு. சிறு கடன். வெளியூர் பயணம். போக்குவரத்தில் கவனம். |
| கன்னி | எதிர்கால நலன் பற்றிய அக்கறை. நிதானித்த பேச்சு. தொழில் இடையூறு விலகும். அளவான பணவரவு. பயணத்திட்டத்தில் மாறுதல். குடும்பத்தில் பாசம். |
| துலாம் | இறங்கும் செயலில் குளறுபடி வரும். உறவினர், நண்பர்களின் அன்புத் தொல்லை. அரசு வேலையில் இழுபறி. ஓரளவு இலாபம். மருத்துவ சிகிச்சை. |
| விருச்சிகம் | புதியசாதனை ஆர்வம். நண்பர் உதவி. வாழ்க்கைத் தரம் உயரும். வீட்டுத்தேவைகள் பூர்த்தி. பிள்ளைகள் நற்செய்தி. உத்தியோகம் நன்மதிப்பு, வெகுமதி. |
| தனுசு | அலைச்சல். விமர்சனத்தால் மனவருத்தம். தொழில் சராசரி. பணத்தேவை அதிகரிக்கும். உடல் நலத்திற்கு தரம் அறிந்து உண்க. குடும்ப ஒற்றுமைக்கு முயற்சி. |
| மகரம் | சுறுசுறுப்பு. தேங்கிய வேலைகள் முடியும். பிள்ளைகளால் மதிப்பு. வரவேண்டிய பணம் வரும். போட்டிகளை எதிர்கொண்டு வெற்றி. சக ஊழியர்கள் உதவி. |
| கும்பம் | ஆலோசனை கிடைத்து உற்சாகம். தொட்டது துலங்கும். தொழில் புதிய நடைமுறை. உபரி வருமானம். உடல பலம் பெறும். நீண்ட நாள் எதிர்பார்ப்பு நிறைவேறும். |
| மீனம் | வருமானத்திற்கு புது முயற்சிகள். பக்தி வழிபாடு. நல்லவர்களைக் கண்டறிவீர்கள். உத்தியோகத்தில் புது வாய்ப்பு. வழக்கு சாதகம். கனவு நனவாகும். |

## பாகிஸ்தான் பாதுகாப்பான நாடு



(கராச்சி)

கிரிக்கெட் விளையாட பாகிஸ்தான் பாதுகாப்பான நாடு. வெளிநாட்டு அணிகள் தாராளமாக இங்கு வந்து விளையாட முடியும் என இலங்கை அணியின் முன்னாள் அணித் தலைவர் சனத் ஜெயசூரிய நேற்று கராச்சியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

சர்வதேச வீரர்கள் பங்கேற்கும் அணியுடன், பாகிஸ்தான் வீரர்கள் மோதும் இரண்டு ருவென்ரி 20 போட்டிகளை பாகிஸ்தானில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சர்வதேச அணிக்கு இலங்கை அதிரடி வீரர் ஜெயசூரியா கப்டனாக நியமிக்கப்பட்டு உள்ளார். தென்னாபிரிக்க வீரர்கள் ஆந்த்ரே நெல், நான்டெல் ஹெய்வார்ட், மேற்கிந்தியத்தீவுகள் வீரர்கள் ரிக்கார்டோ பவல், ஜெர்மைன் லோசன் உள்ளிட்ட வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

அவர்களுடன் பாகிஸ்தான் வீரர்கள் மோதுவார்கள். பாகிஸ்தான் அணிக்கு அப்ரிடி கப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். போட்டியில் ஆட சர்வதேச அணி பாகிஸ்தான் சென்றடைந்தது. அங்கு கப்டன் ஜெயசூரியா நிருபர்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தப் போட்டியில் பங்கேற்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். பாகிஸ்தானில் கிரிக்கெட் வீரர்களுக்குப் பாதுகாப்பு நன்றாக உள்ளது. இது தொடர்பாக அச்சப்படத் தேவையில்லை. பாதுகாப்பு விடயத்தில் ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு கருத்தைக் கொண்டிருக்கலாம். ஆனால் என்னைப் பொறுத்தவரை பாகிஸ்தான், கிரிக்கெட் விளையாட பாதுகாப்பான நாடு. வெளிநாட்டு அணிகள் தாராளமாக இங்குவந்து விளையாடலாம் என்றார்.

## அரையிறுதிக்கு முன்னேறிய சிட்னி சிக்சர்ஸ் அணி

(கேப்டவுன்)

சம்பியன்ஸ் லீக் ருவென்ரி-20 தொடரின் 'பி' பிரிவு லீக் ஆட்டத்தில், லயன்ஸ் அணியை 5 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி தொடர்ச்சியாக 3ஆவது வெற்றியைப் பதிவு செய்த சிட்னி சிக்சர்ஸ் அரையிறுதிக்கு முன்னேறியது.

கேப்டவுன், நியூலேண்ட்ஸ் மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்த இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் சிட்னி சிக்சர்ஸ் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய. லயன்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 137 ஓட்டங்களைப் பெற்றது. இதில் குலாம் போதி 44 பந்துகளில் நான்கு பவுண்டரிகள், மூன்று சிக்ஸர்கள் அடங்கலாக 61 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் ஸ்டார்க் மூன்று, வட்சன், ஹேசல்வுட் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய சிட்னி சிக்சர்ஸ் அணி 19 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் வட்சன் 38 பந்துகளில் 4 பவுண்டரி, 3 சிக்சர்கள் அடங்கலாக 47, லம்ப் 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பாங்கிசோ 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இதன் மூலம் தொடர்ச்சியாக 3ஆவது வெற்றியைப் பதிவு செய்த சிட்னி அணி 12 புள்ளிகளுடன் அரையிறுதி வாய்ப்பை உறுதி செய்தது. ஸ்டார்க் ஆட்ட நாயகன் விருது பெற்றார். லயன்ஸ் 8 புள்ளியுடன் 2ஆவது இடத்தில் உள்ளது.

## ஹைடனும் எதிர்ப்பு



(சிட்னி)

சச்சின் அவுஸ்ரேலியாவில் வசித்தால் அவருக்கு பிரதமர் பதவி கூட அளியுங்கள். ஆனால் அவர் வசிப்பதே இந்தியாவில். இது சச்சினுக்கு 'ஓர்ட்ர் ஓப் அவுஸ்ரேலியா' விருது வழங்கப்படும் என்ற ஆஸி. பிரதமர் ஜூலியா கில்லார்டின் அறிவிப்புக்கு அந்நாட்டின் முன்னாள் கிரிக்கெட் வீரர் மத்யூ ஹைடனின் கருத்து அல்ல எரிச்சல்.

அரச முறை பயணமாக இந்தியா சென்ற அவுஸ்ரேலிய பிரதமர் ஜூலியா கில்லார்ட், இந்திய கிரிக்கெட் அணியின் சச்சினுக்கு அவுஸ்ரேலியாவின் உயரிய விருதான 'ஓர்ட்ர் ஓப் அவுஸ்ரேலியா' விருது வழங்கப்படும் என்று அறிவித்தார்.

இதற்கு இந்தியாவில் வரவேற்பும் அவுஸ்ரேலியாவில் கடும் எதிர்ப்பும் கிளம்பியுள்ளது.

இந்நிலையில், அவுஸ்ரேலியாவின் வானொலி நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அந்நாட்டு முன்னாள் கிரிக்கெட் வீரர் மத்யூ ஹைடன், என்னைப் பொறுத்தவரையில் 'ஓர்ட்ர் ஓப் அவுஸ்ரேலியா' விருது அவுஸ்ரேலியர்களுக்கு மட்டுமே. சில விடயங்கள் எமது நாட்டிற்கு மட்டுமே உரியது. சச்சினைப் பொறுத்தவரையில் அவர் மிகச்சிறந்த வீரர் என்பதில் சந்தேகமில்லை. அவர் மட்டும் அவுஸ்ரேலியாவில் வாழ்ந்திருந்தால் அவருக்கு பிரதமர் பதவியே கொடுத்திருக்கலாம். ஆனால் அவர் இந்தியாவில் அல்லவா வசிக்கிறார். இந்த ஆண்டு தொடக்கத்தில் இந்தியா மற்றும் அவுஸ்ரேலிய கிரிக்கெட் வீரர்களுக்கு எனது சிட்னி வீட்டில் விருந்தளித்ததை மறக்க முடியாது. அவுஸ்ரேலியர்களால் சச்சின் மிகவும் விரும்பப்படுபவராகவும் இருக்கிறார் என்று தெரிவித்துள்ளார்.

## மன்னிப்புக் கோரிய ஜோன் ரெறி



இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவரும் செல்ஷி அணியின் வீரருமான ஜோன் ரெறி இனத்துவேச வார்த்தைகளைப் பயன்படுத்தியமைக்காக மன்னிப்புக் கோரியுள்ளார். கடந்தாண்டு இடம்பெற்ற சம்பவத்திற்காகவே அவர் மன்னிப்புக் கோரியுள்ளார். செல்ஷி அணியின்தலைவராகக் காணப்பட்ட தருணத்தில் கடந்த ஆண் டில் குயின்ஸ் பார்க் ரேஞ்சர்ஸ் அணியின் வீரரான அன்டன் பேர்டினன்ட் மீது இனத்துவேச ரீதியிலான வார்த்தைகளைப் பயன்படுத்தியிருந்தார் என்ற குற்றச்சாட்டு எழுப்பப்பட்டிருந்தது. இந்நிலையில் அவர் மீதான குற்றவியல் விசாரணைகளில் அவர் மீதான குற்றங்கள் உறுதிப்படுத்தபட்டிருக்காத நிலையில், இவ்வாண்டு ஜூலையில் இனத்துவேச வார்த்தைகளைப் பிரயோகித்தார் என ஜோன் ரெறி மீது இங்கிலாந்து கால்பந்தாட்டச் சம்மேள னம் குற்றஞ்சாட்டியது. வழங்கப்பட்ட தண்டனைக்கெதிராக மேன்முறையீடு செய்யக்கூடிய சந்தர்ப்பம் காணப்பட்ட போதிலும் மேன்முறையீடு செய்ய விரும்ப வில்லை. தான் இனத்துவேச ரீதியில் வார்த்தைகளைப் பயன்படுத்தினேன் என்பதை எதிர்ப்பதாகவும், தான் அவ்வாறான நோக்கத்தில் அவ்வார்த்தைகளைப் பயன்படுத்தியிருக்கவில்லை எனத் தெரிவித்தார்.

## இறுதி சம்பியன் கிண்ண ஒரு நாள் போட்டி



(லண்டன்)

உலகின் முதல் நிலையிலுள்ள 8 அணிகள் பங்கேற்கும் ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ண ஒருநாள் கிரிக்கெட் தொடர் (50 ஓவர்), கடைசி முறையாக இங்கிலாந்தில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ளது.

இதற்கான கோப்பை அறிமுக விழா லண்டனில் நேற்று முன்தினம் நடந்தது.

இதில் பங்கேற்று பேசிய சர்வதேச கிரிக்கெட் சபைத் (ஐசிசி) தலைமை செயலதிகாரி டேவிட் ரிச்சர்ட்சன்,

ஒருநாள், ருவென்ரி-20 கிரிக்கெட்டில் உலக கோப்பை போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.


2017ஆம் ஆண்டில் இருந்து டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரை அறிமுகம் செய்ய உள்ளோம்.

இதற்கு வசதியாக, சம்பியன்ஸ் கிண்ண 50 ஓவர் கிரிக்கெட் போட்டித் தொடரைக் கைவிட முடிவு செய்யப்பட்டது. இந்த தொடர் கடைசி முறையாக அடுத்த ஆண்டு இங்கிலாந்தில் நடத்தப்பட உள்ளது. கார்டிப், ஓவல், எட்ஜ்பாஸ்டன் மைதானங்களில் மொத்தம் 18 நாட்கள் நடைபெற உள்ள இந்த தொடரின் இறுதிப் போட்டி ஜுன் 23ஆம் திகதி நடைபெறும் எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் இங்கிலாந்து அணி கப்டன் அலஸ்டர் குக், போட்டி இயக்குனர் ஸ்டீவ் எல்வொர்தி உட்பட பலர் பங்கேற்றனர்.

சம்பியன்ஸ் கிண்ண ஆட்டங்களுக்கான டிக்கெட் விற்பனை அடுத்த மாதம் 5ஆம் திகதி தொடங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மழையால் கைவிடப்பட்டது



4ஆவது சம்பியன்ஸ் லீக் ருவென்ரி 20 கிரிக்கெட் போட்டித் தொடரின் நேற்று முன்தினம் நடைபெற்ற மும்பை இந்தியன்ஸ் மற்றும் யார்க்ஷைர் அணிகளுக்கிடையிலான ஆட்டம் மழை காரணமாக கைவிடப்பட்டது.

தென்னாபிரிக்காவில் நடைபெற்று வரும் இப்போட்டித் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய மும்பை இந்தியன்ஸ் அணி 17.5 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 156 ஓட்டங்களைக் குவித்திருந்தபோது மழையால் ஆட்டம் நிறுத்தப்பட்டது. பொலார்ட் 3 சிக்சர்களுடன் 37 ஓட்டங்களைப் பெற்று களத்தில் இருந்தார். தொடர்ந்து மழை பெய்ததால் போட்டியைக் கைவிடுவதாக நடுவர்கள் அறிவித்தனர். இதனால் இரு அணிகளுக்கும் தலா இரு புள்ளிகள் வழங்கப்பட்டன. 'பி' பிரிவில் 3 வெற்றிகள் பெற்றுள்ள சிட்னி சிக்சர்ஸ் அணி ஏற்கனவே அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.

இதனால் சென்னை, மும்பை ஆகிய ஐ.பி.எல் அணிகள் தங்களது அடுத்த இரண்டு போட்டிகளிலும் வெற்றி பெற்றாலும், அவர்கள் அரையிறுதிக்கு தகுதி பெறுவதற்கான வாய்ப்புகள் மிகக்குறைவாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விரைவில் மீள்வேன்



எனக்கு வந்துள்ள புற்றுநோய் குணப்படுத்தக்கூடியதுதான். இது தீவிரமானது இல்லை. இந்தத் தருணத்தில் எனக்கு ஆதரவளித்த அனைவருக்கும் நன்றிகள் என நியூசிலாந்தின் முன்னாள் கப்டன் மார்ட்டின் குரோவ் தெரிவித்தார். நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் மார்ட்டின் குரோவ்வுக்கு சமீபத்தில் நடத்தப்பட்ட மருத்துவ பரிசோதனையில் புற்றுநோய் இருக்கும் அதிர்ச்சித் தகவல் தெரியவந்தது. இந்த நிலையில் புற்றுநோய் குறித்து 50 வயதான மார்ட்டின் குரோவ் விளக்கம் அளித்துள்ளார். இது குறித்து அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில், கிரிக்கெட் போட்டிக்காக வெளிநாட்டு சுற்றுப்பயணம் மேற்கொள்கையில் சில இடங்களில் எனக்கு உடல் நிலை பாதிப்பு ஏற்பட்டது. அது எனது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் பகுதியை பலவீனப்படுத்தியது. இதனால் எனக்கு புற்றுநோய் ஏற்பட்டு இருக்கிறது. இது குணப்படுத்தக்கூடியது தான். இது தீவிரமானது அல்ல. இந்த தருணத்தில் எனக்கு ஆதரவு அளித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

## இந்தியத் தொடரில் பீற்றர்சன்



(லண்டன்)

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் பங்கேற்க இங்கிலாந்து அணியின் நட்சத்திர வீரர் பீற்றர்சன் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இதன்மூலம் இவருக்கும், இங்கிலாந்து கிரிக்கெட் சபைக்கும் ஏற்பட்ட பிரச்சினை முடிவுக்கு வந்துள்ளது.

இது குறித்து இங்கிலாந்து கிரிக்கெட் சபை நிர்வாக இயக்குனர் ஹக் மோரிஸ் கூறுகையில், இந்தியாவுக்கு எதிரான தொடரில் பீற்றர்சன் பங்கேற்க வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருந்தோம். இவரால் ஏற்பட்ட பிரச்சினைகள் முழுவதும் முடிவுக்கு வந்துவிட்டது. அணி நிர்வாகம், வீரர்கள் எல்லோரும் இந்தப் பிரச்சினையை மறந்து விட்டு, இந்தியாவுக்கு எதிரான தொடரில் சாதிக்க வேண்டிய எண்ணத்தில் உள்ளோம் என்றார்.

அணித் தேர்வாளர் மில்லர் கூறுகையில், பீற்றர்சன் மீண்டும் அணியில் இணைவதை வரவேற்கிறோம். அதிலும் முக்கியமான டெஸ்ட் தொடரில் பங்கேற்பது மகிழ்ச்சியான ஒன்று. இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டின் போது, இயன் பெல் குடும்ப விடயமாக நாடு திரும்புவார் என எதிர்பார்க்கிறோம்.

அந்தச் சமயம் கூடுதலான துடுப்பாட்ட வீரர்கள் இருப்பது அணிக்குப் பலம். தென்னாபிரிக்காவில் நடக்கும் சம்பியன்ஸ் லீக் தொடர் முடிந்தவுடன் பீற்றர்சன், அணியில் இணைவார் என்றார்.

# விளையாட்டு செய்திகள்

## புற்றுநோய் அறக்கட்டளையின் பணிப்பாளர் பதவியிலிருந்து விலகல்

(டெக்சாஸ்)

ஊக்கமருந்து உட்கொண்டதன் எதிரொலியாக புற்றுநோய் அறக்கட்டளையின் நிர்வாகப் பணிப்பாளர் பதவியிலிருந்து லான்ஸ் ஆம்ஸ்ரோங் விலகியுள்ளார்.

அமெரிக்க முன்னாள் சைக்கிள் பந்தய வீரர் லான்ஸ் ஆம்ஸ்ட்ரோங். புற்றுநோய் பாதிப்பில் இருந்து மீண்டு, டூர் டி பிரான்ஸ் என்ற புகழ்பெற்ற சைக்கிள் பந்தயத்தில் 1999ஆம் ஆண்டு முதல் 2005ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக 7 முறை சம்பியன் பட்டத்தை வென்று உலக சாதனை படைத்தார். 41 வயதான ஆம்ஸ்ட்ரோங், போட்டிகளின் போது ஊக்கமருந்து பயன்படுத்தியது தெரியவந்திருப்பதாக இரண்டு மாதங்களுக்கு முன்பு அமெரிக்க ஊக்கமருந்து தடுப்புக் கழகம் அறிவித்தது. இதையடுத்து அவருக்கு ஆயுட்கால தடை விதிக்கப்பட்டது.

இந்த நிலையில் ஆம்ஸ்ட்ரோங், ஊக்கமருந்து பயன்படுத்தியதற்கான ஆயிரம் பக்க ஆதாரங்களை அமெரிக்க ஊக்கமருந்து தடுப்புக் கழகம் வெளியிட்டது. மேலும் அதில், ஆம்ஸ்ட்ரோங் தான் மட்டுமல்லாமல், தனது அணியின் சக வீரர்களுக்கும் ஊக்கமருந்துகளை வழங்கியுள்ளார் என்றும் கூறப்பட்டிருந்தது.

ஊக்கமருந்து பிரச்சினை காரணமாக, அவர் கைப்பற்றிய 7 உலக சைக்கிள் பந்தய பட்டங்களும் பறிக்கப்படுகிறது. இதன் எதிரொலியாக அமெரிக்காவில் லைவ்ஸ்டிரோங் என்றபெயரில் நடத்திவந்த புற்றுநோய் அறக்கட்டளையின் நிர்வாகப் பணிப்பாளர் பதவியில் இருந்து நேற்று முன்தினம் அவர் விலகினார். "எனது சைக்கிள் பந்தய வாழ்க்கை மீது விழுந்துள்ள ஊக்க மருந்து சர்ச்சையால் அறக்கட்டளைக்கு எதிர்மறையான விளைவை ஏற்படுத்தி விடக்கூடாது என்பதற்காக இந்த முடிவை எடுத்ததாக அவர் கூறினார். இதற்கிடையே, அவருடன் ஸ்பொன்சர்ஷிப் வைத்திருந்த ஹநைக் நிறுவனம் அந்த ஒப்பந்தத்தை முடித்துக் கொள்வதாக திடீரென அறிவித்துள்ளது.

## சிங்கப்பூரில் அசத்தியது முரளி கிண்ண தெரிவு அணி

(யாழ்ப்பாணம்)

முரளி கிண்ண ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரில் சிறப்பாக செயற்பட்ட வீரர்களைக் கொண்ட தெரிவு அணி சிங்கப்பூரில் ஆடி இரு போட்டிகளிலும் அசத்தலான வெற்றிபெற்றுள்ளது.

முரளிக்கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்திய யாழ்ப்பாண வீரர்கள் இருவர், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களில் தலா ஒவ்வொரு வீரர்களும், மட்டக்களப்பிலிருந்து இரண்டு வீரக்களும் அடங்கலாக யுனிற்றி என்ற இலங்கை அணி சிங்கப்பூருக்கு சென்றது. அங்கு இரண்டு இருபது - 20 போட்டிகளில் பங்குபற்றியது.

சிங்கப்பூர் கிரிக்கெட் கழகத்திற்கும் யுனிற்றி அணிக்கும் இடையில் நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய யுனிற்றி அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 147 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக மட்டக்களப்பு வீரர் சஞ்சீவ் 70 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

பதிலளித்தாடிய சிங்கப்பூர் கிரிக்கெட் கழக அணி 18 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 102 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

இரண்டாவது போட்டி சிங்கப்பூர் லங்கா லயன் கழக அணி யுடன் நடைபெற்றது. மழை காரணமாக அப்போட்டி 18 ஓவர்கள் கொண்ட போட்டிகளாக நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய யுனிற்றி அணி 18 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்களை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல் லூரி அணி வீரர் எட்வேட் எடின் ஆட்டமிழக்காமல் 68 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். சென். பற்றிக்ஸ் வீரர் ரியூடர் 35 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பதிலளித்தாடிய லங்கா லயன்ஸ் அணி 17 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 126 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது. (எஸ்.பி.)


ரியூடர்


எட்வேட் எடின்

## முதல்சுற்றில் சாய்னா வெற்றி

(ஓடென்ஸ்)

டென்மார்க் ஓப்பன் பட்மின்ரன் தொடரின் பெண்கள் ஒற்றையர் முதல் சுற்றில் இந்தியாவின் சாய்னா நேவல் வெற்றி பெற்றார்.

டென்மார்க்கில் உள்ள ஓடென்ஸ் நகரில் நடக்கும் இத்தொடரின் முதல் சுற்றில் இந்தியாவின் சாய்னா நேவல், கொரியாவின் இயான் ஜூபேவை சந்தித்தார். இதில் தொடக்கம் முதல் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய சாய்னா முதல் செட்டை 21-17 என வென்றார்.

பின் இரண்டாவது செட்டிலும் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்திய சாய்னா 21-17 என கைப்பற்றினார். முடிவில் சாய்னா 21-17, 21-17 என்ற நேர் செட்களில் வெற்றி பெற்றார்.

## தரப்படுத்தலில் கே.சி.சி.சி. முதலிடம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான தரப்படுத்தலில் கொக்குவில் கே.சி.சி.சி. அணி 141.7 புள்ளிகளுடன் முன்னிலையில் உள்ளது. சென்ரல் விளையாட்டுக் கழகம், ஜோர் வெப்ஸ்டர் வெற்றிக் கிண்ணத்தினை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கிரிக்கெட் அணிகளின் தரப்பட்டியலை 2010 ஆம் ஆண்டிலிருந்து தயாரித்து வருகின்றது.

2010 ஆம் ஆண்டு ஆரம்பித்த இந்த வெற்றிக் கிண்ணத் தரப்பட்டியலில் தொடர்ந்து இரண்டு வருடங்களும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி முன்னிலைபெற்று வெற்றிக் கிண்ணத்தைத் தட்டிச் சென்றது.

இவ்வருட புள்ளிகள் கணிப்பீட்டின்படி (01-01-2012 இருந்து 15.10.2012 வரை) முடிவடைந்த போட்டிகளின் அடிப்படையில் கொக்குவில் கே.சி.சி.சி. அணி 141.7 புள்ளிகளுடன் முன்னிலையில் உள்ளது. இவ்வணி தாம் விளையாடிய 27 போட்டிகளில் 21 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளது. ஜொனியன்ஸ் அணி 111.4 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், சென்றலைட்ஸ் அணி 93.3 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும், யாழ். பல்கலை அணி 92 புள்ளிகளைப் பெற்று நான்காமிடத்தையும், ஜொலிஸ்ரார் 91.4 புள்ளிகளைப் பெற்று ஐந்தாமிடத்தையும், பற்றீசியன்ஸ் அணி 70 புள்ளிகளைப் பெற்று ஆறாமிடத்தையும், யாழ். சென்றல் 68.1 புள்ளிகளைப் பெற்று ஏழாமிடத்தையும், மானிப்பாய் பரிஸ் 42.5 புள்ளிகளைப் பெற்று எட்டாமிடத்தையும், ஸ்ரான்லி அணி 41.1 புள்ளிகளைப் பெற்று ஒன்பதாவது இடத்தையும், யூனியன்ஸ் அணி 33.7 புள்ளிகளைப் பெற்று பத்தாவது இடத்தையும் பிடித்துள்ளது. (எஸ்.பி.)

## மட்டுவில் மோகனதாஸ் கரப்பந்து அரையிறுதிக்கு அணிகள் தகுதி

(சாவகச்சேரி)

மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு முன்னணி அணிகள் தகுதி பெற்றுள்ளன.

தென்மராட்சிப் பிரதேச மட்ட ரீதியிலும் யாழ். மாவட்ட மட்ட ரீதியிலும் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகத்தினால் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நடத்தப்பட்டு வருகின்றது.

இதில் பிரதேச மட்ட அணிகளுக்கிடையிலான காலிறுதிப் போட்டி கடந்த புதன்கிழமை மோகனதாஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் மட்டுவில் ஐங்கரன் அணியும், கச்சாய் ஸ்ரீமுருகன் அணியும் மோதின. இதில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய மட்டுவில் ஐங்கரன் அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற மற்றுமொரு காலிறுதிப் போட்டியில் மீசாலை சீமா அணியும் கைதடி குமரன் அணியும் மோதின. இதில் சிறப்பாக ஆடிய சீமா அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

மூன்றாவது காலிறுதிப் போட்டியில் மறவன்புலோ அம்பிகை அணியும் கைதடி வளர்மதி அணியும் மோதின. இதில் கைதடி வளர்மதி அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

மற்றுமொரு பிரதேச மட்ட காலிறுதிப் போட்டியில் மட்டுவில் வளர்மதி அணி வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. பிரதேச மட்ட அணிகளுக்கிடையிலான முதலாவது அரையிறுதியில் மட்டுவில் ஐங்கரன் அணியை எதிர்த்து மீசாலை சீமா அணியும், இரண்டாவது அரையிறுதியில் கைதடி வளர்மதி அணியை எதிர்த்து மட்டுவில் வளர்மதி அணியும் மோதவுள்ளன.

இதேவேளை, மாவட்ட மட்டத்தில் முதலாவது காலிறுதிப் போட்டியில் அச்சுவேலி ஸ்ரார் அணியை எதிர்த்து பன்னாலை கணேசன் அணி மோதியது. இதில் சிறப்பாக ஆடிய அச்சுவேலி ஸ்ரார் அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெறவிருந்த காலிறுதிப் போட்டியில் சிறுப்பிட்டி ஜனசக்தி அணியுடன் மோதவிருந்த எதிரணி குறித்த நேரத்திற்கு சமூகமளிக்கமையால் ஜனசக்தி அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. இதன் மூலம் ஜனசக்தி அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. (116,11)






அகில இலங்கை ரீதியில் தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கிடையில் நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியில் இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்ட வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி அணிக்கு கடந்த 16ஆம் திகதி அமோக வரவேற்பளிக்கப்பட்டது. இதில் மெய்வல்லுநர் போட்டிகளில் பங்குகொண்ட வீரர்கள் அழைத்து வரப்படுவதையும், கிண்ணத்தை பீடாதிபதிக்கு கையளிப்பதையும் காணலாம். (160)

# ஹொலிவுட் சுவாரசியங்கள்

- R.P. ராஜநாயஹம் -

☆1 றொனால்ட் ரீகன் ஒன்றும் ஹொலிவுட்டில் சாதித்தவரல்ல. சில சாதாரணப் படங்களில் கதாநாயகன். பல படங்களில் துணைப் பாத்திரங்கள் என்றாலும் ஒரு நடிகனின் அதிகபட்ச சாதனை அவருடையதுதான்.




உலகின் முதல் மனிதன் என்ற அந்தஸ்துடைய அமெரிக்க ஜனாதிபதி பதவியை அடைய முடிந்த ஒரே நடிகன் றொனால்ட் ரீகன் மட்டுமே. ஹொலிவுட் படங்களில் நடித்ததை விட T.V. சீரியல்களில் தான் ரீகன் மிக அதிகமாக நடித்தவர் என்பதும் முக்கியமான விஷயம். அவருடைய முதல் மனைவி ஜேன் வைமன், இரண்டாம் மனைவி நான்ஸி இருவருமே அவருக்கு ஜோடியாக திரைப்படங்களில் நடித்தவர்கள் தான். ஜேன் வைமன் வெறுத்துப் போய் ரீகனை விவாகரத்து செய்தபோது குறிப்பிட்ட காரணம் "ரீகனின் தீவிர அரசியல் ஈடுபாடு". ஆனால் இந்த காரணமே அவரை அமெரிக்க ஜனாதிபதியாக உயர்த்தியது. இன்னொரு தனித்துவத்தையும் றொனால்ட் ரீகனுக்கு ஏற்படுத்தி விட்டது. விவாகரத்து செய்யப்பட்ட ஒரே ஜனாதிபதி அமெரிக்க சரித்திரத்தில் றொனால்ட் ரீகன் மட்டுமே.

☆2 கியூபா அதிபர் ஃபிடல் காஸ்ட்ரோவிற்கும் "டென் கமாண்ட்மெண்ட்ஸ்"




படத்திற்கும் ஒரு சம்பந்தம் உண்டு. அது வதந்தியா இல்லையா என்று தெரியவில்லை. டென் கமாண்ட்மெண்ட்ஸ் படத்தில் ஒரு சிப்பாயாக காஸ்ட்ரோ நடித்தார். ஒரு எக்ஸ்ட்ராவாக காஸ்ட்ரோ நடித்தது உண்மை தான் என்றால் ஒரு எக்ஸ்ட்ரா நடிகர் ஒரு நாட்டுக்கே அதிபரானார் என்பது சரித்திர ஆச்சரியம். ஆனால் ஷெர்லி மக்ளெயின் ("அபார்ட்மெண்ட்" படத்தில் ஜாக் லெமன் உடன் நடித்தவர். "வாரன் பீட்டி" யின் உடன் பிறந்த சகோதரி) எழுதிய "மை லக்கி ஸ்டார்" என்ற நூலில் காஸ்ட்ரோவிடம் "அந்தப் படத்தில் நீங்கள் extra வாக நடித்தது உண்மைதானா?" என்று தான் கேட்டபோது காஸ்ட்ரோ தெளிவில்லாத குழப்பமான பதிலைச் சொன்னதாகக் குறிப்பிட்டிருக்கிறார். ஒரு நேரடியான கேள்வி. "ஆம்", "இல்லை" என்று காஸ்ட்ரோ சொல்லாமல் "புரிந்து கொள்ள முடியாத பதிலை" ஏன் சொல்ல வேண்டும். IT CAN'T ALL BE SMOKE WITHOUT FIRE.

☆3 இரண்டாம் உலகப்போரைப் பற்றிய "த லோங்கஸ்ட் டே" படம் தயாரானபோது போரில் ஜெனரல் ஐசனோவராக பங்கேற்றிருந்தவர் அச்சமயம் அமெரிக்க அதிபர் ஐசனோவராகியிருந்தார். அமெரிக்க அதிபராக அவருக்கு எட்டாவது ஆண்டு. அப்போது (1953 ஜனவரி முதல் 1962 ஜனவரி வரை ஐசனோவர் அமெரிக்க அதிபர்) ஜெனரல் ஐசனோவராக அதிபர் ஐசனோவரையே நடிக்க வைக்கலாமா என்று ஒரு யோசனை படக்குழுவுக்குத் தோன்றியது. "நானே நானாக நடிக்கிறேனே" என்று றொம்ப ஆர்வத்துடன் அமெரிக்க அதிபர் ஐசனோவரே ஹொலிவுட் படத்தில் நடிக்க "சான்ஸ்" கேட்ட அதிசயம் நடந்திருக்கிறது. பலத்த ஆலோசனைக்குப் பிறகு "ஜனாதிபதி ஐசனோவரை இரண்டாம் உலகப்போர் காலத்து ஜெனரல் ஐசனோவராக மேக்கப் மூலமாக மாற்றுவது இயலாத காரியம்" என்று முடிவு எடுக்கப்பட்டு ஐசனோவராக நடிக்கிற "சான்ஸ்" நிராகரிக்கப்பட்டு விட்டது. சினிமாவில் நடிக்க ஒரு யோகம் வேண்டுமே!



POOR EISEN HOWER! 1962ஆம் ஆண்டு வெளியான "த லோங்கஸ்ட் டே" படத்தில் ஹென்ரி க்ரேஸ் என்ற ஆர்ட் டைரக்டர் ஜெனரல் ஐசனோவராக நடித்திருந்தார். ஹென்ரி க்ரேஸ் நடிகரல்ல என்றாலும் ஐசனோவரைப் போலவே இருந்தார் என்பதால் அந்தப் பாத்திரம் அவருக்கு கிடைத்தது.

☆4 "ஃபொரஸ்ட் கம்ப்" படத்தில் இதற்கு எதிர்மறையான விசித்திரம் நிகழ்ந்தது. இந்தப் படத்தில் நடிகர் டொம் ஹாங்க்ஸ் உடன் ஜோன் கென்னடி, லிண்டன் பி.ஜோன்சன், நிக்சன் ஆகிய ஜனாதிபதிகள் நடித்த காட்சிகள் இடம் பெற்றன. 1994ஆம் ஆண்டு அந்தப் படம் வெளிவந்த நேரத்தில் நிக்சனும் மறைந்து சில மாதங்கள் ஆகியிருந்தது. கதை நாயகன் ஃபொரஸ்ட் கம்ப் மந்த நிலையான, புத்திசாலித்தனம் மிகக் குறைந்த, குழந்தை மன நிலை படைத்தவன். ஆனால் தற்செயலாக அமெரிக்காவின் மிக முக்கிய பிரபலங்கள் சிலரை, அவர்களின் முக்கியத்துவத்தை அறியாமலே அவன் வாழ்வில் சந்திக்கிறான். அவனுடன் ஜோன் கென்னடி, லிண்டன் ஜோன்சன், நிக்சன் முதலியோர் அமெரிக்க ஜனாதிபதியாகவே பங்கு பெறும் காட்சிகள் மிகுந்த சுவாரசியமானவை.




☆5 ஜோர்டான் நாட்டில் ஒரு ஹொலிவுட் படத்தின் படப்பிடிப்பு நடந்த போது அந்தப்படம் ஜோர்டான் நாட்டின் சரித்திரத்தை மாற்றப் போகிறது என்று எவரும் அறிந்திருக்கமாட்டார்கள். "லோரன்ஸ் ஒ்ஃப் அரேபியா" என்ற அந்தப் படத்தில் நடிகர் பீட்டர் ஒட்டூல் லோரன்ஸாக நடித்திருந்தார். "ஹன்ட்ரட் கிரேட்டஸ்ட் பெர்ஃபோர்மன்ஸ்" பட்டியலில் முதல் ரேங்க் அமெரிக்க ஃபில்ம் இன்ஸ்ட்டிரியூட்டால் பீட்டர் ஒட்டூலுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் படத்தில் அவர் ஏற்று நடித்த பாத்திரம் இந்தப் பெருமையை அவருக்கு பெற்றுத் தந்தது.




இந்தப் படப்பிடிப்பில் டோனி கார்டனர் என்ற பெண் ஸ்விட்ச் போர்ட் ஒபரேட்டராக பணி புரிந்து கொண்டிருந்தார். ஜோர்டான் மன்னர் ஹுசேன் இந்த வெள்ளைக்காரப் பெண் மீது தீவிர காதல் கொள்ள ஆரம்பித்து திருமணமும் செய்து கொண்டார். இன்றைய ஜோர்டான் மன்னர் அப்துல்லாவின் தாயார் தான் டோனி கார்டனர். லோரன்ஸ் ஒஃப் அரேபியா 1962இல் வெளிவந்தது. 1962இற்கு பிற்பட்ட ஜோர்டான் சரித்திரத்தை இந்தப் படத்தின் "தயாரிப்பு" மாற்றி மன்னருக்கு பட்டத்து வாரிசை ஏற்படுத்திவிட்டது.

☆6 ஒலிவர் ஸ்டோன் இயக்கத்தில் வெளிவந்த 2 படங்கள் ஒலிவர் ஸ்டோன் இயக்கி 1991இல் வெளிவந்த ஜே.எப்.கே - ஜோன் கென்னடியின் கொலை மர்மங்களை மறு விசாரணை செய்த படம். ஒலிவர் ஸ்டோன் இயக்கி 1995இல் வெளிவந்த "நிக்சன்" படத்தில் அன்ரனி ஹொப்கின்ஸ் ரிச்சர்ட் நிக்சனாக நடித்திருந்தார். இந்தப் படத்தில் ஜிம்மி கார்ட்டர்,




றொனால்ட் ரீகன், ஜோர்ஜ் புஷ் சீனியர் ஆகிய அமெரிக்க ஜனாதிபதிகள் இடம் பெற்ற காட்சிகள் உள்ளன. ஜே.எப்.கே யில் ஐசனோவர், லிண்டன் பி.ஜோன்சன், நிக்சன் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

# ஒட்டகச்சிவிங்கி



ஆண் ஒட்டகச் சிவிங்கியின் சராசரி எடை 1700 கிலோ.
ஒட்டகச்சிவிங்கி ஆபிரிக்கா கண்டத்தில் மிகுதியாக உள்ளது.
இதன் இதயம் நொடிக்கு 170 முறை துடிக்கும்.
இவை வேல மரத்தின் இலையை விரும்பிச் சாப்பிடும்.
இதன் குட்டி பிறந்து அரை மணி நேரத்தில் எழுந்து நிற்கும்.
இதன் கால்களின் சராசரி உயரம் 6 அடிகள்.
இவை நின்ற நிலையில் தூங்கும்.
மணிக்கு 56 கி.மீ. வேகத்தில் ஓடும்.
சராசரி ஆயுட்காலம் 30 ஆண்டுகள்.
நாக்கின் நீளம் 53 செ.மீ.
நாக்கு கறுப்பு நிறத்தில் இருக்கும்.

# ரோபோக்களின் நடனம்!



ஜப்பானின், கபுச்சிகோ என்ற நகரத்தில் உள்ள, ஒரு இரவு நேர உணவு விடுதியில், வாடிக்கையாளர்களை மகிழ்விப்பதற்காக, ரோபோக்களை டான்ஸ் ஆட வைப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பெண் வேடமிட்ட, இரண்டு பிரமாண்ட ரோபோக்கள், இதற்காகவே பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுள்ளன. பெண்கள் அணியும், உடைகள், இந்த ரோபோக்களுக்கு அணிவிக்கப்பட்டுள்ளன. இவற்றை இயக்குவதற்கு, இளம் பெண்கள் சிலர், பணியமர்த்தப்பட்டுள்ளனர்.




இரவு விடுதிகளில் நடனமாடும் பெண்களைப் போலவே, இந்த ரோபோக்களை, நடனமாட வைக்கப் போகின்றனராம். ரோபோக்களின், கலக்கலான நடனத்தை ரசித்தபடியே உணவு சாப்பிடுவதற்கு ஒரு நபருக்கு, 5,000 ரூபா கட்டணம் வசூலிக்கவுள்ளனர்.

பணம் சம்பாதிப்பதற்காக தொழில் அதிபர்கள் எப்படியெல்லாம் யோசிக்கின்றனர் என்பதை பார்த்தால் ஆச்சரியமாக இருக்கிறது.

# சிக்கல்களில் இருந்து மீள...

- என்.கணேசன் -



கௌதம புத்தர் ஒரு சமயம் சீடர்களிடம் உரையாற்ற வரும் போது கையில் ஒரு துணியுடன் வந்தார். அவர்கள் முன் பேச அமர்ந்தவர் பேச்சைத் தொடங்காமல் கையில் கொண்டு வந்திருந்த அந்தத் துணியில் முடிச்சுகளைப் போட ஆரம்பித்தார். மற்ற சீடர்கள் அவர் பேசக் காத்திருக்கையில் சாரிபுத்தன் என்கிற சீடன் மட்டும் அவர் செய்கையும் அவர் உரையின் ஒரு அங்கமே என்பதை உணர்ந்திருந்தான். அவன் உன்னிப்பாக அவர் செயலைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

விதவிதமாக சில முடிச்சுகளைப் போட்டு விட்டு தலை நிமிர்ந்த புத்தர் கேட்டார். "இந்த முடிச்சுகளை விரைவில் அவிழ்க்க என்ன செய்ய வேண்டும்?"

மற்றவர்கள் யோசித்துக் கொண்டிருக்க உடனடியாக சாரிபுத்தன் சொன்னான். "குருவே! முடிச்சுகள் எப்படி போடப்பட்டுள்ளன என்பதை அறியாத வரை அவற்றை விரைவில் அவிழ்க்க வழியில்லை. முடிச்சு போடப்பட்ட முறையை அறிந்திருந்தால் மட்டுமே அதை விரைவில் அவிழ்க்க முடியும்".

புத்தர் சொன்னார். "சரியாகச் சொன்னாய் சாரிபுத்தா. நினைவோடு போடப்படும் முடிச்சுகளை அவிழ்ப்பது எளிது. நினைவின்றி போடும் முடிச்சுகள் சிக்கலானவை. அவை சில சமயங்களில் அவிழ்க்க முடியாமலும் போகலாம். நம் வாழ்க்கையிலும் அப்படித்தான். விழிப்புணர்வு இல்லாமல் நம் வாழ்வில் ஏற்படுத்திக் கொள்ளும் சிக்கல்களில் இருந்து தான் மீள வழி தெரியாமல் திண்டாடுகிறோம்"

துணியில் போட்ட முடிச்சுகள் போட்ட விதத்திலேயே பிரிக்க சுலபமானவை. கவனத்துடன் போட்டிருந்தால் பொறுமையுடன் பிரிக்கலாம். இல்லாவிட்டால் பிரிக்க நாம் செய்யும் உத்திகளும் கூடுதல் முடிச்சுகளாகி விடும். கடைசியில் துணியையே கிழிக்காமல் முடிச்சுகளை அவிழ்க்க முடியாமல் போகும் நிலை கூட ஏற்படலாம்.

வாழ்க்கையிலும் அப்படித்தான். என்ன செய்கிறோம், ஏன் செய்கிறோம், எப்படி செய்கிறோம் என்கிற விழிப்புணர்வோடு செய்தால் தவறுகள் அதிகம் நிகழ வாய்ப்பே இல்லை. அப்படித் தவறுகள் நிகழ்ந்தாலும் அவற்றில் பெரும்பாலானவை விரைவிலேயே சரிப்படுத்திக் கொள்ள முடிபவையாகவே இருக்கும்.

ஆனால் விழிப்புணர்வில்லாமால் நம் வாழ்வில் செய்து கொள்ளும் சிக்கல்கள் ஆபத்தானவை. அந்தந்த நேர உந்துதல்களில் நாமாகவே ஏற்படுத்திக் கொள்பவை. உணர்ச்சிகளின் பிரவாகத்தில் தன்னிலை இழந்து என்ன செய்கிறோம் என்ற பிரக்ஞையே இல்லாமல் செய்து கொள்பவை. இந்த சிக்கல்களில் இருந்து மீள செய்யும் முயற்சிகள் பல சமயங்களில் சிக்கல்களை அதிகப்படுத்தி மேலும் குழப்பத்தை ஏற்படுத்தி விடும். பல சமயங்களில் பெரிய சேதாரத்தை ஏற்படுத்தாமல் சிக்கல்களில் இருந்து விடுபட முடியாது.

துணியின் முடிச்சுகள் அவிழ்க்க முடிந்த பின் துணி பழைய நிலைமைக்கே வரலாம். வாழ்க்கையின் சிக்கல்கள் அப்படி அல்ல. பல சமயங்களில் சிக்கல்கள் தீரும் போது வாழ்க்கை முன்பு போல திரும்பி மாற வாய்ப்பு இல்லை. எல்லாமே தலைகீழாக மாறிப் போகும் அபாயம் கூட உண்டு. மேலும் சிக்கல்கள் அனைத்தும் நாமே தான் செய்து கொள்ள வேண்டும் என்பதில்லை. பெரும்பாலான சிக்கல்களில் நம் பங்கு கண்டிப்பாக ஓரளவாவது இருக்கக் கூடும் என்றாலும், சில சமயங்களில் மற்றவர்களாலும் சிக்கல்கள் நம் வாழ்க்கையில் ஏற்பட்டு விடலாம்.

நம் செயல்களால் ஆனாலும் சரி, மற்றவர்கள் செயல்களால் ஆனாலும் சரி, விழிப்புணர்வோடு வாழ்க்கையை நடத்துபவன் வரும் சிக்கல்களை ஆரம்பத்திலேயே அடையாளம் கண்டு கொள்ள முடியும். அதனால் கவனமாகவும், வேகமாகவும், ஆரம்ப நிலையிலேயே, அவ்வப்போதே அவற்றைத் தவிர்க்கவோ, சரி செய்து கொள்ளவோ முடியும். விழிப்புணர்வு இல்லாத போதோ அவை பூதாகரமாகும் வரை கவனிக்கப்படுவதில்லை. பின் அதன் விளைவுகளில் சிக்கித் திண்டாட வேண்டி வரும்.

- ◆உலகின் நுழைவு வாயில் எனப்படுவது வான்கூவர் நகரம்.
- ◆இந்தியாவின் நுழைவு வாயில் மும்பை.
- ◆ஐரோப்பாவின் நுழைவு வாயில் ரோட்டர் டாம்.
- ◆தென்மேற்கு ஆசியாவின் நுழைவு வாயில் எனப்படுவது இஸ்தான்புல்.
- ◆தென்கிழக்கு ஆசியாவின் நுழைவு வாயில் எனப்படுவது சிங்கப்பூர்.




# பர்மிய சமாதான தேவதையின் வேடம் கலைகிறதா?

- எம்.ஜூனைத் -



கடந்த 20 ஆண்டுகளாக பர்மிய நாடு உலகின் கவனத்தை ஈர்த்ததிற்கு ஆங் சான் சூகி என்ற பெண்மணி காரணமாக இருந்தார். பர்மாவின் சுதந்திர பிதா எனக் கருதப்படும் இவரது தந்தை இராணுவவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட போது சிறுமியாக இருந்த சூகி, வளர்ந்த பின் தனது நாட்டில் நிலவிய இராணுவ ஒடுக்குமுறைக்கெதிராக ஆவேசமாகக் குரல் கொடுத்தார். அவரது ஜனநாயக மீட்சிக்கான முன்னணி தேர்தலிலும் அமோக வெற்றி பெற்றது. ஆனால் இராணுவம் அவரை ஆட்சி அமைக்க அனுமதிக்காதது மட்டுமின்றி, சுமார் 15 ஆண்டுகாலம் அவரை வீட்டுக் காவலிலும் வைத்தது.

அவரை விடுவிக்கக் கோரியும், ஜனநாயக உரிமைகளுக்காகவும் போராடிய பர்மிய மக்களும், அரசியல்வாதிகளும் இராணுவ ஆட்சியாளர்களால். கொல்லப்பட்டனர் அல்லது நீண்டகாலம் சிறை வைக்கப் பட்டனர். உலகம் முழுவதும் உள்ள ஜனநாயக மற்றும் மனித உரிமை அமைப்புகள் சூகியை விடுவிக்கக் கோரியும், பர்மாவில் ஜனநாயக ஆட்சியை நிலைநாட்டக் கோரியும் தொடர்ச்சியாகப் போராடியதின் விளைவாக, கடந்த வருடம் சூகி விடுதலை செய்யப்பட்டார்.

பர்மாவில் ஜனநாயகத்தையும், மனித உரிமைகளையும் நிலைநாட்டுவதற்காகப் போராடியதற்காக சூகிக்கு சமாதானத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. "சமாதான தேவதை" என்றும், "பர்மாவின் காந்தி" என்றும் அவர் புகழப்பட்டார். கனடா போன்ற நாடுகள் அவருக்குக் கௌரவப் பிரஜாவுரிமையும் வழங்கின. முழு முதலாளித்துவ மேற்குலகமும் அவருக்குப் பின்னால் நின்றது.

அவரது கட்சி அண்மையில் பர்மிய நாடாளுமன்றத்துக்கு நடந்த இடைத்தேர்தல்களில் பங்குபற்றுவதற்கும், அவர் வெளிநாடுகளில் சுற்றுப்பயணம் செய்யவும் கூட பர்மாவின் இராணுவ ஆட்சி அனுமதி அளித்தது. பர்மிய நாடாளுமன்றத்துக்கு நடந்த 43 தொகுதிகளுக்கான இடைத்தேர்தல்களில் அவரது கட்சி 42 இடங்களில் அமோக வெற்றி பெற்றது. இராணுவத்துக்குச் சார்பான ஆளும் கட்சி 1 தொகுதியை மட்டுமே வென்றது. இதன் மூலம் பர்மாவின் அடுத்த அரசாங்கம் சூகியினுடையது என்பது நிச்சயமாகியுள்ளது. ஆனாலும் சூகியின் ஜனநாயகம், மனித உரிமை என்பனவற்றின் விசுவாசம் அப்பழுக்கற்றதுதானா என்ற கேள்வியை எழுப்பும் சந்தர்ப்பம் ஒன்று பர்மாவில் இப்பொழுது ஏற்பட்டுள்ளது.

சூகியினால் உலகின் கவனத்தை ஈர்த்த பர்மா, இப்பொழுது அந்நாட்டில்



வாழும் றொகிங்யா முஸ்லிம் சிறுபான்மை இனத்தவரின் பிரச்சினையால் உலகின் கவனத்தை ஈர்க்க ஆரம்பித் துள்ளது. பர்மாவின் பெரும்பான்மை பௌத்த இனத்தவர் இச்சிறுபான்மை முஸ்லிம் இனத்தவர் மீது கடுமையான அடக்கு முறையைக் கைக்கொள்வதால், .இந்த மக்கள் பல்லாயிரக்கணக்கில் படகுகளில் ஏறி பங்களாதேஷ் நாட்டுக்கு அகதிகளாகச் செல்கின்றனர். சுமார் 8 இலட்சம் சனத்தொகையைக் கொண்ட இம்மக்களில் 1 இலட்சம் பேர் வரையில் அகதிகளாகியுள்ளதாக, அமெரிக்காவைத் தலைமையகமாகக் கொண்டு செயற்படும் மனித உரிமைக் கண்காணிப்பகம் தெரிவித் துள்ளது. அப்படிச் செல்பவர்களை பங்களாதேஷ் அரசும் ஏற்க மறுக்கிறது. அதனால் அவர்கள் இப்பொழுது நிர்க்கதியான நிலையில் நாடற்றவர்களாக நிற்கின்றனர்.


இந்த றொகிங்ய முஸ்லிம் மக்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு அப்போது இந்துஸ்தானத்தின் ஒரு பகுதியாக இருந்த, தற்போதைய பங்களாதேஷ் நாட்டிலிருந்து பர்மாவில் குடியேறியவர்களாவர். அவர்கள் பல நூற்றாண்டுகளாக அங்கு வாழ்ந்து வந்தாலும், அவர்களுக்கு எவ்வித அடிப்படை உரிமைகளும் கிடையாது. அவர்கள் திருமணம் செய்வதென்றால், இரண்டு பிள்ளைகளுக்கு மேல் பெறுவதென்றால், தமது கிராமங்களைவிட்டு வெளியே செல்வதென்றால், எல்லாவற்றுக்கும் பர்மிய இராணுவ அரசின் அனுமதி தேவை. (இப்படியான கட்டுப்பாடுகள் எதுவும் இலங்கையில் "சிங்கள ஏகாதிபத்தியத்தின்" ஆட்சியின் கீழ் இருக்கும் "அப்பாவி" தமிழ் மக்களுக்குக் கிடையாது என்பதை இவ்விடத்தில் தயவு செய்து நினைவுகூரவும்)

அண்மையில் பர்மாவின் மேற்குப்புறத்திலுள்ள றைக்கைன் மாகாணத்திலுள்ள பெரும்பான்மையின பௌத்தர்களுக்கும், சிறுபான்மையின றொகிங்யா முஸ்லிம் மக்களுக்கும் இடையில் பாரிய மோதல் சம்பவங்கள் நிகழ்ந்தன. இருதரப்பும் வாள்கள், ஈட்டிகள், கோடரிகள் என்பவற்றால் பரஸ்பரம் தாக்கிக் கொண்டன. அதைத் தொடர்ந்து இரு மதத்தவர்களுக்கும் இடையில் பெரும் மோதல்கள் வெடித்து, எண்ணிக்கையில் சிறுபான்மையினரான முஸ்லிம்கள் கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். பர்மாவில் இராணுவ ஆட்சிக்கு எதிராகக் கடுமையான குரல் கொடுத்து, தற்போது பல சலுகைகளைப் பெற்றுக் கொண்டுள்ள மேற்கின் முதலாளித்துவ அரசுகள், பர்மாவில் தற்போது ஒடுக்கு முறைக்குள்ளாகி இருக்கும் முஸ்லிம் மக்கள் பற்றி வாய் திறக்காமல் மௌனம் சாதிக்கின்றன.

மேற்குலக சக்திகள் மட்டுமின்றி, பர்மாவின் சமாதான தேவதை என வர்ணிக்கப்படும் ஆங் சாங் சூகியும் இந்தப் பிரச்சினையில் வாய் திறந்து பாதிக்கப்பட்ட மக்களுக்காக எதையும் கதைக்க மறுக்கிறார். சூகிக்கு இன்று பெரும்பான்மை பர்மிய பௌத்தர்கள் மத்தியில் இருக்கும் செல்வாக்கை வைத்துப் பார்த்தால், அவர் நினைத்தால் முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும். ஆனால் அவர் எதையும் செய்கிறார் இல்லை. அதற்கு ஒரேயொரு காரணம், இப்பொழுது வாய் திறக்காமல் இருந்தால்தான், அடுத்த பொதுத்தேர்தலில் பெரும்பான்மையான பௌத்தர்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வரலாம் என்ற எண்ணம்தான். இது முழுக்க முழுக்க கபடத்தனமேயன்றி வேறு எதுவுமல்ல.

சூகியின் இந்த மௌனத்தைக் கண்டு, அவரது விடுதலைக்காக பல்லாண்டுகளாக குரல் எழுப்பி வந்த உலகின் பல மனித உரிமை அமைப்புக்கள் வேதனையும் கண்டனமும் வெளியிட்டுள்ளன. சூகி போன்ற முதலாளித்துவ ஜனநாயகவாதிகள் போடும் ஜனநாயக, சமாதான, மனித உரிமை வேடங்கள் தமது சொந்த நலன்களை அடிப்படையாகக் கொண்டவை தான் என்பதற்கு இது மேலும் ஓர் உதாரணமாகும்.

- நன்றி: வானவில்-21




## புதிர்ப்போட்டி 13 இல் வெற்றியீட்டியோர்



**பெயர்:** கி.கயறூபி
**பாடசாலை:** யா/ சங்கானை சிவப்பிரகாச மகா.வித்தி



**பெயர்:** த.மதுஷா
**பாடசாலை:** யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.



**பெயர்:** இ.பிரியதர்சினி
**பாடசாலை:** யா /உடுவில் மகளிர் கல்லூரி.



**பெயர்:** ப.தேவகீர்த்தனா
**பாடசாலை:** யா/ நெடுந்தீவு மகா வித்தி.



**பெயர்:** பி.மேசிலோட்
**பாடசாலை:** யா/ விக்கினேஸ்வராக் கல்லூரி.

சரியான விடை எழுதுபவர்களின் விபரங்கள் புகைப்படத்துடன் ஒவ்வொரு சனிக்கிழமையும் வெளிவருகின்றது

அதிக புள்ளிகளைப் பெற்ற திறமைசாலிகள் மூவருக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன. உங்களுக்கான பரிசில்கள் விபரம் பத்திரிகையில் வெளியாகும். மூன்று மாத இறுதியில் தினமுரசு காரியாலயத்தில் வைத்து வழங்கிக் கௌரவிக்கப்படும்.

## 1 பொது அறிவுத் துணுக்குகள்

1) ஜோர்ஜ்புஷ் அமெரிக்காவின் எத்தனையாவது ஜனாதிபதி?
2) ஒசாமா பின்லேடனின் இயக்கத்திற்கு யாது பெயர்?
3) முதலாம் உலக யுத்தத்தில் "பெரிய நால்வர்" என அழைக்கப்பட்ட நாடுகள் எவை?
4) ஸ்பில் பேர்க்கினுடைய புகழ்பெற்ற திரைப்படம் எது?
5) கபிலவஸ்துவில் அவதரித்த சமயப் பெரியவர் யார்?

## 2 குறுக்கெழுத்துப் போட்டி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | | 6 |
| 7 | | | | 11 | |
| | | 15 | 16 | | |
| 19 | | | 22 | | 24 |
| | | 27 | | | |
| | 32 | | | | |

**இடமிருந்து வலம்**

1) உலகை அச்சுறுத்தி வரும் ஆட்கொல்லி
7) இதன் விலையேற்றம் குழந்தைகளைப் பாதித்துள்ளது. (குழம்பியுள்ளது)
11) பயம் என்றும் கூறலாம்
15) விளையாட்டு ஒன்று (குழம்பியுள்ளது)
19) தங்கம் (திரும்பியுள்ளது)
22) ஆயுதங்களை கூர்மையாக்கப் பயன்படும்.
27) இராசிகளில் ஒன்று குழம்பியுள்ளது.
32) கிடைப்பதற்கு கஸ்டமான அல்லது குறைவான விடயங்களை இப்படி விளிப்பர்.

**மேலிருந்து கீழ்**

1) அநுராதபுரத்தை ஆட்சி செய்த மன்னன் (குழம்பியுள்ளது)
2) சரத்குமார் நடித்த திரைப்படம் ஒன்று (தலைகீழ்)
3) வயதான பெண் (குழம்பியுள்ளது)
6) மாங்கல்யம்
11) கோள்களை இப்படியும் அழைப்பர் (குழம்பியுள்ளது)
16) அடைக்கலம் என்றும் கூறலாம் (குழம்பியுள்ளது)
24) இனம் அல்லது சாதி (குழம்பியுள்ளது)
27) குதிரை

## 3 சிந்தனைக்கு விருந்து

**1) வட்டம் ஒன்றின் ஆரை 20% இனால் அதிகரித்தால் பரப்பளவு எத்தனை சதவீதம் அதிகரிக்கும் (.........................)**

**2) நிரப்பு குழாய் 20 நிமிடத்தில் ஒரு தொட்டியில் நீரை நிரப்ப வல்லது. வெளியேற்றும் குழாய் 30 நிமிடத்தில் ஓர் தொட்டி நீரை வெளியேற்ற வல்லது. நிரப்பும் குழாய் காலை 10.00 மணிக்கு திறக்கப்பட்டு வெளியேற்றும். குழாய் காலை 10.00 மணி 10 நிமிடத்தில் திறக்கப்பட்டால் எத்தனை மணிக்கு தொட்டி நிரப்பும். (.........................)**

**3) ஒரு நகரில் தொலைக்காட்சிப் பெட்டியை 52% ஆனோரும் வானொலிப் பெட்டியை 42% ஆனோரும் இரண்டும் இல்லாதோர் 18% ஆகவும் உள்ளது. தொலைக்காட்சிப் பெட்டியை மட்டும் கொண்டுள்ளோர் எத்தனை சதவீதம்? (.........................)**

**4) 1 தொடக்கம் 100 வரையுள்ள எண்களில் 5 என்ற எண் எத்தனை தடவை எழுதப்பட்டிருக்கும்? (.........................)**

**5) 1 தொடக்கம் 100 வரையுள்ள எண்களில் 1 என்ற எண் எத்தனை தடவை எழுதப்பட்டிருக்கும்? (.........................)**

### புதிர்ப்போட்டி 13 இற்கான சரியான விடைகள்

**1**
1) சிவப்பு, நீலம்
2) பச்சை
3) மஞ்சள், நீலம்
4) பச்சை, நீலம்
5) பச்சை

**2**
1) D
2) C
3) E
4) B
5) F

**3**
1) 3
2) 3
3) 1
4) 4

### புதிர்ப்போட்டி 13 இற்கான சரியான விடைகளை எழுதி பாராட்டுப்பெறுவோர்

**பெயர்:** கு.ஜெயராமன்
**பாடசாலை:** யா/ மத்திய கல்லூரி

**பெயர்:** க.தினேஸ்
**பாடசாலை:** யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூர்ரி.

**பெயர்:** மெ.இங்கிதை
**பாடசாலை:** யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை

**பெயர்:** ரா.சுமித்தா
**பாடசாலை:** யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி.

**பெயர்:** கே.கோகிலவாணி
**பாடசாலை:** யா/ செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை.

**பெயர்:** க.பவித்திரா
**பாடசாலை:** யா/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.

**பெயர்:** ரா.சஸ்மிதா
**பாடசாலை:** யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி.


**பெயர்:** செ.அபிமன்
**பாடசாலை:** யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி

**பெயர்:** செ.சிந்துஜன்
**பாடசாலை:** யா/ விக்கினேஸ்வராக் கல்லூரி.

**பெயர்:** ஜோன்சன் ஏரன் டேவிஸ்
**பாடசாலை:** யா/ பரியோவான் கல்லூரி.

## அனுப்பவேண்டிய முகவரி

**புதிர்ப்போட்டி இல....
தினமுரசு
இல .373 பிரதான
வீதி,
யாழ்ப்பாணம்.**



புதிர்ப்போட்டி 15 இற்கான விடைகளை எதிர்வரும் நவம்பர் 20 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.

### முக்கிய குறிப்பு

தபால் மூலமும் அனுப்பலாம், காரியாலயத்திலுள்ள புதிர்ப்போட்டிப் பெட்டியிலும் போடலாம். யாழ். பிரதான பேருந்து நிலையத்தில் உள்ள தினமுரசு செய்திப் பெட்டியிலும் போடலாம்.

### விண்ணப்பதாரரின் விபரம்

மாணவர் முழுப்பெயர்:- ......................................

பாடசாலையின் பெயர் ......................................

தரம் :- :-......................................

தொலைபேசி இல.:-......................................

முகவரி :-......................................

......................................

# யாழில் இடம்பெறும் கலாசார சீரழிவு; பொலிஸார் கவனம் செலுத்தவேண்டும்

## – யாழ். மாநகர உறுப்பினர் விஜயகாந்த்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் சட்ட ஒழுங்குகள் சிறப்பாக அமுல் படுத்தப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் நிலையில் சில கலாசாரத்திற்கு பங்கம் விளைவிக்கும் செயற்பாடுகள் குறித்து யாழ். பொலிஸார் தீவிர நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும் என ஈ.பி. டி.பி. யாழ். மாநகரசபை உறுப் பினர் எஸ். விஜயகாந்த் கேட் டுள்ளார்.

அவர் இது தொடர்பாகத் தெரிவிக்கையில்;

யாழ். பொலிஸாரினால் தற் போது சட்ட ஒழுங்குகள் சிறப் பாக அமுல்படுத்தப்பட்டு வரு கிறது. அந்த வகையில் யாழ். பிரதி பொலிஸ்மா அதிபருக்கும் பொலிஸாருக்கும் மக்கள் சார்பாக நன்றிகளைத் தெரி வித்துக் கொள்கிறேன். யாழ். மாவட்டத்தில் இதயமாக உள்ள யாழ். பேருந்து நிலை யத்தில் இரவு வேளைகளில் மிக மோசமாக விபசார நடவடிக் கைகள் நடைபெற்றுவருகின் றது. இதில் கடந்த ஒருசில வாரமாக மிகவும் மோசமான நிலை காணப்படுகின்றது.

இவ்வாறான நிலை எமது தமிழ்சமூகத்தினுடைய கலாசார பண்பாட்டு விழுமியங் களைப் பாதிக்கும் ஒரு செயற் பாடாக காணப்படுகிறது. எனவே இந்த விடயத்தில் கவ னம் செலுத்தி உடனடியாக நடவடிக்கை எடுத்து கலாசாரத்தைப் பாதுகாக்க வேண்டும் என அவர் பொலி ஸாரைக் கேட்டுக்கொண்டார்.

# டெங்கு நோயிலிருந்து பாதுகாக்க செய்யவேண்டிய வழிமுறைகள்

(நேற்றைய தொடர்ச்சி)

மக்கள் டெங்கு நோயிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டிய வழி முறைகள்.

**சிகிச்சை முறைகள்**

டெங்கு நோய் என்றுகருதினால் ஒரு தகை மையுள்ள வைத்தியரைக் கொண்டு பரிசோதித் தல் அவசியம். ஆரம்பத்தில் சிகிச்சை மேற் கொண்டால் மட்டுமே சிக்கல் ஏற்படுவதையும், உயிர் இழப்பையும் தவிர்க்கலாம். அஸ்பிரின் (Aspirin) GWngz; (Brufen) கொடுப்பதை தவிர்க்க வேண்டும் அவை நோயை சிக்க லாக்கும் பரசெற்றமோல் (Paracetamol) வைத் திய ஆலோசனையுடன் கொடுக்கலாம்.

கடுமையான வயிற்று நோவு, கறுப்பு நிறமாக மலம் வெளியேறுதல், கடும் வியர்வை வெளி யேறுதல், மூக்கு, வாய், தோலுக்கு அடியில் இரத்தக் கசிவு காணப்படுதல் , குளிர்ந்த தோல் என்பன நோயாளிக்கு உயிர் ஆபத்து ஏற்படு வதற்கான அறிகுறிகள் ஆகவே அவ் வேளை யில் உடனடியாக வைத்தியசாலையில் அனு மதித்து சிகிச்சை அளிக்க வேண்டும்.

**டெங்கு பற்றிய அடிப்படைத் தகவல்கள்**

1. Aedes வகை நுளம்பினால் இந்த நோய் தொற்று ஏற்படலாம்.

2. ஒரு நோயாளியை கடித்த நுளம்பு ஒரு சுகதேகியை கடித்தால் அவருக்கு 5-7 நாட்களில் நோயின் அறிகுறி தென்படும். எந்த நுளம்பு நோய்க காவியாக இருந்தது என்பதை கண்டுபிடிக்க முடியாது. ஆகையால் நுளம்புக் கடியில் இருந்து பாதுகாப்பது முக்கியம்.

**நுளம்பு பெருகும் இடங்கள்:**

நீர்த்தேக்கங்கள், நீர் தேங்கிநிற்கும் பாத்தி ரங்கள், பூச்சாடிகள் மற்றும் பரவலாக எறியப் பட்டிருக்கும் வெற்றுப்போத்தல்கள், பாவனைக் குதவாத சட்டிகள் போன்றவற்றிலும், தண்ணீர் தொட்டிகளிலும், மழை நீர் தேங்கி நிற்கும் இடங்களிலும் நுளம்பு பெருகும். தண்ணீரை தேங்கி வைக்கும் கொள்கலன்கள் மூடப்படா மல் இருப்பின் அவை 07 நாட்களுக்கு ஒரு முறை மாற்றப்படவேண்டும். இல்லையேல் நுளம் புன் குடம்பிகள் உருவெடுத்துப் பெருகும்.

(தொடரும்)

**வைத்தியகலாநிதி ஆர்.தெய்வேந்திரம்**
**(யாழ்.வைத்தியசாலை)**

# கருந்தேள்களின் நடமாட்டம் புதுக்குடியிருப்பில் அதிகரிப்பு

## — மழை இருளில் மக்கள் தவிப்பு

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் கருந்தேள் களின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகின் றன. தற்போது மழைக்காலம் ஆரம்பித்துள்ள நிலையில், இரவு வேளைகளில் இவ் விஷ ஜந்துக்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளமை குறித்து பொதுமக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

தற்போது இப்பகுதியில் மீள்குடியேறிய மக்கள் நிலமட்டத்தோடு தற்காலிக வீடமைத்து இருப்பதால் இரவு நேரங்களில் விளக்கு வெளிச் சத்திற்கு வீடுகளுக்குள் இக்கருந்தேள்கள் உட் புகுவதாக கூறப்படுகிறது.

3 அங்குலம் தொடக்கம் 7 அங்குல நீளம் வரையான இக்கருந்தேள்கள் குப்பை கூழங் கள் அதிகமுள்ள இடங்களில் காணப்படு வதோடு, மழை வெள்ளத்தோடும் வந்து சேர் வதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, ஏற்கனவே புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மீள்குடியேறிய மக்களுக்கு வடக் கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின்சாரம் வழங்கப் படாதது குறித்து, குறிப்பிட்ட பகுதியில் வாழும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மின்சாரம் பெறுவதற்கான படிவங்கள் பூர்த்தி செய்து கொடுத்த பின்பும் உரிய அதிகாரிகள் இதுவரை எதுவித நடவடிக்கைகளும் எடுக்காத தால், இப்பொழுது இந்தமழைக்கால இருளுக்குள் தாங்கள் விசஜந்துக்களோடு போராடவேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாக அவர்கள் தெரிவிக் கின்றனர்.

(138)

# தீவக ப.நோ.கூ. சங்கங்களின் மேம்பாடு குறித்து ஆராய்வு

(காரைநகர்)

தீவக மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத் தும் நோக்கில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வின் பணிப்பின் பேரில் ஈ.பி.டி.பி. யின் தீவக பிர தேச அமைப்பாளர்கள் யாழ்மாவட்ட கூட்டுறவு அபி விருத்தி உதவி ஆணையாளரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.


அண்மையில் காரைநகர் பலநோக்குக் கூட்டு றவுச் சங்க காரியாலயத்தில் நடைபெற்ற மேற்படி கலந்துரையாடலில் தீவக கூட்டுறவு சங்கங்களை தரம் உயர்த்துவது மற்றும் அதன் குறைபாடுகள் தொட ரபில் விரிவாக ஆராயப் பட்டது.



இதன்போது ஈ.பி.டி.பி யின் காரைநகர் பிரதேச அமைப்பாளர் வீ.கண்ணன் (ரஜனி), வேலணை பிர தேச சபைத்தவிசாளர் சிவ ராசா (போல்), ஊர்காவற் துறை பிரதேச சபைத்தவி சாளர் ம.ஜெயகாந்தன், நெடுந்தீவு பிரதேச சபைத் தவிசாளர் தானியேல் றெக் சியன் (ரஜீவ்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மெய்தான் பாருங்கோ...

## மத வியாபாரிகள்



“கோயில் இல்லாத ஊரில குடியிருக்கக் கூடாது...” எண்டு எங்கட மூதாதையர்மார் சொல்லி வைச்சாலும் வைச்சினம்... இப்ப பாத்தா சந்து ; பொந்து மூலை முடக்குகள் எல்லாம் கோயிலாத்தான் கிடக்குது கண்டி யளே!

ஊருக்கு நடுவில கோயில்கள் இருந்தால ஊரில சீவிக்கிற சனங்களுக்கு அந்தந்தத் தெய்வம் சுவாமியள் மேல ஒரு பயபக்தி வாறதோடை, அந்தத் தெய்வங்களும் ஊர்ச்சனங்களை ஒரு ஆபத்திலையும் சிக்க விடாமல் காவாந்து பண்ணிக்கொண்டி ருக்கும் எண்ட நம்பிக்கையிலதான் எங்கட மூதாதையர்கள் கோயில் இல்லாத ஊரில குடியிருக்கக்கூடாது... எண்டு சொல்லி வைச்சினம்.

ஆனா, இப்பத்தேக் காலத்தில என்ன நடக்குது...? சாதாரண ஒரு தகரக்கொட்டிலுக்குள்ள இருந்து அருள்பாலிச்ச தெய்வம் சுவாமியள் எல்லாம் மனிசற்ர ‘அரியண்டங்கள்’ தாங்கேலாமல் கருங்கற்சிலையாகவே மாறிப்போச்சுதுகள். பகட்டான தோற்றம் காட்டுற பணக்காரவர்க்கத்தில உள்ள ஒருசிலருக்கு தெய்வம் சுவாமிய்ள் இப்ப அடிமை ; குடிமையளா மாறிப்போன மாதிரி சில இடங்களில தோற்றம் கொள்ளுது. தர்மகத்தா சபைக்கு தலைவராக இருக்கிறவருடைய அதிகாரத்தின்படிதான் ஆண்டவனுக்கு பூசை செய்ய வேண்டிய கலிகால நிலை முத திக்கொண்டிருக்குது.

நான் ஏன் இப்ப இதைக் கிளற வெளிக்கிட்டிருக்கிறன் எண்டால், மனிசருக்கு மத்தியில அறம் எண்ட செயற்பாடுகளும், தெய்வ பயம் எண்டதும் அறவே இல்லாமல் போச்சுது பாருங்கோ. தெய்வத்தை வைச்சுப் பிழைப்பு நடத்துறவன் ஒருபக்கம்... அந்த தெய்வ விக்கிரகங்களைக் களவெடுத்து விக்கிறவன் இன்னொரு பக்கமுமாக இரண்டு வர்க்கத்துக்கும் இடையில ஆண்டவன் அல்லோல கல்லோலப் பட்டுக்கொண்டிருக்கிறான்.

மனிசன் மனிசனை வைச்சு சுரண்டுற மாதிரி தெய்வம் சுவாமியளையும் அதுகளின்ர பேருகளையும் வைச்சு நல்லாச் சுரண்டிச் சம்பாதிச்சுக்கொண்டிருக்கிறான்... எண்டது வெளிப் படையான விசயம் கண்டியளே!

வசதியுள்ளவன் கோயில்களில அன்னதானம் குடுக்க வெளிக் கிடுகிறது ஏழை எளியதுகளின்ர வயித்துப் பசியைப் போக்க... எண்ட அர்த்தம் மாறி, அந்தக் கோயிலின் பெயருடாக தன்ர பேரும் படமும் பேப்பரில வரவேணுமெண்டதை விரும்புற ‘ஆஸ்தி கர்மார்’ இப்பஅளவு கணக்கில்லாமல் கூடிப்போச்சுப் பாருங்கோ.

இப்படியே தெய்வத்தின்ர பேரையும், அதின்ர மதத்தையும் வைச்சுக்கொண்டு அதையே தங்கட சுயநல தேவையளுக்குப் பயன்படுத்தியபடி... வாழ்க்கையில முன்னேற நினைக்கிறது... அறிவுக்குமீறிய அதர்மமாக இருக்கேக்கை, அந்த அதர்மத்தை நீக்கிறதுக்கு ஆண்டவனும் சுனாமி, டெங்கு, நிலச்சரிவு... நில அதிர்வு எண்டு இயற்கைமூலம் நியாயம் தீர்க்கிறதை இன்னமும் ஏன் ஒருத்தரும் புரிஞ்சு கொள்ளுகினம் இல்லை எண்டதும் யோசிக்கவேண்டிய விசயம் கண்டியளே!

இந்த உலகத்தின்ர எங்கோ ஒரு மூலை முடக்குகளில கட வுளை வைச்சும், அந்தக் கடவுளுக்கு எதிராகவும் சில; பல அற்பத்தனமான... அநாகரிகமான செயற்பாடுகள் வெளிப்பார் வைக்குத் தெரியாமல் அரங்கேறிக்கொண்டு தான் இருக்குது... எண்டதை வெளிப்படையாகச் சொல்லலாம்.

இந்த அரங்கேற்றங்களின் உச்சப்பயன்பாட்டின் அறுவடை மூலம் காவி எது...? கமண்டலம் எது...? பட்டை எது...? ‘கொட்டை’ எது...? உண்மையானது எது...? எண்டது தெரியாமல் ஆண்டவன் பால் மென்மையான அடியவர்கள் அங்கலாய்ச்சுக்கொண்டு திரியினம் பாருங்கோ!

சரி இதை விடுவம் • கதையோடை கதையா நான் இன்னும் மொண்டைச் சொல்லிப்போட்டுப் போறன்.

எங்கட ஊரவர் ஒராள் யாழ்ப்பாணத்தில பேப்பர் கொம் பணியில வேலை செய்யிறார் பாருங்கோ. அவர் வன்னிப்பக் கத்தில இருக்கிற கோயில்களின்ர வரலாறுகளைச் சேகரிச்சு தொகுத்து பேப்பரில எழுதிவாறவர் கண்டியளே!

உப்புடித்தான் எங்க ஊரில ஒரு கோயில் தர்மகர்த்தா சபைக் காரரிட்டை போய் விசயத்தைச் சொல்லி கோயிலின்ர வரலாறு பற்றிக் கேட்டிருக்கின்றார்.

அதுக்கு அந்த தர்மகர்த்தா சபைத்தலைவர் என்ன சொன்ன வர் தெரியுமே?

“சீச்சி... அப்பிடி யொண்டும் தர ஏலாது. கோயிலின்ர கும் பாபிஷேக மலரில வரலாறு கிடக்குது. மலர் இன்னமும் வெளியி டேல்லை. இப்ப வரலாறைப் பற்றி பேப்பரில போட்டால், மலரை சனத்திட்டை வித்துக் காசக்கிக்கொள்ள ஏலாது..” எண்டு அந்த மனிசன் கொஞ்சம் ‘சீரியஸ்’ சாகச் சொல்லியிருக்கிறார்.

கோவில் என்னத்துக்கு...? கும்பாபிஷேகம் என்னத்துக்கு...? கும்பாபிஷேக மலர் என்னத்துக்கு...? எண்டது அந்தக்கணத்தில அந்தாளுக்கு விளங்கியிட்டுது. ‘நெற்றிக்கண்ணனை’ வைச்சு நீண்டகாலத்துக்கு வியாபாரம் செய்யேலாது எண்டது...வரலாறு கேட்கப் போனவருக்கு தெரிஞ்சவிசயம். அதால, அவர் பேசா மல் திரும்பி வந்திட்டார்.

அந்தக் கோயிலின் மூலஸ்தானத்துக்குள்ள இருக்கிறவர் திரிபுண்டரங்களைத் தரிச்சவர்... முப்புரங்களை எரிச்சவர்... நாகபாம்புகளை நகையள்மாதிரி அணிஞ்சிருக்கிறவருக்கு, தன்னை வைச்சு வியாபாரம் செய்ய முற்படுகின்ற இந்த மனிசற்ற சுயநலச் செயற்பாடுகள் தெரியாமலே சதாகாலமும் கண்களை மூடிக்கொண்டு தியானத்தில அமர்ந்திருக்கிறார்.

சிலமனிசர் ஆடும்வரை ஆடிக்கொண்டுதான் இருக்கினம். ஆனா இந்த ஆட்டத்திற்குரிய பிரதி பலன்...?

தெய்வத்தை வைச்சு பிழைப்பு நடத்தினவன் உருப்பட்டதாக வரலாறு இல்லை... எண்டது மிக மெய்தான் பாருங்கோ!

**- சின்னக்குட்டி சின்னச்சாமி.**

# பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் இரண்டு நாள் ஊடக கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

"ஊடகமும் சமூகப் பொறுப்புணர்வும்" என்ற தலைப்பில் இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இரண்டு நாள் ஊடக கலந்துரையாடல் எதிர்வரும் நவம்பர் மாதம் 02ஆம், 03ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் ஞானம்ஸ் ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

ஊடகம் தொடர்பாக மக்கள் மத்தியில் புரிந்துணர்வை ஏற்படுத்தி, ஊடகங்களுக்கும் மக்களுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்படும் போது அவற்றை எவ்வாறு அணுகுவது என்பது தொடர்பாக சிவில் சமூகத்தவர் மத்தியில் அறிவூட்டும் வகையிலும் பாடசாலை மாண வர்கள் மத்தியில் ஊடகமும் தொடர்பாடலும் பாடம் தொடர்பாக அறிவூட்டும் வகையிலும் இந்தக் கலந்துரையாடல்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் செய்தி மற்றும் தகவல் சேகரித்தல், அறிக்கையிடல் ஆகிய செயற்பாடுகளின் போது ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஊடகவிலாளர்களுடன் கலந்துரையாடப்படும். இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவால் கண்காணிக்கப்படுகின்ற பத்திரிகைத்துறை சார் ஒழுக்கக்கோவை தொடர்பாக ஊடகவியலாளர்களுடன் கலந்துரையாடுவதன் மூலம் ஊடகவியலாளர்களுக்கும் இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கும் இடையில் இணைப்பைப் பலப்படுத்துவதும் ஊடக செயற்பாட்டில் தவறுகள் இடம்பெறுவதைத் தடுத்தல் என்பனவும் இந்தச் சந்திப்புக்களின் முக்கிய குறிக்கோள்களாகும்.

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு நடத்தும் சிவில் சமூக பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் நவம்பர் 02 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.3.00 மணிமுதல் மாலை 5.00 மணி வரை ஞானம்ஸ் ஹோட்டல் கேட்போர் கூடத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் சிவில் சமூக பிரதிநிதிகள் பங்குபற்ற முடியும்.

ஊடகவியலாளர்களுடனான கலந்துரையாடல் நவம்பர் 03 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் மதிய போசனம் வரையில் மேற்படி ஹோட்டலில் நடைபெறும்.

ஊடகத்துறையில் ஆர்வம் காட்டக் கூடிய இளைஞர்களுக்கான ஊடக அறிவூட்டல் கருத்தரங்கு அதே தினம் காலை 8.30 முதல் பி.ப. 3.30 மணி வரை நடைபெறும்.

அத்துடன் பாடசாலைகளில் ஊடகமும் தொடர்பாடலும் பாடத்தைக் கற்கும் மாணவர்களுக்கான ஊடகம் பற்றிய அறிவூட்டல் கருத்தரங்கு நவம்பர் 02ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி முதல் பி.ப. 1.00 வரை யாழ்ப்பாணம் கொக்குவில் இந்துக் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வுகளில் பங்குபற்ற விரும்பும் யாழ். மாவட்ட ஊடகவியலாளர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள் மற்றும் ஊடகத்துறையில் ஆர்வம் காட்டும் இளைஞர்கள் ஆகியோர் எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்னர் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு, இல: 96, கிருல வீதி, கொழும்பு - 05 என்ற முகவரியுடன் அல்லது 011 - 5353635 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்வதன் மூலம் இந்நிகழ்வுளில் கலந்து கொள்ள முடியும்.

இளைஞர்களுக்கான பயிற்சி செயலமர்வுக்கு 35 பேர் மட்டுமே இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். அதனால் முன்கூட்டியே தொடர்பு கொள்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

கலந்துரையாடல் மற்றும் கருத்தரங்குகளில் இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி இம்ரான் புர்கான், இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் முறைப்பாட்டு உத்தியோகத்தர் எம்.எஸ்.அமீர் ஹுசைன், கமல் லியனாராச்சி, டெய்லி மிரர் பத்திரிகையின் ஆலோசகர் எம்.எஸ்.எம். அய்யூப் உட்பட பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## ஐந்து குழந்தைகளில் ஒன்று உயிரிழப்பு

கடந்த திங்கட்கிழமை கண்டி பொது வைத்தியசாலையில் ஒரே பிரசவத்தில் பிறந்த ஐந்து குழந்தைகளில் ஒன்று உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐந்தாவதாகப் பிறந்த ஆண் குழந்தை நிறை குறைவாகக் காணப்பட்டதாகவும் அக்குழந்தையின் நிறை 535 கிராம் எனவும் கண்டி பொது வைத்தியசாலை பணிப்பாளர் டபிள்யு.ஐ. ஏ.திஸாநாயக்க தெரிவித்துள்ளார். கேகாலை உள்ளூராட்சி சபை உறுப்பினர் ஒருவரின் 29 வயது மனைவிக்கு கடந்த திங்கட்கிழமை ஒரே பிரசவத்தில் ஐந்து குழந்தைகள் பிறந்தமை குறிப்பிடத்தக்கது.


## சர்வதேச பாடசாலைகளில் சிறுவர் மீது துஷ்பிரயோகம்

நாட்டில் காணப்படுகின்ற சர்வதேச பாடசாலைகளை கண்காணிப்புக்கு உட்படுத்துமாறு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை கோரிக்கை விடுத்துள்ளது. கல்வி அமைச்சிடம் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக, அதன் தலைவர் அனோமா திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பாக கடிதம் ஒன்றை சமர்ப்பித்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சர்வதேச பாடசாலைகளில் அதிக அளவில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் இடம்பெறுவதாக முறைப்பாடு தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்தே, இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பருத்தித்துறை மக்களுக்கு பாரிய குழாய் நீர்த் திட்டம்



(பருத்தித்துறை)

674 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டில் பருத்தித்துறைக்கு பாரிய குழாய் நீர் வழங்கும் திட்டமொன்றை அரசாங்கம் ஆரம்பிக்கவுள்ளது என நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சின் செயலாளர் அமரனாத அபயகுணசேகர தெரிவித்துள்ளார்.

பருத்திதுறையில் வாழும் மக்கள் குடி நீர் மற்றும் ஏனைய தேவைகளுக்காக கிணற்று நீரை சார்ந்துள்ளனர். இங்கு ஏறத்தாழ 50 வீதமான பிரதேசத்தில் கிணற்று நீர் உவர்ப்புத் தன்மை கொண்டதாக உள்ளது. இதனால் சுத்தமான குடிநீரைப் பெற்றுக்கொள்வதற்காக மக்கள் வேறு பிரதேசங்களுக்கு செல்லவேண்டியுள்ளது.

20 கிராம சேவையாளர் பிரிவுகளில் அண்ணளவாக இங்கு வாழும் 22,000 மக்களுக்கு சுத்தமான நீரை வழங்குவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இத்திட்டத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி, செஞ்சிலுவை சங்கத்தின் சர்வதேச கூட்டமைப்பு மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஆகியன நிதியுதவி வழங்குகின்றன.

## தலசீமியா நோய் மருந்தில் சர்ச்சை மருத்துவ நிபுணர்களிடம் ஆலோசனை

(கொழும்பு)

தலசீமியா நோயாளர்களுக்கு வழங்கப்படுகின்ற டெஸ்பெரல் (Desferal) மற்றும் தலிபர் (Talifer) ஆகிய இரு மருந்து பொருட்கள் தொடர்பாக ஊடகங்களில் வெளியாகியுள்ள கருத்துக்களை அடுத்து, இந்த இரண்டு மருந்துப் பொருட்கள் தொடர்பாக மீளவும் துறைசார் மருத்துவ நிபுணர்களிடம் ஆலோசனை பெற சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

தலிபர் மருந்துப் பொருளை சில தலசீமியா நோயாளர்கள் பாவிக்கும் போது பக்கவிளைவுகளுக்கு முகம் கொடுப்பதாகவும், டெசிபெரல் மருந்துப் பொருளைப் பாவிக்கும் போது அவ்வாறான பக்க விளைவுகள் ஏற்படுவதில்லை என்றும் சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இவ்விரு மருந்துப் பொருளும் தலசீமியா நோயாளர்களுக்கு சுகாதார அமைச்சினால் இலவசமாக வழங்கப்படுபவையாகும். என்றாலும் இம்மருந்துப் பொருட்களை கொள்வனவு செய்து நோயாளர்களுக்கு வழங்குவதாயின் அது தொடர்பாக மருத்துவ நிபுணரின் ஆலோசனையைப் பெறுவது அவசியம்.

மருந்துப் பொருளின் தரத்தைப் பரீட்சித்து நிபுணர்கள் வழங்கும் சிபாரிசுக்கு அமையவே நோயாளிக்கு குறித்த மருந்துப் பொருட்களை வழங்க வேண்டும் எனவும் அவ்வதிகாரி கூறினார்.

இதேவேளை தலசீமியா நோயாளிகளுக்கு வழங்கப்படுகின்ற தலிபர் மருந்து பொருள் பாவனை மூலம் பக்கவிளைவுகள் ஏற்படாது என சில மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். இன்னும் சில மருத்துவ நிபுணர்கள் குழந்தைகளும் இம்மருந்துப் பொருளைப் பாவித்த பின்னர் உடல் ரீதியான சில பக்க விளைவுகளுக்கு முகம்கொடுப்பதாகக் கூறுகின்றனர்.

இவ்வாறான நிலையில் தான் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன இம்மருந்துப் பொருட்கள் தொடர்பாக மீண்டும் மருத்துவ நிபுணர்களினதும், துறை சார் புத்திஜீவிகளினதும் அபிப்பிராயத்தைப் பெறுமாறு அமைச்சின் மேலதிகச் செயலாளர் கலாநிதி பாலித மஹீபாலவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

## மும்மொழிகளில் பெயர்ப்பலகை இல்லாவிடின் நடவடிக்கை

(கொழும்பு)

மூன்று மொழிகளிலும் பெயர்ப் பலகை இருக்க வேண்டுமென தனியார் பேருந்துகளுக்கு அறிவுறுத்தாத மாகாண சபை அதிகாரிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்போவதாக தனியார் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

சகல பேருந்துகளிலும் கடந்த ஏப்ரல் 13ஆம் திகதிக்கு முன் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் எழுதப்பட்ட பெயர்ப்பலகையை பயன்படுத்த வேண்டுமென மனித உரிமைகள் ஆணைக்குழு போக்குவரத்து அமைச்சுக்கு பணித்திருந்தது.

பெயர்ப் பலகைகள் மூன்று மொழிகளிலும் இல்லாததால் பயணிகளுக்கு ஏற்படும் அசௌகரியங்கள் பற்றி மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பபாடு செய்திருந்தது.

மனித உரிமை ஆணைக்குழுவின் பணிப்புரையை செயற்படுத்தப் போவதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவும் இலங்கை போக்குவரத்து சபையும் கூறின.

இருப்பினும், பல பேருந்துகள் சிங்கள மொழி பெயர்ப் பலகையை மட்டும் கொண்டிருக்கின்றன. அதேசமயம், வடக்கு கிழக்கில் அநேகமாக தமிழில் மட்டும் இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

சேவையிலுள்ள 20 ஆயிரம் பேருந்துகள் மாகாண போக்குவரத்து அதிகாரத்தின் கீழ் வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## இடி, மின்னலுடனான மழை வடக்கு, கிழக்கிலும் நீடிக்கும்

(கொழும்பு)

இடி மின்னலுடன் கூடிய அடைமழையுடனான சீரற்ற காலநிலை எதிர்வரும் டிசம்பர் மாதம் வரை வடக்கு, கிழக்கு உட்பட நாடு முழுவதும் நீடிக்குமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது இடைப்பருவப் பெயர்ச்சி காலநிலை காரணமாக நாடுமுழுவதும் எதிர்வரும் டிசம்பர் மாதம் வரையில் அடைமழை பெய்யும். பொதுவாக நண்பகல் 2 மணிக்கு பின்பாகவே இப்பருவப் பெயர்ச்சியின் போது மழை பெய்யும். அந்த வகையில் இக்காலப்பகுதிக்குள் வடக்கு, கிழக்கு உட்பட அனைத்துப் பகுதிகளிலும் கடும் இடி, மின்னலுடன் மழை பெய்யக்கூடுமென்பதால் பொது மக்கள் மின்னல் தாக்கம் குறித்து அவதானமாக இருத்தல் அவசியம் எனக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும் மழை பெய்யும் வேளையில் தற்காலிகமாக வீசக்கூடிய கடும் காற்று குறித்து முன்னெச்சரிக்கையாக இருப்பதுடன் தாழ்நிலப்பகுதியில் வாழ்வோர் வெள்ள அனர்த்தத்தினால் ஏற்படக்கூடிய இழப்புக்களை தவிர்த்துக்கொள்ளும் வகையில் செயற்படுவது அவசியமெனவும் வலியுறுத்தப்படுகிறது.

கடலிலும் வெவ்வேறு திசைகளில் மணித்தியாலத்திற்கு 20 தொடக்கம் 30 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடிய போதிலும் இலங்கையைச் சூழவுள்ள கடலில் கொந்தளிப்பு ஏற்பட வாய்ப்பில்லை எனவும் வானிலை அவதான நிலையம் கூறுகின்றது.

# க.பொ.த. (சாதாரணதர) மாதிரி வினாத்தாள்
# G.C.E. (O/L) Examination model Paper

வரலாறு 33 T I ஆசிரியர் : V.முரளி

## பகுதி I

1) "வரலாறு பற்றி பல்வேறு வரைவிலக்கணங்கள் முன்வைக்கப்பட்டபோதிலும் வரலாறு என்பது எல்லா விடயங்களையும் உள்ளடக்கிய ஒரு இல்லம் போன்றது எனக் கூறியவர் யார்?
1) மகாதிஸ்ஸ தேரர் 2) பிலினி
3) G.M.திரவிலியன் 4) E.H.கார்

2) மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி இலங்கையில் அனுராதபுர நகரில் முதன்முறையாக கிராம எல்லைகளை தீர்மானித்த மன்னன்.
1) தேவநம்பிய தீசன் 2) விஜயன்
3) துட்டகைமுனு 4) பண்டுகாபயன்.

3) வரலாறு மூலாதாரங்களால் கட்டியெழுப்பப்படும். அவற்றுள் தொல் பொருட்களுள் உள்ளடங்குபவை,
1) கல்வெட்டு, நாணயம், வம்சக்கதை
2) நாணயம், கற்தூண், இலக்கியம்.
3) வம்சக்கதை, செதுக்கல், சிலை
4) கல்வெட்டு, நாணயம், மண்தட்டுகள்.

4) பதுளை தூண் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம்
1) ஆட்சி முறை 2) நிலத்தை பகிர்ந்தளித்தல்
3) விகாரை, ஆராமைகளின் நிர்வாகம்
4) வர்த்தக நிலையங்களின் நிர்வாகம்

5) மகாசேனன் நீர்ப்பாசனத்துறைக்கு பெரும் சேவையாற்றியதால் பெற்ற சிறப்புப் பெயர்,
1) மகாசேன தெய்வம் 2) மினிப்பே தெய்வம்
3) காவல் தெய்வம் 4) மின்னேரி தெய்வம்

6) குளக்கட்டை நீர் அரிப்பிலிருந்து பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்ட பகுதி,
1) கலிங்கற் தொட்டி 2) சுருங்கை
3) அழைத்தாங்கி 4) கலிங்கள்

7)

| | |
|---|---|
| 1. மகாசேனன் | A மகாவிலச்சிய குளம் |
| 2. தாதுசேனன் | B பதவியகுளம் |
| 3. வசபன் | C மின்னேரியாவாவி |
| 4. II முகலன் | D கலாவாவி |

1) CADB 2) CBDA 3) CDBA 4) ABCD

8) புலத்சிங்கள, பாகியன்கல, குருவிட்ட படதொம்பே, கிதுல்கலபெலிலேன ஆகிய இடங்களின் பொது இலட்சணங்களாவன,
1) ஆதிக்குடிகள் வாழ்ந்த இடங்கள்
2) புராதன குளங்கள் அமைக்கப்பட்ட இடங்கள்
3) வெளிநாட்டவர்களின் வருகைபற்றிய ஆதாரங்கள் கிடைத்த இடங்கள்.
4) புராதன கற்தூண்கள் காணப்படும் இடங்கள்.

9) புராதன கலாசாரத்தின்படி மன்னர் முடி சூடும் விழா இலங்கையில் எம்மன்னனது காலத்தில் ஆரம்பித்தது?
1) பண்டுகாபயனது காலம் 2) துட்டகைமுனுவின் காலம்
3) வலகம்பாவின் காலம் 4) தேவநம்பிய தீசன் காலம்

10) அக்னி, வருணன் ஆகியோர் ஆரியர் வழிபடும் முக்கிய தெய்வங்கள். அவர்கள் முக்கியத்துவம் பெறுவது
1) நெருப்பு, மழை 2) சூரியன், சந்திரன்
3) வானம், பூமி 4) ஆண், பெண்

11) வலகம்பா மன்னனது ஆட்சிக்காலத்தில் நிகழ்ந்த ஆக்கிரமிப்பு யாது?
1) சேனன், குத்திகன் ஆக்கிரமிப்பு 2) பத்து திராவிடர் ஆக்கிரமிப்பு
3) ஏழு திராவிடர் ஆக்கிரமிப்பு 4) கலிங்க மாகன் ஆக்கிரமிப்பு

12) வகல் அரசவம்சத்தின் சரியான ஒழுங்குமுறையாவது,
1) வகல், செயியது, லோதி, கல்ஜி, துக்ளக்.
2) துக்ளக், செயியது, லோதி, வகல், கல்ஜி.
3) வகல், துக்ளக், கல்ஜி, லோதி, செயியது.
4) வகல், கல்ஜி, துக்ளக், செயியது, லோதி.

13) நாடுகாண் பயணங்களில் ஈடுபட்ட முதலிரு நாடுகள்
1) போர்த்துக்கல், இங்கிலாந்து 2) போர்த்துக்கல், ஸ்பானியா
3) போர்த்துக்கல், பிரான்ஸ் 4) போர்த்துக்கல், ஒல்லாந்து

14) கைத்தொழில் புரட்சியின் பிரதான துறைகளாவன
1) நெசவுத்தொழில், இரும்புருக்குத் தொழில், நிலக்கரித் தொழில்
2) நெசவுத்தொழில், தொடர்பாடல், போக்குவரத்து.
3) நெசவுத்தொழில், பீங்கான் உற்பத்தி, நிலக்கரித்தொழில்
4) நெசவுத்தொழில், தொடர்பாடல், வைத்தியத்துறை.

15)

| | |
|---|---|
| 1. மைக்கல் ஏஞ்சலோ | A வானியல் சாஸ்திரம் |
| 2. கொப்பணிகஸ் | B சித்திரக்கலை |
| 3. விலியம் ஹார்வே | C நாடுகாண் பயணங்கள் |
| 4. கொலம்பஸ் | D வைத்தியம் |

1) BADC 2) CADB 3) ABCD 4) ADBC

16)

| | |
|---|---|
| 1. மகா அக்பர் | A தில்லி சுல்தானைத் தோற்கடித்தமை |
| 2. சாஜகான் | B பேரரசினை உருவாக்கியமை |
| 3. பாபர் மன்னன் | C எல்லா மதங்களுக்கும் அனுசரணை |
| 4. ஜஹாங்கீர் | D தாஜ்மகாலை நிர்மாணித்தமை |

1) CADB 2) CDAB 3) CBAD 4) DCBA

17) இந்தியாவில் பேரழிவினை ஏற்படுத்திய கலிங்க யுத்தத்தின் பின்னர் அசோக மன்னன் தேர்ந்தெடுத்த கொள்கையாவது,
1) வெவ்வேறு நாடுகளுக்கும் தர்மதூதுவர்களை அனுப்புதல்
2) திக் விஜயக் கொள்கை.
3) சக்விதி ராஜ கொள்கை.
4) தர்மவிஜயக் கொள்கை.

18) முதலாம் விஜயபாகுமன்னன் பொலனறுவையை சோழரிடமிருந்து மீட்பதற்காக தென் பிரதேசத்திலிருந்து மூன்று வழிகளில் படைகளை நடத்திச் சென்றான். அதற்குள் அடங்காத வழியினைத் தெரிக.
1) மகாநாகசுளத்திலிருந்து மேற்கு நோக்கி அனுராதபுரம், மகாதித்த வழியினூடாக படைகளை அனுப்புதல்.
2) மகாவலிகங்கை கரையினூடாக படைகளை நகர்த்தல்.
3) மத்திய மலைநாட்டுக் கரையினூடாக படைகளை கொண்டு செல்லல்.
4) கிழக்கு கரையினூடாக படைகளை நகர்த்தல்.

19) கீழே தரப்பட்டுள்ள விடயங்களுள் ஐரோப்பியரின் ஆட்சியினால் இலங்கையின் சமூகத்தில் ஏற்பட்ட தாக்கங்களைக் குறிக்கும் விடையாவது,

| | |
|---|---|
| A சர்வசன வாக்குரிமை | B பிரதேச ரீதியான நீதிமுறை |
| C சாதிப்பாகுபாடு | D இராஜகாரியமுறை |
| E பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை | F ரோமன் கத்தோலிக்கமதம் |

1) AEF 2) ABC 3) ACD 4) CAF

20) ஐரோப்பாவின் மத்திய காலம் எனப்படுவது
1) கி.பி 500 - கி.பி 1500 2) கி.பி 1000 - கி.பி 1500
3) கி.பி 100 - கி.பி 1600 4) கி.பி 500 - கி.பி 1000

21) மிகச்சிறந்த கலைப்படைப்பான இது விஞ்ஞான ரீதியான படைப்பாகவும் கொள்ளப்படுகிறது. அதற்குப் பொருத்தமான படைப்பாவது,
1) சீகிரியா 2) கலிங்கற்தொட்டி
3) ருவன்வெலிசாய 4) குட்டம் பொகுன

22)

| | |
|---|---|
| 1. செயன்முறைவாதம் | A எல்லாவற்றையும் விட மனிதன் மேலானவன் |
| 2. வணிகவாதம் | B இலாபத்தை நோக்கமாகக் கொண்டு பொருளாதார நடவடிக்கை |
| 3. மானுடவாதம் | C அதிக பயனுடையதை உயர்வாகக் கருதுதல். |
| 4. தனவாதம் | D எல்லாவற்றையும் விட பணமே மேலானது |

1) CDAB 2) CADB 3) ACDB 4) BCAD

23) "மொஹமட் அலி ஜின்னாவை முஸ்லிம் மக்கள் மறக்கவே மாட்டார்கள்" அதற்கான காரணமாவது,
1) முஸ்லிமகள் இந்தியாவிலிருந்து மக்கா செல்ல நடவடிக்கைகளை மேற்கொண்டமை.
2) முஸ்லிம்களுக்கென தனிநாடாக பாகிஸ்தானைப் பெற்றுக்கொடுத்தமை.
3) முஸ்லிம்கள் சுதந்திரமாக தொழுகை நடாத்த சந்தர்ப்பங்களை வழங்கியமை.
4) முஸ்லிம்கள் உலகின் ஒவ்வொரு நாட்டிலும் வர்த்தகத்தை மேற்கொள்ள உதவிகளை வழங்கியமை.

24) "நாடுகளுக்கு சுதந்திரம் அவசியம்" "இனங்களுக்கு விடுதலை அவசியம்", "மக்களுக்கு புரட்சி அவசியம்" எனும் பிரகடனங்களின் மூலம் சீன மக்களை தைரியப்படுத்தியவர்,
1) சௌ-என்-லாய் 2) யுவாங்சிகய்
3) சுன் - யாத் - சென் 4) சியெங்கய்ஷெக்

25) இந்தியாவின் மேன்மையாளர் என அழைக்கப்படுபவர்
1) தடபாய் நபரோஜி 2) சுரேந்திரநாத் பானர்ஜி
3) மகாத்மா காந்தி 4) லாலா லஜ்பதி ராய்

26) அரசியல் யாப்புச் சட்டத்தின்படி பிரதிநிதிகள் சபையின் உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக தேர்தல் கட்சி அடிப்படையில் நடத்தப்படும். அவ்வகையில் 1881 இல் யப்பானில் முதல் தடவையாக தோற்றுவிக்கப்பட்ட கட்சி, 1) கம்யூனிட் கட்சி 2) தொழிலாளர் கட்சி
3) தாராண்மைவாதக் கட்சி 4) தேசியக்கட்சி

27) முழு உலகினையும் தொடர்படுத்தி நடைபெற்ற முதலாம் உலகயுத்தம் இடம்பெற்ற காலப்பகுதி.
1) கி.பி 1914 யூலை 27 கி.பி 1919 நவம்பர் 11 வரை
2) கி.பி 1918 யூலை 28 கி.பி 1919 நவம்பர் 11 வரை
3) கி.பி 1916 யூலை 16 கி.பி 1918 யூலை 25 வரை
4) கி.பி 1914 யூலை 25 கி.பி 1918 நவம்பர் 10 வரை

28) இலங்கையில் அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுதல், நிர்வாகத்தினால் அநீதி இழைக்கப்படுதல், முறைகேடான ஆட்சியினால் நாட்டு மக்களுக்கு ஏற்படும் இன்னல்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுத்தல் போன்றவற்றுக்காக ஏற்படுத்தப்பட்ட பதவி,
1) இலங்கையின் ஜனாதிபதி 2) இலங்கையின் சபாநாயகர்
3) ஒம்புட்ஸ்மன் 4) இலங்கையின் பொலிஸ்மா அதிபர்

29) கோட்டை யுகத்தில் எழுதப்பட்ட பிரசித்தி பெற்ற இலக்கியங்களாவன,
1) காவ்யசேகர, குத்திலகாவிய, லோவடசங்கிராவ, பரகும்பாசிரித.
2) குத்திலகாவிய, லோவடசங்கிராவ, பரகும்பாசிரித.
3) காவ்யசேகர, அநாகத வங்சய, லோவடசங்கிராவ, பரகும்பாசிரித.
4) காவ்யசேகர, குத்திலகாவிய, மகாவம்சம், பரகும்பாசிரித.

30) கி.பி 1917 ரஷ்யாவில் ஏற்பட்ட புரட்சியின் பின்னர் உலகில் காணக்கூடிய தாயிருந்த பிரதான மாற்றம்,
1) நாடுகளுக்கிடையில் யுத்த பலம் நாளுக்கு நாள் பரவியது.
2) உலகில் கமியூனிஸ்ட் நிர்வாகத்தை நிலைநிறுத்த ரஷ்யாவின் செல்வந்தக் குழுக்களின் தலைமையைப் பெற அமெரிக்கா முனைந்தமை.
3) கைத்தொழில் முயற்சிகளில் ஜப்பானும் விவசாயத்துறையில் ரஷ்யாவும் அதிக அக்கறை காட்டின.

4) உலகில் சமாதானத்தை ஏற்படுத்த பிரித்தானியாவும் உலகில் செல்வந்த நாடாக ஐக்கிய அமெரிக்காவும் முனைந்தன.

31) இலங்கையில் நடைமுறையிலுள்ள அரசியல் யாப்பு பற்றிய சரியான கூற்று எது?
1) ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து வருடங்கள்
2) பிரதமர் அமைச்சரவையின் தலைவர்.
3) ஒரு விடயம் சட்டமாக நாடாளுமன்றத்தின் பிரதான செயலாளரின் அனுமதி அவசியம்.
4) நாடாளுமன்றத்திற்கு அமைச்சர்களைத் தெரிவு செய்தல் பிரதேச வாரியான பிரதிநிதித்துவ முறையிலாகும்.

32) டொனமூர் யாப்புச் சீர்திருத்தத்தில் உள்ளடக்கப்பட்ட விடயமாவது,
1) சர்வசன வாக்குரிமையும் செனட் சபையும்
2) சட்டக்கழகமும் சட்டவாக்க கழகமும்
3) பிரதிநிதிகள் சபையும் நீதிச்சேவைக் குழுவும்
4) பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் அரசுக்கழகம்.

33) கீழே தரப்பட்டுள்ளவை பிரதான நாடுகள் சிலவற்றின் இரகசிய உளவுச்சேவைகள் ஆகும். அதில் பொருத்தமற்ற விடை யாது?
1) ஐக்கிய அமெரிக்க குடியரசு - மத்திய இரக்சிய உளவுச்சேவை
2) இஸ்ரேல் - மொசாட்
3) ஜப்பான - ஓரிடாகோ அமைப்பு
4) சோவியத் ரஷ்யா - தேசிய பாதுகாப்பு கமிஷன் (KGB)

34)
1. J.R ஜயவர்த்தன — A ஹிரோஷிமாவிற்கு அணுகுண்டு வீசியமை.
2. ஹரி S.ட்ரூமன் — B ஜப்பானின் லிபரல் கட்சி
3. இட்ககி சமுராய் — C ஈடோ நகரம்
4. டொகுகாவா இயாஷு — D சான்பிரான்சிஸ்கோ மாநாடு.

1) ABDC 2) DABC 3) CABD 4) BCDA

35) ரஷ்யாவின் போல்ஷவிக் கட்சியின் தலைமைத்துவத்தை வகித்தவர்,
1) II ஆம் அலெக்சாந்தர் 2) III ஆம் அலெக்சாந்தர்
3) மகாபீட்டர் 4) லெனின்

36) முதலாம் உலகயுத்தத்தின் விளைவான "பொலிஸ் கொரிடோர்" எனும் விளைவுடன் தொடர்புடைய துறைமுகம்,
1) டுலோன் 2) டென்சிக் 3) கேடீஸ் 4) திரிப்போலி

37) 1919 இல் நிறுவப்பட்ட இலங்கை தேசிய சங்கத்தின் முதலாவது தலைவர் யார்?
1) சேர்.பொன். இராமநாதன் 2) டீ.பீ.ஜயதிலக
3) டீ.எஸ்.சேனநாயக்க 4) சேர்.பொன். அருணாசலம்

38) 1931 யாப்புச் சீர்திருத்தத்தின் கீழ் அமைக்கப்பட்ட சட்டவாக்க கழகத்தின் நிர்வாகக்குழுக்களும் அதன் தலைவர்களும் சரியாகத் தொடர்புபடுத்தினால்,
1. சுயதொழில் முயற்சி — A C. பட்டுவன்துடாவ
2. விவசாயமும் காணியும் — B C.W.கன்னங்கரா
3. உள்நாட்டு அலுவல்கள் — C D.S.சேனநாயக்க
4. கல்வி — D D.B.ஜயதிலக

1) BDAC 2) DCAB 3) CDAB 4) DCBA

39) 19 ஆம் நூற்றாண்டின் இலங்கையின் கல்வி மறுமலர்ச்சியோடு தொடர்புடையோரும் அவர்களது சேவையும்,
1. வலானே சித்தார்த்த தேரர் — A வித்தியாலங்கார பிரிவேனா
2. ஹிக்கடுவே சுமங்கல தேரர் — B பரம தம்ம சைத்திய பிரிவேனா
3. ரத்மலானே தம்மாலோக தேரர் — C கொழும்பு ஆனந்தா கல்லூரி.
4. ஹென்ரி ஸ்டீல் ஒல்கொட் — D வித்தியோதய பிரிவேனா.


1) BDCA 2) DCAB 3) CDAB 4) BDAC

40) 1956 இன் பின்னர் ரஷ்யாவின் அனுசரணையுடன் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட பாரிய கைத்தொழில் முயற்சிகள் எங்குள்ளன?
1) ஒருவெல 2) களனி 3) பியகம 4) கொக்கல

## பகுதி I

01)
1) இலங்கைப் புறவுருவப்படத்தில் பின்வருவனவற்றைக் குறித்துப் பெயரிடுக.
அனுராதகம, மகாதித்த, நல்லூர், மகாகம, தீகவாபி, வெல்லஸ்ஸ, களுத்துறை, சத்கோறளை, கோகண்ண, மகியங்கனை.

2) உலகப்புறவுருவப்படத்தில் பின்வருவனவற்றைக் குறித்துப் பெயரிடுக.
ரோம், லிஸ்பன், தாம்ரலிப்தி, டோக்கியோ, கேன்டன், நன்னம்பிக்கைமுனை, கொன்ஸ்தாந்திநோபிள், பனாமாகால்வாய்.



02) 1) இப்படத்தில் காட்டப்பட்டுள்ள விடயம் யாது?
2) இதனை நிர்மாணித்த மன்னன் யார்?
3) நிர்மாணித்தமைக்கான காரணம் யாது?
4) எந்நாட்டில் அமைந்துள்ளது?

03) அடைப்பினுள் இருந்து சரியான விடைகளைத் தெரிந்து எழுதுக.
1) இலங்கைக்கு பௌத்த மதத்தை அறிமுகப்படுத்தியவர் யார்?
2) தென்னிந்திய எழு திராவிடர் குழுவின் ஆக்கிரமிப்பின்போது வலகம்பா மன்னனுக்கு பிரச்சினையை ஏற்படுத்தியவன் யார்?
3) சீகிரிய ஓவியங்கள் எக்கலை சம்பிரதாயத்தைப் பிரதிபலிக்கிறது?
4) அடால்ப் ஹிட்லரின் எண்ணங்களின் தொகுப்பு என்ன பெயரால் அழைக்கப்படுகிறது?

(மெயின்காவிப் / மறுபிறப்பு / மகிந்ததேரர் / தீய / குப்த /மௌரிய)

04)
1) முசோலினியின் கொள்கைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட கட்சி எது?
2) இறுதி இராப்போசனம் எனும் சித்திரத்தை வரைந்தவர் யார்?
3) மேற்கிந்தியத் தீவுகளை நோக்கிப் பயணம் செய்த ஸ்பானிய நாட்டைச் சேர்ந்த முதல் நாடுகாண் பயணி யார்?
4) II ம் உலக யுத்தத்தின் பின்னர் சமாதானத்திற்காக உருவாக்கப்பட்ட அமைப்பு எது?

## பகுதி II

01)
i) பின்வரும் வரைவிலக்கணங்களை வெளியிட்ட்வர்களைத் தெரிக.
1) நிகழ்காலத்தை விளங்கிக்கொள்ளும் சாவி வரலாற்றினை விளங்கிக் கொள்வதாகும்.
2) வரலாறு என்பது பல விடயங்களை உள்ளடக்கிய ஒரு இல்லமாகும்.
3) நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் கட்டியெழுப்புவது இறந்தகாலத்தின் அடிப்படையிலாகும்.

( G.M.திரவிலியன் / ஸ்ரீ ஜவகர்லால்நேரு / E.H.கார்)

ii) வரலாறு என்பதனுள் நான்கு முக்கிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவற்றைக் குறிப்பிடுக.

iii) வரலாற்று மூலாதாரங்கள் எனும் வகையில் கல்வெட்டுகள் வகிக்கும் முக்கியத்துவங்களை விளக்குக.

iv) இலங்கைக்கு வருகைதந்த ஆரியர் இந்தியாவின் வெவ்வேறு பிரதேசங்களிலிருந்து ஒரே சமயத்தில் அல்லாது பல்வேறு சந்தர்ப்பங்களில் வருகை தந்தமைக்கான காரணங்கள் யாவை?

02)




i) 1, 2, 3 இலக்கங்களால் காட்டப்பட்டுள்ள ஆரியக் குடியேற்றங்களைப் பெயரிடுக.
ii) வேதகால பலாங்கொடை மனிதர்கள் பின்பற்றிய மரணச்சடங்கு முறைகள் இரண்டினை எழுதுக.
iii) இலங்கை வரலாற்றில் துட்டகைமுனு மன்னன் சிறப்பிடம் பெறுவதற்கான காரணங்கள் இரண்டினை விளக்குக.
iv) மகாசேன மன்னனுக்கு மகாவம்சத்தில் உயர்ந்த இடம் வழங்கப்படாவிட்டாலும் மக்கள் அவரைத் தெய்வமாக மதித்தமைக்கான காரணங்களை விளக்குக.

(தொடரும்.....)

### கடந்த செவ்வாய்க்கிழமை வெளியான விஞ்ஞான பாட பயிற்சி வினாக்களுக்கான விடைகள்

| வினா விடை | வினா விடை | வினா விடை | வினா விடை |
|---|---|---|---|
| 1) 4 | 11) 1 | 21) 3 | 31) 1 |
| 2) 2 | 12) 2 | 22) 2 | 32) 1 |
| 3) 1 | 13) 1 | 23) 4 | 33) 1 |
| 4) 2 | 14) 1 | 24) 4 | 34) 2 |
| 5) 1 | 15) 4 | 25) 3 | 35) 2 |
| 6) 2 | 16) 3 | 26) 3 | 36) 3 |
| 7) 1 | 17) 2 | 27) 2 | 37) 1 |
| 8) 3 | 18) 3 | 28) 1 | 38) 3 |
| 9) 2 | 19) 2 | 29) 4 | 39) 2 |
| 10) 4 | 20) 3 | 30) 1 | 40) 3 |

## பகுதி II

பகுதி A

01) 1) மொலஸ்கா

2) மாமரம் - வலையுரு நரம்பமைப்பு, ஆணிவேர்
நெல் - சமாந்தர நரம்பமைப்பு, நாருருவேர்

3) அல்கா ⟶ நீர்வண்டு ⟶ தவளை ⟶ பாம்பு


4) அ) முழுவுற்றெறிப்பு ஆ) ஒளிமுறிவு

5) அ) $V = \frac{d}{t}$ $t = \frac{d}{v}$

6) அ) $(NH_4)_2 SO_4$

ஆ) N

7)




02) A

1) குளோரபில்
2) காபனீரொட்சைட்டு, நீர்
3)
அ) நீர் + காபனீரொட்சைட்டு $\xrightarrow[\text{மச்சையம்}]{\text{சூரிய ஒளி}}$ குளுக்கோசு = ஒட்சிசன்

ஆ) ஒளிச்சக்தி ⟶ இரசாயனசக்தி

B

1) A, B, D, C

2) அ) நரம்புக்கலம்
ஆ) வெண்குருதிச் சிறுதுணிக்கை
இ) மழமழப்பான தசை

(iii)



அமிபா பரமீசியம் கிளமிடோமோனஸ் யூக்கலினா

03) A

1) நீரின் வெப்பநிலை அதிகரிப்பதுடன் கரைதிறன் அதிகரிக்கும்.

2) பொற்றாசியம் நைத்திரேற்று

3) 80g

4) $Cu^2 SO_4^{2-}$ K+, $NO_3$-

5) பிரிகைத்தாக்கம்

6) கரைசலின் உள்ள $Cu^{2+}$ அயன் அணுவாக மாற்றப்பட்டு இரும்பின் மீது படிகிறது. இதனால் $Cu^{2+}$ அயன் அகற்றப்படுகிறது.

B 1) a -6, b -8, c - 6 d - 2, e -3, f - D

2) C 3) A

# எந்தவொரு சூழ்நிலையையும் இராணுவம் எதிர்கொள்ளும்


## அமைச்சர் அந்தோனி தெரிவிப்பு



(புதுடில்லி)

கடந்த 1962ஆம் ஆண்டு நடந்த சீனப்போருக்கு பின்னர் இந்தியாவின் இராணுவ பலம் வலுப்படுத்தப்பட்டுள்ளது. எந்த சூழ்நிலையையும் சமாளிக்கும் வகையில், முழுத் தகுதியும் பெற்றுள்ளது என மத்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி தெரிவித்தார். டில்லியில் கடற்படை தொடர்பான கருத்தரங்கில் பங்கேற்ற மத்திய பாதுகாப்பு அமைச்சர் அந்தோனி நிருபர்களிடம் கூறியதாவது; கடந்த, 60 ஆண்டுகளுக்கு முன், சீனாவுடன் நடந்த போரில், இந்தியாவுக்கு தோல்வி ஏற்பட்டது. அதற்கு முக்கிய காரணம், வடகிழக்கு பகுதியில், இராணுவத்திற்கு கட்டுமான வசதிகள் திருப்தியளிக்கும் வகையில் இல்லாததே. ஆனால், இப்போது நாம் வெகுவாக முன்னேற்றம் அடைந்துள்ளோம். இப்போது, நம நாட்டை பாதுகாக்கும் தகுதியை பெற்றுள்ளோம். குறிப்பாக படைபலம், பாதுகாப்புக்கான வசதிகள், கட்டுமானம் என, பல நிலைகளிலும் வேகமான முன்னேற்றத்தை எட்டியுள்ளோம்.

எல்லைப் பிரச்சினையில், சீனாவுடன் சுமுகமான நட்புறவைத் தொடர விரும்புகிறோம். இதற்காக, தொடர்ந்து பேசி வருகிறோம். இது திருப்தியளிக்கும் வகையில் உள்ளது. அதே சமயம், முப்படைக்குத் தேவையான பாதுகாப்பு கருவிகளை அளிப்பதிலும், கட்டுமான வசதிகளை விரிவுபடுத்துவதிலும், தீவிர கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. மின்னணு பாதுகாப்பில் பின் தீங்கியிருந்தாலும், இதில் தற்போது, விரைவாக முன்னேறி வருகிறோம். முப்படைகளில் ஹெலிகொப்டர் பயன்பாட்டை அதிகரித்து வருகிறோம். இதில் கடற்படைக்குப் போதுமான அளவில் ஹெலிகொப்டர்கள் இல்லை என்ற குறைபாடு இருந்தது. இதைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. என அவர் மேலும் தெரிவித்தார்.




# இந்தியா வரும் ஆங் சான் சூகி



மியான்மர் நாட்டின் ஜனநாயக தலைவர் ஆங் சான் சூகி, வீட்டுச் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் முதன்முறையாக அடுத்த மாதம் இந்தியா வருகிறார்.

கடந்த 2010ஆம் ஆண்டு சூகி வீட்டுச் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டதற்கு பின்னர் அமெரிக்கா, ஐரோப்பா உள்ளிட்ட நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டார்.

இந்நிலையில் அடுத்த மாதம் இந்தியா வரும் அவர், பிரதமர் மன்மோகன் சிங் உட்பட முக்கிய தலைவர்களைச் சந்திக்கிறார்.

மேலும் அடுத்த மாதம் 14ஆம் திகதி நாட்டின் முதல் பிரதமர் நேருவின் பிறந்த நாள் என்பதால் புதுடில்லியில் ஜவகர்லால் நேரு நினைவு சொற்பொழிவாற்ற உள்ளார்

# தமிழகத்தில் டெங்கு தொற்று இவ்வருடம் சடுதியாக அதிகரிப்பு



இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் இந்த ஆண்டு டெங்கு காய்ச்சலில் அதிகம் பேர் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், உயிரிழந்திருப்பதாகவும் மத்திய அரசின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

அதாவது இந்த ஆண்டில் இதுவரை தமிழ்நாட்டில் ஐயாயிரத்து முந்நூறுக்கும் அதிகமானவர்கள் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு அவர்களில் நாற்பதுக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்திருப்பதாக இந்திய அளவில் திரட்டப்பட்ட மத்திய அரசின் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன.

கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாட்டில் நிலவிய டெங்கு தாக்குதல்களுடன் ஒப்பிடும்போது இந்த வருடம் இதன் தாக்கம் இரண்டு மடங்கு அதிகரித்திருப்பதாகவும், உயிரிழப்புக்கள் நான்குமடங்கு அதிகரித்திருப்பதாகவும் அந்த புள்ளிவிபரம் கூறுகிறது.

மேலும் தென்னிந்தியாவின் பிற மாநிலங்களான கேரளா, ஆந்திரா மற்றும் கர்நாடகாவின் புள்ளிவிவரங்களுடன் ஒப்பிடும்போது கூட தமிழ்நாட்டில் தாக்கம் இரண்டு மடங்காகவும், உயிரிழப்புக்கள் நான்கு முதல் ஐந்து மடங்காக இருப்பதாகவும் இந்தப் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன.

# 10 ஆயிரம் "இன்வார்" ஏவுகணைகள் ரஷ்யாவிடம் கொள்வனவு



இந்திய இராணுவத்துக்கு ரஷ்யாவிடமிருந்து ஏவுகணைகளை வாங்க ரூபா 8000 கோடி ஒதுக்க மத்திய அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது. பாதுகாப்புக்கான மத்திய அமைச்சரவைக் கூட்டம் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் டில்லியில் நேற்று முன் தினம் நடைபெற்றது. இதில், இராணுவத்தின் டி-90 டாங்கிகளுக்காக ரஷ்யாவிடமிருந்து "இன்வார்" ஏவுகணைகளை வாங்க அனுமதி அளிக்கப்பட்டது.

இதன்படி ரஷ்ய நிறுவனங்களிடமிருந்து 10 ஆயிரம் "இன்வார்" ஏவுகண்ணக்ளை வாங்கவும், அதன்பின்னர் 15,000 இன்வார் ஏவு-கணைகளை இந்தியாவில் தயாரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. விமானப் படைக்காக இந்திய - ரஷ்ய கூட்டுத் தயாரிப்பில் உருவாகும் பிரம்மோஸ் சூப்பர்சொனிக் ஏவுகணைகளை வாங்க ரூபா 6,000 கோடி ஒதுக்க அனுமதி அளிக்கப்பட்டது.

ஆயுத தளபாடங்களுக்காக மொத்தம் ரூபா 8000 கோடிக்கும் அதிகமாக நிதி ஒதுக்க ஒப்புதல் அளிக்கப்பட்டிருப்பதாக மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.




ஒரிசா - புவனேஸ்வரில் துர்க்கா பூஜையையொட்டி, மணல் சிற்பி சுபல் மகாரானாவால் செதுக்கப்பட்ட துர்க்கை சிற்பத்தைக் காணலாம்.

# நடிகை திரிஷாவின் தந்தை மாரடைப்பால் உயிரிழந்தார்

(ஹைதராபாத்)

நடிகை திரிஷாவின் தந்தை கிருஷ்ணன் மாரடைப்பால் நேற்று முன்தினம் காலமானார்.

ஹைதராபாத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் முகாமையாளராக பணியாற்றி வந்த அவருக்கு வயது 68.

நடிகை திரிஷாவின் தாய் உமாவும் தந்தை கிருஷ்ணனும் நீண்ட காலமாக பிரிந்து வசிக்கின்றனர். ஆரம்பத்தில் சென்னையில் உள்ள ஹோட்டலில் முகாமையாளராக இருந்த கிருஷ்ணன், மகளின் இமேஜ் பாதிக்கும் என்பதற்காகவே ஹைதராபாத்துக்குப் போய் விட்டார்.

ஆழ்வார்பேட்டையில் தனது தாயுடன் தனியாக வசித்து வந்தார் திரிஷா.

திரிஷாவும் அவரது அம்மா உமாவும் எவ்வளவோ முறை அழைத்தும் கிருஷ்ணன்



இவர்களோடு வசிக்கவில்லை. தன் சொந்தக் காலில் நிற்க வேண்டும் என்று கூறி அவர் தனியே வசித்து வந்தாராம்.

தான் வேலை பார்க்கும் ஹைதராபாத் நட்சத்திர ஹோட்டலுக்கு திரிஷா வந்தால் கூட, அவரை தன் மகள் என்று காட்டிக் கொள்ள மாட்டாராம்.

இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் ஹைதராபாத்தில் அவருக்கு திடீரென்று மாரடைப்பு ஏற்படவே ஹோட்டல் ஊழியர்கள் அவரை அவசர அவசரமாக அருகிலுள்ள தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர்.

ஆனால் மருத்துவமனைக்குச் செல்லும் வழியிலேயே அவர் இறந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.


# பேஸ்புக் வலைத்தளத்தில் 6.50 கோடி இந்தியர்கள்

(ஹைதராபாத்)

"பேஸ்புக்" சமூக வலைதளத்தில் இணைந்த இந்தியர்களின் எண்ணிக்கை, 6.50 கோடியாக அதிகரித்துள்ளது. இது, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, 80 இலட்சமாக இருந்தது என "பேஸ்புக்" இந்தியா நிறுவனத்தின் தலைவர் கிரித்திகா ரெட்டி தெரிவித்தார்.இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது;

உலக அளவில் இணையத்தளம் பயன்படுத்துவதில் இந்தியாவின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க அளவில் உள்ளது. இந்தியாவில் அலைபேசி, கொம்ப்யூட்டர், லப் - டப் உள்ளிட்ட சாதனங்களின் பயன்பாடு அதிகரித்துள்ளது. இதனால், நகரம் மற்றும் கிராமப்புறங்களில், பேஸ்புக் வலைத்தளத்தைப் பயன்படுத்துவோர் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இந்தியாவில், இணையதளம் மூலம் மேற்கொள்ளப்படும் விளம்பர சந்தை ஆண்டுக்கு, 25 சதவீதம் என்ற அளவில் வளர்ச்சி கண்டு வருகிறது. நடப்பாண்டு, ஓகஸ்ட் மாதம் வரையிலுமாக இந்தியாவில் "பேஸ்புக்" பயன்படுத்துவோர் எண்ணிக்கை, 5 கோடி என்ற அளவில் இருந்தது. தற்போது, இந்த எண்ணிக்கை 6.50 கோடியாக அதிகரித்துள்ளது இவ்வாறு கிரித்திகா கூறினார்.

# பிரிட்டன் விமானப்படை வீரர்களின் உடல்கள் 70 ஆண்டுகளின்பின் நல்லடக்கம்



இரண்டாம் உலகப்போரின் போது உயிரிழந்த இங்கிலாந்து விமானப்படையினரின் சடலங்கள் 70 ஆண்டுகளின் பின்னர் அடையாளம் காணப்பட்ட நிலையில் இராணுவ மரியாதையுடன் நேற்று முன்தினம் அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

1945ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 23ஆம் திகதி, போர்க் கைதிகளை இறக்கி விடுவதற்காக இங்கிலாந்து விமானப் படையினர் எட்டுப்பேர், ரோயல் ஏர் போர்ஸ் விமானத்தில் கோகோஸ தீவில் இருந்து புறப்பட்டுச் சென றிருந்தனர்.

இவர்கள் சென்ற விமானம் மலேசிய எல்லையைக் கடந்த நிலையில் விமானம் பற்றிய தகவல் எதுவும் கிடைக்காமல் போனது.

இந்நிலையில் கடந்த 1991 ஆம் ஆண்டு மலேசியாவில் பழங்குடியினர் வசிக்கும் அடர்ந்த காட்டுப்பகுதியில் அந்த விமானத்தின் பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

2007ஆம் ஆண்டு அப்பகுதியில் மனித உடல்களின் எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டன. இருப்பினும் அவை, தற்போதே இங்கிலாந்து வீரர்களின் உடற்பாகங்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளன.

இதையடுத்து அந்த வீரர்களின் எஞ்சிய உடல் பாகங்களுக்கு குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் நேற்றுமுன்தினம் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

பின்னர் கோலாலம்பூர் புறநகர்ப் பகுதியில் உள்ள இராணுவ கல்லறைத் தோட்டத்தில் அவர்களின் உடற்பாகங்கள் இராணுவ மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டன.

# சிரியாவில் சுட்டு வீழ்த்தப்பட்ட இராணுவ ஹெலிகொப்டர்



(டமஸ்கஸ்)

சிரியாவில் வடமேற்கு பகுதியில் உள்ள இதலிப் என்ற இடத்தில் இராணுவ ஹெலிகொப்டர் ஒன்றை புரட்சிப் படையினர் சுட்டு வீழ்த்தினார்கள். 10 நாட்களுக்கு முன்பும் ஒரு இராணுவ ஹெலிகொப்டர் சுட்டு வீழ்த்தப்பட்டது. இப்போது 2ஆவது ஹெலிகொப்டர் சுட்டு வீழ்த தப்பட்டுள்ளது. ஹெலிகொப்டர் தீப்பிடித்து விழுவதை வீடியோ எடுத்து புரட்சிப் படையினர் வெளியிட்டுள்ளனர்.

இதற்கிடையே சிரியா தற்காலிக போர் நிறுத்தத்துக்கு தயாராக இருப்பதாக அறிவித்துள்ளது. இது தொடர்பாக அரசு செய்தி தொடர்பாளர் ஜிகாத் அல் மாக்திஸ்து கூறும்போது, எதிர்த் தரப்பினரும் முன்வந்தால் நாங்கள் தற்காலிக போர் நிறுத்தம் செய்ய தயாராக இருக்கிறோம். மேலும் புரட்சிப்படையினர் நிபந்தனை எதுவும் விதிக்காவிட்டால் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவும் தயாராக இருக்கிறோம் என்றார்.

# ஐ.நா.பாதுகாப்புச் சபையில் 5 நாடுகள் புதிதாக இணைப்பு

ஐ.நா சபையின் பாதுகாப்பு கவுன்சிலுக்கான புதிய நிரந்தரமற்ற உறுப்பினர்களாக 5 புதிய நாடுகள் சேர்க்கப்பட்டுள்ளன..

ருவாண்டா, அவுஸ்ரேலியா, ஆர்ஜென்ரீனா, தென்கொரியா மற்றும் லக்ஸம்பேர்க் ஆகிய 5 நாடுகளே நிரந்தரமற்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இவை 2013ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் திகதி முதல் 2 ஆண்டுகளுக்கு இந்தப் பதவியில் நீடிக்கும்.

இப்போது நிரந்தரமற்ற உறுப்பு நாடுகளாக உள்ள இந்தியா, கொலம்பியா, ஜேர்மனி, போத்துக்கல் மற்றும் தென் ஆபிரிக்கா ஆகிய 5 நாடுகளின் பதவிக்காலம் வரும் டிசம்பர் மாதத்துடன் முடிவடைவதை ஒட்டி தேர்தல் நடைபெற்றது.


நிரந்தரமற்ற உறுப்பு நாடுகளுக்கான தேர்தலில், ஐ.நா பொதுச் சபையில் மொத்தம் உள்ள 193 உறுப்பினர்களில் 129 வாக்குகள் அல்லது மூன்றில் 2 பங்கு வாக்குகளைப் பெற வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.




பாதுகாப்பு கவுன்சிலில் மொத்தம் 10 நிரந்தரமற்ற உறுப்பினர்களும், 5 நிரந்தர உறுப்பினர்களும் உள்ளனர்.

அஜர்பெய்ஜான், கௌதமாலா, மொராக்கோ, பாகிஸ்தான் மற்றும் டோகோ ஆகிய மற்ற நிரந்தரமற்ற உறுப்பு நாடுகளின் பதவிக்காலம் 2013ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்துடன் முடிகிறது.

# பேஸ்புக் மூலம் விற்பனையாகும் அதிகமாக சுரக்கும் தாய்ப்பால்



(லண்டன்)

அமெரிக்க மற்றும் பிரிட்டனைச் சேர்ந்த பெண்கள் சமூக வலைத் தளங்கள் மூலம் தாய்ப்பால் விற்பனை செய்து வருகின்றனர். பிறந்த குழந்தைக்கு தாய்ப்பால் அவசியம் என வைத்தியர்கள் கூறுவதால், இதன் அவசியத்தை, இளம் தாய்மார்கள் உணர்ந்துள்ளனர். ஆனால், சிலருக்கு போதிய பால் சுரக்காத காரணத்தால், பால்மாவைக் கலந்து குழந்தைக்கு புகட்டுகின்றனர். அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளில் உள்ள பெண்கள், அதிகப்படியாக சுரக்கும் பாலை, "பேஸ் புக்" போன்ற சமூக வலைத்தளங்களில் அறிவிப்பு செய்து விற்கின்றனர். தாய்ப்பால் பற்றாக்குறையாக உள்ள பெண்களும், இந்த வாய்ப்பை பயன்படுத்தி பலன் பெறுகின்றனர்.

இந்த நடைமுறைக்கு, வரவேற்பு அதிகரித்துள்ளதால், தாய்ப்பால் சேகரிப்பு மையங்கள் உருவாகியுள்ளன. பாலைப் பெற்று அதைப் பதப்படுத்தி தேவைப்பட்டோரிடம் விற்கப்படுகிறது. எங்களது பால் சுத்தமானது என விளம்பரம் செய்யப்பட்டு ஒரு அவுன்ஸ் (30 மி.லி.) 80 ரூபா முதல் 120 ரூபா வரை விற்கப்படுகிறது.

இதேவேளை,முன்பின் தெரியாத பெண் கள் மூலம் பெறப்படும் தாய்ப்பால், குழந்தைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என ஜேர்மன் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

வைத்தியர்கள் மேலும் கூறியதாவது; தாய்ப்பாலை விற்கும் பெண் எச்.ஐ.வி. போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டு, வீரியமான மருந்துகளை உட்கொண்டிருக்கலாம். இது போன்ற பெண்களிடமிருந்து பெறப்படும் பால், குழந்தைக்கு எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தலாம். அது மட்டுமல்லாது, ஆறு மாத குழந்தைக்கும், ஒரு வயது குழந்தைக்கும் தேவையான சத்து மாறுபடும். எனவே, தாய்ப்பாலை மற்றவர் களிடமிருந்து பெறுவது ஆபத்தானது. தாய்ப்பால் சுரக்காத பெண்கள், பால்மாவையே குழந்தைக்கு கொடுக்கலாம். இது சுகாதாரமானது. இவ்வாறு வைத்தியர்கள் கூறியுள்ளனர்.



நான்கு நாள் அரசுமுறைப் பயணமாக கியூபா நாட்டிற்கு வந்த கயானா ஜனாதிபதி டொனால்ட் ரமோசருக்கு (இடமிருந்து 2ஆவது) ஹவானாவில் வரவேற்பு அளிக்கப்பட்டதனைக் காணலாம்.

# 36 மணிநேர முகமாற்று சிகிச்சை; சாதனை படைத்த மருத்துவர்கள்



துப்பாக்கிச் சூட்டினால் உருக்குலைந்து போன வாலிபரின் முகம், 36 மணி நேர முகமாற்று அறுவைச்சிகிச்சைக்கு பின் தற்போது நல்ல நிலையில் செயற்படுகிறது.

அமெரிக்காவைச் சேர்ந்தவர் ரிச்சர்ட் லீ நோரிஸ்(வயது-37). மன வருத்தத்தினால் 1997ஆம் ஆண்டு துப்பாக்கியால் முகத்தில் சுட்டுக் கொண்டார்.

இதில் அவரது முகம் சிதைந்தது, தாடை உருக்குலைந்து போனது, மூக்கும், நாக்கும் காணாமற் போயின.

உயிருக்கு ஆபத்தான நிலையில், மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நோரிஸ், தீவிர சிகிச்சையால் உயிர் பிழைத்தார்.

ஆனால் முகம் வடிவம் இல்லாமல் இருந்ததால் கோரமாக காட்சியளித்தது. இதனால் இவர் முகமூடி அணிந்துதான் வெளியே நடமாடினார். கடந்த மார்ச் மாதம் விர்ஜீனியா மாகாணத்தில் நோரிசுக்கு 36 மணி நேரம் 100 மருத்துவர்கள் கொண்ட குழு இணைந்து முகமாற்று அறுவைச் சிகிச்சை செய்தது.

மற்றவர்களிடமிருந்து பெறப்பட்ட தாடை, மூக்கு, நாக்கு ஆகியவை இவருக்கு பொருத்தப்பட்டன. கழுத்துப் பகுதியிலிருந்து திசுக்கள் எடுத்து முகத்தில் வைக்கப்பட்டன.

இதன் மூலம் தற்போது இவரது மூக்கு வாசனையை உணர ஆரம்பித்துள்ளது. நாக்கு சுவையை உணர்கிறது. பேச்சு மட்டும் முழுமையாக வரவில்லை. மார்ச் மாதம் முகமாற்று அறுவைச் சிகிச்சை முடிந்தாலும், இந்த மாதம் வரை அவர் தொடர் சிகிச்சைகளை மேற்கொண்டு வந்தார். இரண்டு நாட்களுக்கு முன் தான் இவருக்கான தொடர் சிகிச்சை முடிவுக்கு வந்தது. தற்போது அவர் முகமூடி இல்லாமல் அழகான நபராக வெளியே நடமாடும் அளவுக்கு தேறியுள்ளார்.

# ஒபாமா மகள்கள் கற்கும் பாடசாலைக்கு மிரட்டல்

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா- மிச்செலி தம்பதியின் மகள்கள் மாலியா (வயது-14), சாஷா (வயது-11). இவர்கள் தலைநகர் வோஷிஙடனில் உள்ள 'சித்வெல் பிரண்ட்ஸ்' என்ற தனியார் பாடசாலையில் கல்விகற்கின்றனர். இந்த நிலையில், இவர்கள் படிக்கும் பள்ளிக்கு நேற்று முன்தினம் தொலைபேசியில் மிரட்டல் வந்தது. இதனால் அங்கு பதட்டமும் பரபரப்பும் ஏற்பட்டது.

இதையடுத்து, பாடசாலையில் இருந்து மாணவ,மாணவிகள் அனைவரும் வெளியேற்றப்பட்டனர். பின்னர் அவர்களது புத்தகப்பைகள் அனைத்தும் சோதனையிடப்பட்டன. ஆனால், ஆபத்தான பொருள் எதுவும் அகப்படவில்லை.

இதுகுறித்து பாடசாலை இணையத்தளத்தில் தகவல் வெளியிடப்பட்டது. ஆனால் தொலைபேசியில் எந்தவித மிரட்டல் வந்தது என்ற தகவல் தெரிவிக்கப்படவில்லை. வெள்ளை மாளிகையிலும் அது குறித்து எதுவும் வெளியிடப்படவில்லை. அமெரிக்காவில் ஜனாதிபதி தேர்தல் வருகிற நவம்பர் 6ஆம் திகதி நடக்கிறது. அதில் ஒபாமா மீண்டும் போட்டியிடுகிறார். போட்டி கடுமையாக உள்ள இந்த நிலையில் ஒபாமா மகள்கள் படிக்கும் பாடசாலைக்கு மிரட்டல் வந்த விவகாரம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



# பனைசார் தொழில்துறைகளை நவீன மயமாக்க செயற்றிட்டம்

## அமைச்சர் டக்ளஸ் தலைமையில் மாநாடு



பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலுக்கமைய வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பனை, தென்னை சார்ந்த கைத்தொழில் துறையை மேம்படுத்தும் பொருட்டு முன்னெடுக்கப்பட வேண்டிய செயற்றிட்டங்கள் தொடர்பிலான விசேட கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

கொழும்பு மருதானையில் அமைந்துள்ள அமைச்சில் மேற்படி விடயம் தொடர்பான இக்கலந்துரையாடல் அமைச்சர் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு பகுதிகளில் பனை, தென்னை சார்ந்த கைத்தொழில் துறைகளை நவீனப்படுத்தி மென்மேலும் மேம்படுத்தும் பொருட்டு, முன்னெடுக்கப்பட வேண்டிய செயற்றிட்டங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

குறிப்பாக துறைசார்ந்தவர்களுக்கு டிப்ளோமா பயிற்சி நெறியை கைத்தொழில் துறையை வளர்த்தெடுக்கும் நோக்கில ஆராயப்பட்ட அதேவேளை, பயிற்சிப் பட்டறைகள், பயிற்சித் திட்டங்களை வழங்குவதுனூடாக பனை, தென்னை சார்ந்த சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்களை நவீன தொழில்நுட்பத்துடன் மேம்படுத்துவது தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டது.

இவ்வாறான செயற்றிட்டங்களை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழான பனை அபிவிருத்திச் சபையுடன் இணைந்து தோட்ட முகாமைத்துவ தேசிய நிறுவனமும் முன்னெடுக்கவுள்ள நிலையில் இதனூடாக வடக்கு, கிழக்குப் பகுதிகளில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட துறைசார்ந்தவர்களது வாழ்க்கைத் தரம் மேம்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் அமைச்சினூடாக கிடைக்கப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே திராட்சைப் பழம் சார்ந்த உற்பத்திகளை நவீன தொழில்நுட்பத்துடன் மென்மேலும் மேம்படுத்துவதற்கு கித்துள் சார்ந்த உற்பத்திகளை நவீனப்படுத்தி அவற்றினது சந்தை வாய்ப்பு, இதனூடாக துறைசார்ந்த வாழ்வாதார மேம்பாடு தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

இதன்போது அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி அமைச்சரின் ஆலோசகர் திருமதி. வி.ஜெகராஜசிங்கம், பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் மற்றும் தோட்ட முகாமைத்துவ தேசிய நிறுவனத்தின் தலைவர் ரஞ்சித் சமரசிங்க, பணிப்பாளர் கபில வன்ச உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

### யாழில்...

வழங்கிவைத்தனர். இதன்போது கருத்துத் தெரிவித்த ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கமல் பாதிக்கப்பட்டுள்ள மககளுக்கு இவ்வாறான உதவிகளைவிட மேலும் பல உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார். இதன்போது ஈ.பி.டி.பி.யின் மானிப்பாய் பிரதேச அமைப்பாளர் ஜீவா உடனிருந்தார்.

### ஜெனிவாவில்...

விளக்கம் கொண்டிராத பல்வேறு ஊடகங்கள், மனித உரிமைகள் ஆணைக்குழு அரசாங்கப் பிரதிநிதிகளை வரவழைத்திருப்பதாகவும், இதனால் இலங்கை அரசாங்கம் நெருக்கடிக்கு முகம கொடுக்கவிருப்பதாகவும் தவறான செய்திகளை பிரசுரித்து வருகின்றன. இவ்வாறான செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை எனவும் செயலாளர் அமு னுகம மறுப்புத் தெரிவித்தார்.

• யு.பி.ஆர். கூட்டத்தொடர் என்பது ஐ.நா. உறுப்புரிமை கொண்டுள்ள நாடுகளுக்கு ஒரு பரீட்சை போன்றதென்றே கூறல்லாம். இலங்கை இரண்டாவது தடவையாகவே எதிர்வரும் முதலாம் திகதி இக்கூட்டத் தொடரில் கலந்துகொள்கிறது.

முதல் கூட்டத்தொடரின் போதும் ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட சிபாரிசுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள முறை, இரண்டாவது கூட்டத்தொடருக்கென அரசாங்கத்தினால் முன்கூட்டியே சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையிலுள்ள குறை நிறைகள் ஆகியன தொடர்பில் இக்கூட்டத் தொடரின் போது இலங்கை மீது கேள்விகள் தொடுக்கப்படும். அதற்கு விளக்கமளிக்கக் கூடிய வகையில் எமது முக்கிய தரப்புக்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் கூட்டத்தொடருக்கு தயாராகி வருகின்றனர்.

நீதியமைச்சின் செயலாளர் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம், மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றின் பிரதிநிதிகள் அடங்கிய குழு இக்கூட்டத் தொடரில் தங்களது துறைசார்பில் விளக்கமளிப்பர். அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கம் நோக்கிய எமது பாதையில் ஏதேனும் திருத்தங்கள் செய்ய வேண்டியிருப்பின் இது எமக்கு சிறந்ததொரு வாய்ப்பாக அமையுமெனவும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கூறினார்.

மேலும் இக்கூட்டத் தொடர் இலங்கை அரசாங்கத்திற்கு எந்த வகையிலும் பாதகமாக அமையாதென சுட்டிக்காட்டிய அவர், தற்போது இலங்கையினால் மனித உரிமைகள் ஆணைக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையில் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டுள்ள விதம் ஆகியன தெளிவுபடுத்தப் பட்டுள்ளமையினால் இக்கூட்டத் தொடரில் பாரிய சிக்கல்கள் எதுவும் எழுவதற்கு வாய்ப்பில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

### யாழ் - சென்னை...

போக்குவரத்து சேவை தடைபட்டிருக்கிறது. தற்போது யுத்த நெருக்கடிகள் நீங்கி அமைதி நிலவுவதனால் இந்தப் போக்குவரத்து வசதியை மீண்டும் ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை எழுந்திருக்கின்றது.

அதேவேளை வருகின்ற ஜனவரி மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள சர்வதேச வர்த்தகக் கண்காட்சிக்கு இந்தியக் கைத்தொழில், உற்பத்திகள் மற்றும் வர்த்தகத்துறை சார்ந்தவர்களை அழைப்பது தொடர்பில் இந்தியத் தூதரக துணை அதிகாரி மகாலிங்கம் தலைமையிலான அதிகாரிகளுக்கும், யாழ் வர்த்தகர்களுக்கும் இடையில் இடம்பெற்ற ஒரு கலந்துரையாடலின் போதே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

இந்தக் கோரிக்கை தொடர்பில் பரிசீலனை செய்யப்படும் என்று இலங்கைக்கான இந்தியத் துணைத் தூதரக அதிகாரி மகாலிங்கம் தெரிவித்ததாக இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட யாழ். வணிகர் கழகத் தலைவர் ரட்ணலிங்கம ஜெயசேகரன் தெரிவித்தார்.

காங்கேசன்துறை துறைமுகம் இந்தியாவின் பொறுப்பில் ஆறுகட்ட வேலைத்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு வருவதாகவும், இதில் முதல் மூன்றுகட்ட வேலைகளில் துறைமுகப் பகுதியில் யுத்த மோதல்களின்போது மூழ்கடிக்கப்பட்ட கப்பல்களைத் தாங்கள் மீட்டிருப்பதாகவும், மிகுதி வேலைகள் 2014 ஆம் ஆண்டில் முற்றுப்பெறும் என்றும், இந்தக் கலந்துரையாடலின்போது இந்தியத் தூதரக அதிகாரிகள் தம்மிடம் தெரிவித்திருப்பதாகவும் ஜெயசேகரன் கூறினார்.

இந்த வழியாக சிறியரக கப்பல்கள் தற்போது போக்குவரத்து செய்யமுடியும் என அவர்கள் சுட்டிக்காட்டியதாகவும் ஜெயசேகரன் குறிப்பிட்டார்.

இந்த விடயம் குறித்து ஜனவரி மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள வர்த்தகக் கண்காட்சிக்கு வருகை தரவுள்ள இலங்கை அமைச்சர்கள் மற்றும் உயரதிகாரிகளிடம் தமிழகத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான கடல் மற்றும் வான்வழிப் போக்குவரத்து தொடர்பாக கோரிக்கை முன்வைக்கவுள்ளதாவும் யாழ். வணிகர் கழகத் தலைவர் ஜெயசேகரன் தெரிவித்தார்.

# ஓமந்தையில் விபத்து டிப்பர் சாரதி கைது

(வவுனியா நிருபர்)

வவுனியா ஓமந்தை பொலிஸ் நிலையத்திற்கு அண்மையில் இடம்பெற்ற விபத்தொன்றில் வான் ஒன்றின் சாரதி காயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஓமந்தை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று மதியம் 1.45 மணியளவில் இடம்பெற்ற இவ்விபத்தில் முல்லைத்தீவில் இருந்து கொழும்பு நோக்கி மீன் ஏற்றிச்சென்ற வான் ஒன்றுடன் டிப்பர் வாகனம் மோதியதில் வான் சாரதி படுகாயமடைந்திருந்தார். விபத்து இடம்பெற்ற இடத்தில் விசாரணைகளை நடத்திய ஓமந்தைப் பொலிஸார் டிப்பர் சாரதியை கைது செய்ததுடன் டிப்பர் வாகனத்தையும் பொலிஸ் நிலையத்திற்கு கொண்ட சென்றனர். (160)

# கல்விச் செயலமர்வு

வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் சாதாரணதர பரீட்சையின் பெறுபேற்றினை அதிகரிக்கும் முகமாக பாடசாலை மட்டத்தில் செயலமர்வுகள் இடம்பெற்று வருகின்றது. வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜாவின் வழிநடத்தில் இடமபெற்று வரும் இச் செயலமர்வுகளில் அனைத்துப் பாடங்களுக்குமான செயலமர்வுகள் இடம்பெற்று வருகின்றது.

இதேவேளை நகர்ப்புற பாடசாலைகளில் ஆங்கில மொழி மூலம் கற்கும் மாணவர்களுக்கான அனைத்து பாட செயலமர்வுகளும் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதன்போது பாடநெறி வளவாளர்களாக வவுனியா தெற்கு கல்வி வயலத்திற்குட்பட்ட ஆசிரியர்கள் செயற்பட்டு வருவதாகவும் அவ்வாறான செயலமர்வுகள் மூலமான பெறுபேறுகளை கணகாணித்தபோது சாதாரண தர பரீட்சையில் அதிகரித்திருப்பதாக வலயக் கல்விப் பணிமனையின் ஆசிரிய ஆலோசகரொருவர் தெரிவித்தார்.

# நயினாதீவில் விசேட மருத்துவசேவை தீவக மக்களுக்கு வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

நயினாதீவில் நடைபெற்று வரும் விசேட வைத்திய சேவையில், எழுவைதீவு, அனலைதீவு மக்களும் கலந்துகொண்டு பயனபெற்றுக் கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

வைத்தியர் சங்கத்தின் ஏற்பாட்டில் சுழற்சி முறையில் வைத்தியர்கள் திங்கள் மற்றும் வியாழக்கிழமைகளில் நயினாதீவிற்குச் சென்று வைத்திய சேவையாற்றி வருகின்றனர். இச்சேவையில் எழுவைதீவு, அனலைதீவு மக்களும் இணைந்துகொண்டு வைத்திய சேவையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இவ்விரு நாட்களும் காலை முதல் மாலை வரை வைத்திய சேவை நடைபெற்று வருவதால், நோயாளர்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்கு வந்து போகும் செலவு, காலவிரயம் என்பன தவிர்க்கப்படுவதாகவும் யாழ். வைத்திய சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

வைத்தியர் பற்றாக்குறை காரணமாக வாரத்தில் இரண்டு நாட்கள் இச்சேவை நடைபெற்று வருவதாகவும் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் கேதீஸ்வரனால் வைத்திய சேவைக்கான போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (இ)

# நுளம்பு பெருக உதவினால் அபராதம் இனி ஐயாயிரம் ரூபா

(யாழ்ப்பாணம்)

நுளம்பு இன்விருத்தி சட்டத்தின் படி நுளம்பு பரவத்துணை போகும் நபர்களுக்கு விதிக்கப்படும் அபராதம் 5000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இது குறித்து அமைச்சரவை பத்திரத்தை சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன சமர்பித்ததோடு அதற்கு அமைச்சரவையும் அனுமதி அளித்துள்ளது. இதன்படி நுளம்பு பெருகுவதை தடுக்காமல் இருக்கும் நபர்களுக்கு அபராதம் விதிக்கப்படவுள்ளது.

அதேவேளை நாட்டில் நிலவும் மழையுடன் கூடிய காலநிலையால் மேலும் டெங்கு நுளம்பு பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதென தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது. இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 34,396 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். டெங்கு நோயால் பாதிக்கப்பட்டு நூற்றுக்கு அதிகமானோர் உயிரிழந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### குறிகாட்டுவான்...

தெரிவிக்கப்பட்டுள்ளது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வட மாகாண ஆளுநர் ஆகியோரின் முயற்சியின் பயனாகப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் இந்நடவடி க்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இச்சேவை ஆரம்பிக்கப்படுவதை அடுத்து இதற்கேற்றவாறு நயினாதீவுப் பாலம் அமைக்கும் நடவடிக்கைகளும் இடம்பெறுவதாகவும் இச்சேவை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் பெரிய வாகனங்கள் பொருட்களை ஏற்றிக்கொண்டு இதனூடாக இலகுவாகச் செல்ல முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இச்சேவை குறித்து நயினாதீவு வாழ் மக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.(175)

# பரிந்துரைகளை அமுலாக்கினால் புலம்பெயர்ந்தோர் உதவி கிடைக்கும்

## பிரித்தானியத் தூதுவர் கூறுகிறார்



கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு அறிக்கையின் பரிந்துரைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது போல் தேசிய செயற்திட்டத்தை முழுமையாகச் செயற்படுத்தினால் புலம்பெயர் தமிழர்களிட்டிருந்து பெறக்கூடிய ஒத்துழைப்புக்களை பெற்றுக் கொள்ள முடியும் என பிரித்தானியா தெரிவித்துள்ளது.

'உயர்ஸ்தானிகரிடம் கேளுங்கள்' என்ற வேலைத் திட்டத்தின் 12 ஆவது தொடர் நிகழ்வில் நல்லிணக்க ஆணைக்குழுவின் தேசிய செயற்திட்டம் குறித்த பிரித்தானியாவின் நிலைப்பாடு என்ன எனக் கேள்வி எழுப்பப்பட்டது.

இக்கேள்விக்கு பதிலளித்துள்ள இலங்கை மற்றும் மாலைதீவுக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜோன் ரெங்கின் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் தேசிய செயற்திட்டம் ஒரு சிறந்த ஏற்பாடு எனவும் பொது மக்கள் மற்றும் பொலிஸாருக்கு இடையில் நல்லுறவை ஏற்படுத்தவும் வலுப்படுத்தவும் அது பெரிதும் உதவுமெனவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன் இலங்கையின் அபிவிருத்தியை துரிதப்படுத்தவும் வலுப்படுத்தவும் தேசிய செயற்திட்டம் உதவும் எனவும் இதனை செயற்படுத்துவதன் மூலம் புலம்பெயர் மக்களின் உதவிகளைப் பெற முடியும் எனவும் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அமைச்சரின் வாகனம் மோதி 2 மாணவர்கள் படுகாயம்

(கொழும்பு)

வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெனாண்டோவின் பாதுகாப்பு பிரிவு வாகனம் மோதி மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் படுகாயமடைந்துள்ளனர்.


இந்த விபத்து நேற்று அதிகாலை 05.30 மணியளவில் பன்னிப்பிட்டியவிலுள்ள மொரகெட்டிய சந்தியில் இடம்பெற்றுள்ளது.

பன்னிப்பிட்டிய பகுதியில் அமைந்துள்ள தர்மபால வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர்களே விபத்தில் படுகாயமடைந்தவர்களாவர்.

காயமடைந்த மாணவர்கள் களுபோவில வைத்தியசாலையிலும் ஸ்ரீஜயவர்தனபுர வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விசேட அதிரடிப்படைப் பிரிவின் ஜீப் ஒன்றே மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது. ஜீப் வண்டியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

# நித்தியானந்தா நீக்கம்; மதுரை ஆதீனம் அதிரடி



மதுரை ஆதீனத்தின் இளைய பீடாதிபதியாக சில மாதங்களுக்கு முன்பு நியமிக்கப்பட்ட சர்ச்சைக்குரிய நித்தியானந்தாவை, அந்தப் பதவியில் இருந்து திடீரென நீக்கியிருக்கிறார் மதுரை ஆதீனகர்த்தர் அருணகிரிநாதர்.

பொதுமக்கள், பக்தர்கள் இந்த நியமனத்தை விரும்பவில்லை. அரசு விரும்பவில்லை. நீதிமன்றமும் விரும்பவில்லை. அவரே இராஜினாமா செய்ய இருப்பதாக அறிவித்தது. வழக்கு நீதிமன்றத்தில் இருப்பதால் வேண்டாம் என்று வழக்கறிஞர் கூறிவிட்டார். அதனால், வேறுவழியின்றி அவன்ர நீக்கினேன் என அருணகிரிநாதர் தெரிவித்தார்.

நித்தியானந்தாவை நீக்குமாறு எந்த அழுத்தமும் வரவில்லை. தான் சுயமாகத்தான் இந்த முடிவை எடுத்ததாகவும், இந்த முடிவு குறித்து நித்தியானந்தாவுக்குத் தெரியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பிக்குகளின் பேரணியில் சென்ற 15 ஐ.தே.க.வினர் இடைநிறுத்தம்

ஐக்கிய தேசியக் கட்சியின் பதினைந்து உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களின் உறுப்புரிமையும் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

தற்காலிக அடிப்படையில் குறித்த பதினைந்து உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் உறுப்புரிமையும் இடைநிறுத்தப்படுவதாக கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். ஐக்கிய பிக்குகள் முன்னணியால் நடத்தப்பட்ட பேரணியில் கலந்து கொண்ட காரணத்திற்காக குறித்த உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களின் உறுப்புரிமை ரத்து செய்யப்பட்டுள்ளது.

கட்சியின் தடைகளை மீறி குறித்த உறுப்பினர்கள் பேரணியில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதற்கு முன்னர் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களும், இரண்டு மாகாணசபை உறுப்பினர்களும் கட்சி உறுப்புரிமையிலிருந்து இடைநீக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ம்ண்டபம் முகாமில் இலங்கையர் போராட்டம்

இராமேஸ்வரம் மண்டபம் அகதிகள் முகாமில் 32 நாட்களாக இருட்டறையில் அடைக்கப்பட்ட 65 தமிழர்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை உண்ணாவிரதப் போராட்டத்தை மேற் கொண்டனர்.

முகாமில் இருந்து கடந்த மாதம் வெளியேறி படகில் நாகப்பட்டினம் கரை நோக்கிச் சென்ற 3 பெண்கள், ஆண் குழந்தை உள்ளிட்ட 65 பேரை இந்திய கடலோரப் பாதுகாப்பு பிரிவு பொலிஸார் கைது செய்தனர்.

பின்னர், அவர்கள் ராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் அகதிகள் முகாமில் உள்ள சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டு கியூ பிரிவுப் பொலிஸார் விசாரணை நடத்தினர்.

தொடர்ந்து 32 நாட்களாக இருட்டறையில் அடைத்து கியூ பிரிவு பொலிஸார் விசாரணை நடத்துவதால் எங்களை இலங்கைக்கு திருப்பி அனுப்பிவிடுங்கள் என்று கோரி சிறப்பு முகாமுக்குள் உண்ணாவிரதம் இருந்தனர்.

இதனையடுத்து முகாம் தனித்துணை ஆட்சியர் துரை தலைமையில் அதிகாரிகள் பேச்சு நடத்தினர். இறுதியில் அவர்களது கோரிக்கையை அரசின் கவனத்துக்குக் கொண்டு செல்வதாக துணை ஆட்சியர் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து அவர்கள் உண்ணாவிரதத்தை கைவிட்டனர்.

# கிணறு தோண்டினால் கட்டணம் செலுத்த வேண்டும்

## புதிய விதிமுறை விரைவில்

(கொழும்பு)

சாதாரண கிணறுகள் அல்லது குழாய்க் கிணறுகளை தோண்டுவோர் ஆண்டுக்கான அனுமதிக் கட்டணமாக நீர்வள சபைக்கு 7,500 ரூபாவிலிருந்து 15,000 ரூபாவரை செலுத்த வேண்டிவரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அங்கீகாரத்தை பெறுவதற்கு அமைச்சரவை பத்திரம் ஒன்று விரைவில் சமர்ப்பிக்கப்படும் என நீர்வளசபையின் தலைவர் பந்துல முனசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள நீர்வளசபை சட்டத்திற்கு திருத்தங்கள் பல கொண்டுவரப்படவுள்ளன. இதன்படி 12 அடிக்கு கூடிய விட்டமுள்ள கிணறு தோண்டுவதற்கு முன் அனுமதி பெற வேண்டியிருக்கும். குடிநீரை போத்தலில் அடைக்கும் நிறுவனங்கள் அவை பயன்படுத்தும் நீரின் அளவுக்கு ஏற்ப நீர்வள சபைக்கு காப்புரிமை பணம் செலுத்தவேண்டும்.

குழாய்க்கிணறு அமைக்கும் நிறுவனங்கள் பதிவுக் கட்டணமாக 15 ஆயிரம் ரூபாவும் அதை ஆண்டுதோறும் புதுப்பிப்பதற்காக 10 ஆயிரம் ரூபாவும் கட்டவேண்டும். ஆறுகள், குளங்கள், அருவிகள், வாய்க்கால்கள், நிலவடி நீர் என்பவற்றை மாசடையாது பாதுகாப்பதற்கு கடுமையான சட்டங்கள் கொண்டுவரப்படும். அடுத்த 40, 50 வருடங்களில் சுத்தமான நீர் மிகவும் பெறுமதி வாய்ந்ததாகவும் அருமையானதாகவும் ஆகிவிடும். காலம் கடக்கும் முன் எதிர்கால சந்ததிக்காக இதைப் பாதுகாத்து வைத்திருப்பது இப்போதைய தலைமுறையின் பொறுப்பாகும் என நீர்வள சபையின் தலைவர் பந்துல முனசிங்க கூறினார்.

## ஓமந்தை-மாங்குளம் வரை புகையிரதப் பாதை அமைப்பு

(வடமராட்சி)

ஓமந்தையில் இருந்து மாங்குளம் வரை புகையிரதப்பாதை அமைக்கும் பணிகள் தற்போது துரிதகதியில் நடைபெற்று வருகின்றது.

புகையிரதப் பாதைக்கான மேடை அமைத்து கற்கள் பரவி புனரமைப்புப் பணிகள் இடம் பெறுவதுடன், இதற்கு கனரக வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இப்பாதைக்கான தண்டவாளங்கள், கற்கள் மற்றும் இதர பொருட்கள் முகமாலை வரை வந்து சேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(100)

# மரண அறிவித்தல்

## கறுவல் ஆறுமுகம்



உடுவிலைப் பிறப்பிடமாகவும், பத்தானை அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கறுவல் ஆறுமுகம் நேற்றுக் காலமானார்.

இவர் பாக்கியத்தின் அன்புக் கணவரும், தவயோகராணி, பங்கயமலர், இரவீந்திரன் (நோர்வே), ரமேஸ் (பிரான்ஸ்) ஜெயேந்திரன் (அளவெட்டி-மல்லாகம், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்), கஜேந்திரன் (சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர்), சசிகலா ஆகியோரின் தந்தையும் பாலசிங்கம், நவரத்தினம், வியேந்தினி (நோர்வே), வசந்தராணி (பிரான்ஸ்), தாட்சாயினி, இந்திராணி, இ.யசோதரன் (துணை ஆசிரியர், தினமுரசு) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

பத்தானை,
அளவெட்டி.

தகவல் :
குடும்பத்தினர்.

(இ)

# கண்ணீர் அஞ்சலி



'தினமுரசு' நாளிதழின் துணை ஆசிரியரான இ.யசோதரனின் அன்பு மாமனாரான

## கறுவல் ஆறுமுகம்

நேற்றுக் காலமானார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- தினமுரசு குடும்பம்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஒக்ரோபர் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.